

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

*திருவள்ளுவராண்டு 2050*

*மலர் - 12 இதழ் - 4 & 5 - ஜுலை - ஆகஸ்டு - 2020*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*

*தி.ரத்தினசபாபதி*

*அ.கணேசன்*

*அ.கிருஷ்ணமூர்த்தி*

இதழ் வடிவமைப்பு

*ஞா. சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்

பதிவு எண் : 21/2005/ 11/2/2005

16 (142), ஜானி ஜான்கான் ரோடு,

இராயப்பேட்டை, சென்னை - 600 014

ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in

இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00

மாணவர்களுக்கு ₹ 300.00

ஆயுள் சந்தா ₹ 3000.00

அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*

**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**

*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........................................ 04

சி.சுப்பிரமணியத்தின்
தமிழ் பயிற்று மொழித் திட்டம்
கை நழுவிப் போன வரலாறு
சு.நரேந்திரன்........................................ 07

பாரதி ஆய்வுச்சுடர் அணைந்தது
பா. ஆனந்தகுமார்........................................ 11

செ.வை.சண்முகத்தின்
'குயில் பாட்டுத் திறன்'
கா.செல்லப்பன்........................................ 13

கோவை ஞானியின்
மெய்யியல் பார்வை
இரா. அறவேந்தன்........................................ 17

ஞானசவுந்தரி கதை
அம்மானை திரைப்படம்
தோல் பாவைக் கூத்து நாடகம்
அ.கா.பெருமாள்........................................ 20

மக்கள் கலைஞர் தோழர் கலைமாமணி
பொன். கைலாசமூர்த்தி
நா. இராமச்சந்திரன்........................................ 26

காகிதங்களை ஆயுதங்களாக்கிய
வரலாற்றுத் தூரிகை
கண.குறிஞ்சி........................................ 29

பழந்தமிழரின் பயிர்ப்பாதுகாப்பு முறைகள்
அழியா எழுத்து: சாயாவனம் கந்தசாமி
முனைவர் ந. பெரியசாமி........................................ 33

அழியா எழுத்து: சாயாவனம் கந்தசாமி
முனைவர் இரா.காமராசு........................................ 47

கேரளாவில் தமிழ்ப் பேசும்
மலைப்புலையர் இனவரைவியல்
முனைவர் ஆ.கார்த்திகேயன்........................................ 51

மன்னை மு.அம்பிகாபதி
நிகழ்காலத்தின் பொருத்தப்பாடு...
அமுதாபாரதி........................................ 59

இப்படியும் பெயர் வைக்கலாமோ?
முனைவர்.இரா. கற்பகம்........................................ 61

பொதுச் சிந்தனையாளர்கள்
தயாராக வேண்டும்
க.பழனித்துரை........................................ 65

உதயசங்கரின் நினைவுகளில்
ஒரு கை நீரள்ளி...
மயிலம் இளமுருகு........................................ 70

உ.வே.சாமிநாதையர் ஆக்கங்கள்
அச்சுருவான அச்சகங்கள்
முனைவர் இரா. வெங்கடேசன்........................................ 76

பகிர்வு

# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# காப்டன் ஸ்விங்

## எரிக் ஹாப்ஸ்பாம் - ஜியார்ஜ் ரூட் (2001)

## Captain Swing (2001)


**Eric Hobsbawm & George Rude**

Phoenix Press, London

சென்ற இதழின் தொடர்ச்சி

நில உடைமையாளர்களுக்கு எதிரான கலகச்செயல்கள் காப்டன் ஸ்விங் என்பவரது பெயரால் நிகழ்ந்தன என்பதையும், இது ஒரு கற்பனைப் பெயர் என்பதையும் சென்ற இதழில் அறிந்துகொண்டோம். இச் செயல்களில் ஈடுபட்டோர் குறித்து ஜியார்ஜ் ரூட் இந் நூலின் பன்னிரண்டாவது இயலில் ஆராய்ந்துள்ளார். இவர்களில் பெரும்பாலோர் பண்ணையாரின் ஊழியர்களாகவோ அல்லது அவருக்கு அருகில் வசிப்பவர்களாகவோ இருந்துள்ளனர் என்ற உண்மையை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் காவல் துறை, சிறைத்துறை ஆவணங்களின் துணையுடன் மேலும் சில செய்திகளை அவர் குறிப்பிட்டுள்ளார்.

1830ஆவது ஆண்டின் குளிர்காலம் தொடங்கி 1831 கோடைகாலம் வரை நிகழ்ந்த தீ வைப்பு நிகழ்வுகளில் ஈடுபட்டோராக தொண்ணுற்றாறு பண்ணையாட்கள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்கள்.அவர்களில் யாரும் அந்நியரல்லர். இவர்களில் எழுவர் பெண்கள். எஞ்சியோரில் ஒருவர் காப்பீடு செய்திருந்த தம் வீட்டைத் தாமே கொளுத்திப்



பணம் பெற முயன்றுள்ளார். இருவர் விவசாயிகள். தனிப்பட்ட பகையைத் தீர்த்துக்கொள்ள ஒருவர் தீ வைத்திருக்கிறார், அய்ந்துபேர் நெசவாளர்கள். எஞ்சியோரில் சிலர் பண்ணையாட்கள், சிலர் உழவுசெய்வோர், உடல் உழைப்பாளிகள், வண்டியோட்டுவோர், ஒருவர் ஊர்சுற்றி. பயமுறுத்தும் கடிதங்கள் எழுதிய நாற்பத்தாறு பேர்களில் அய்ந்துபேர் பெண்கள். இவர்கள் தவிர ஆலைத்தொழிலாளிகள், தோட்டக்காரர், பள்ளி ஆசிரியர்கள், வழக்கறிஞரின் எழுத்தர், பயணியாக வந்த தையற்கலைஞர், வைக்கோலால் கயிறு திரிப்பவர் என்போரும் இடம் பெற்றிருந்தனர். கலகக்காரர்கள் பெரும்பாலும் திருமணம் ஆகாதவர்களாகவே இருந்தனர்.

மொத்தத்தில், இது குடியானவர் கலகம் என்றழைக்கப்பட்டாலும் வேறு பல பிரிவினர்களும் இதில் இடம் பெற்றிருந்தனர். கலகம் செய்ததாகக் கைதானவர்களில் ஆலைத் தொழிலாளி, சாலைப்பணியாளர்களை மேற்பார்வையிடுவோர், நாடோடி, வீட்டு உரிமையாளர், காகிதம் செய்பவர், படைஅதிகாரி, கூடை முடைவோர், புகைபோக்கி சுத்தம் செய்வோர், ஊசி செய்பவர், முன்னாள் காவலர் என்போர் இடம்பெற்றிருந்தனர். விவசாயிகளின் எண்ணிக்கை குறைவுதான். நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்துவந்த கைவினைத் தொழிலாளர் எண்ணிக்கையே அதிகமிருந்தது. செங்கல் செய்வோர், தச்சர், கொல்லர், சாயம் தோய்ப்போர், காலணி செய்வோர், கூரை வேய்வோர், தோல் தொழில் செய்வோர் என விவசாயிகள் அல்லாதாரின் பங்களிப்பு அதிகமிருந்துள்ளது; பெண்களின் பங்களிப்பு குறைவாகவே இருந்துள்ளது.


### கலக நிகழ்வுகள்


அறுவடை எந்திரங்களைத் தாமே கொளுத்தி விடும்படியும், அவ்வாறு கொளுத்தாவிடில் எங்களது தொழிலாளர்கள் அதைக் கொளுத்திவிடுவார்கள் என்றும் எச்சரிக்கை அடங்கிய கடிதங்கள் காப்டன் ஸ்விங் பெயரில் பண்ணையார்களுக்குச் சென்றன. இதை எதிர்கொள்ளும் வகையில் குற்றவியல் நீதிபதிகள், மதகுருக்கள், நில உரிமையாளர்கள், வேளாண் தொழிலாளிகள் அடங்கிய கூட்டத்தைக் கூட்டினர். சொத்துக்களையும், உற்பத்திப் பொருள்களையும் அழித்த ஸ்விங் குழுவினர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

தொடக்கத்தில் அறுவடை எந்திரங்கள் ஒன்றிரண்டு மட்டுமே எரியூட்டி அழிக்கப்பட்டன. இக்கூட்ட முடிவுக்குப் பின் அனைத்து எந்திரங்கள் மீதும் எதிர்ப்புணர்வு திரும்பியது, காகித ஆலை எந்திரங்கள் நொறுக்கப்பட்டன. எந்திரங்களின் பயன்பாடு எதிர்ப்புக்கு ஆளானது. கூட்டத்தை அமைதிப்படுத்தும் வழிமுறையாக நீதிபதி, ஆயுதப்படையைத் திருப்பி அனுப்பினார்.

### அரசின் செயல்பாடு

இவ்வாறு இங்கிலாந்தில் நிகழ்ந்த கிராமப்புறக் குடியானவர் எழுச்சியை ஒரு கலகச்செயலாகவே அந்நாட்டு அரசு பார்த்தது. இதனால் இராணுவம், நீதித்துறை, அரசியல் ஒடுக்குமுறை போன்ற




எழுதியவரைக் கண்டறிவதற்காக வெளியிடப்பட்ட விளம்பரம்

வழிமுறைகளைக் கையாண்டு இதை ஒடுக்கியது. சில நேரங்களில் கைது செய்வித்தலையும் மேற்கொண்டது; சில இடங்களில் தானாகவே குடியானவர் எழுச்சி ஒடுங்கியது.

கைது செய்யப்பட்டவர்கள், சிறைத் தண்டனைக்கு மட்டும் ஆளாகவில்லை; மரணதண்டனை, நாடுகடத்தல், சவுக்கடி போன்ற கடுமையான தண்டனைகளுக்கும் ஆட்பட்டனர். அரிதாக சிலருக்குப் பணவடிவில் தண்டம் விதிக்கப்பட்டது. இவற்றில் கப்பல் ஏற்றி நாடுகடத்தப்பட்டவர்களின் நிலை மிகவும் அவலமான ஒன்றாகும். திருடர்கள், சட்டத்தை மீறியவர்கள் ஆகியோருடன் நூறுநாட்களுக்கும் மேலாகக் கடற்பயணம் மேற்கொண்டு ஆஸ்திரேலிய நாட்டிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். குடியானவர் எழுச்சிக்கு முன் இங்கிலாந்தில் நிகழ்ந்த லடைட் இயக்கம், சாசன இயக்கம், தொழிற்சங்க இயக்கம் என்ற இயக்கங்களில் ஈடுபட்டவர்களைவிடக் கடுமையான பாதிப்பை இக் குடியானவர் இயக்கத்தில் பங்கேற்றோர் எதிர் கொண்டனர்.

**இயக்கத்தின் விளைவு**

குடியானவர் எழுச்சியானது, சட்டம், அரசின் அடக்குமுறை அமைப்புகள் துணையுடன் ஒடுக்கப்பட்டாலும் அதன் தாக்கம் பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டது. வேளாண் பொருட்கள் மீதான காப்பீடு செய்வதற்கான பிரிமியம் தொகை உயர்ந்தது. தாம் ஆங்கிலேயர் அல்லர் அடிமைகள் என்ற கருத்து தொழிலாளர்களிடம் தோன்றியது. பணக்காரர்கள் வாழப்பிறந்தவர்கள், ஏழைகள் நாய் போன்று பட்டினியால் சாகப்பிறந்தவர்கள் என்ற கருத்தும் அவர்களிடம் உருவானது. ஏழைகளின் நலம் குறித்தும், சமயக்குருக்கள் வரிவாங்குவது குறித்தும் சட்ட அடிப்படையில் ஆராயும் நிலைக்கு அரசு ஆளானது. விக்டோரியா மகாராணி காலத்தில் அறிமுகமான 'வறியோர்' சட்டத்தில் *1834* ஆவது ஆண்டு சில திருத்தங்கள் செய்யப்பட்டன. 'தித்தி' என்ற பெயரிலான வரி தொடர்பான சட்டத்திலும் *1836*இல் சில திருத்தங்கள் செய்யப்பட்டன.

இப்போராட்டம் ஒடுக்கப்பட்ட போதிலும் அறுவடை எந்திரங்கள் முன்போல் செயல்படவில்லை. இது, அமைப்பாக ஒன்று திரட்டப்படாத திக்கற்ற பண்ணையாட்களின் சாதனையாகும். அறுவடை எந்திரங்கள் அறிமுகமான போது மூர்க்கமாக எதிர்த்த பகுதிகளில் போராட்டம் முடிந்த பின்னரும் எந்திரங்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை. *1850*ஆவது ஆண்டிற்குப் பின்னரே எந்திரமயமாதல் நாடு முழுவதும் பரவலாக நடைமுறைக்கு வரலாயிற்று.

●


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து 'உங்கள் நூலகம்' இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஆகஸ்டு மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 4252 | 5906 | 2761 | 2759 | 2865 |
| 4224 | 5884 | 903 | 2762 | 2866 |
| 4225 | 5916 | 904 | 4380 | 5937 |
| 4253 | 5917 | 905 | 7812 | 4810 |
| 1101 | 4852 | 163 | 486 | 2061 |
| 2758 | 4223 | 5919 | 2864 | 906 |
| 483 | 4222 | 4323 | 5931 | |
| 5913 | 5925 | 124 | 5935 | |
| 484 | 2863 | 4809 | 5932 | |
| 871 | 4327 | 7811 | 164 | |

தனி இதழ் ₹ **30.00**, ஆண்டு சந்தா ₹ **360.00**
மாணவர்களுக்கு ₹ **300.00**. ஆயுள் சந்தா ₹ **3000.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **2750.00**
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

கட்டுரை



# சி.சுப்பிரமணியத்தின் தமிழ் பயிற்று மொழித் திட்டம் கை நழுவிப் போன வரலாறு

டாக்டர். சு.நரேந்திரன்

*07.12.1956இல் தமிழகச் சட்டப் பேரவையில் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தை அவையில் தாக்கல் செய்த அன்றைய கல்வி அமைச்சர், சி.சுப்பிரமணியம் "சட்ட சபையின் முன்னிலையில் தமிழ் மக்கள் சார்பாக இந்த மசோதாவைத் தமிழன்னையின் மலரடியில் சமர்ப்பிக்கிறேன். தமிழனாய்ப் பிறந்த பிறவிப் பயனைப் பெற்றுவிட்டதாகவே கருதுகிறேன்" (துரை சுந்தரேசன், 1986:340) என்று குறிப்பிட்டார்.*

ஆட்சிமொழிச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்ட ஜீவா தமிழில், கலைச்சொல் அகராதிகளை உருவாக்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார். தமிழகப் பல்கலைக்கழகங்களில் தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று எம்.கல்யாணசுந்தரம் பேசினார். மேலும் பாளையம் தியாகராசன், இராமமூர்த்தி, முத்தையா செட்டியார், கருத்திருமன் முதலியோரும் இவ்விவாதத்தில் கலந்து கொண்டனர். ஆட்சி மொழித் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த, தமிழ் ஆட்சி மொழிக் குழுவை அரசு ஏற்படுத்தியது. தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்துவதே இக்குழுவின் நோக்கமாகும். இதன் தொடர்ச்சியாக 26.01.1959ஆம் நாள் சென்னை அரசு, தமிழ் வளர்ச்சி ஆய்வுக் குழுவை நிறுவியது. அதன் தொடக்க விழாவில், "தமிழைப் போதனை மொழியாக்க வேண்டுவது இன்றியமையாதது. ஆயினும் பல இடர்பாடுகள் உள்ளன. தமிழிலேயே பாடம் போதிக்க முடியாது என்று சிலர் பேசினர். அதில் உண்மையில்லை" (செ.செ. 1959:296) என்று சி.சுப்பிரமணியம் கூறினார்.

காமராஜர் உரையாற்றும் போது "படித்தவர்களின் மனப்பான்மை மாற வேண்டும். தமிழ் போதனை மொழியாக உள்ள பள்ளிக்கே தம் பிள்ளைகளை அனுப்ப வேண்டும். இதனைச் செய்தால் தமிழில் பாடப் புத்தகங்கள் தானே வெளிவந்து விடும்" (செ. செ.1959:296) என தம் கருத்தைத் தெரிவித்தார்.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க ஆணையை அரசு 14.04.1959இல் வெளியிட்டது (G.O.No. 748 Education).

இதற்குக் காரணமானவர் அன்றைய கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம் ஆவார். இத்துடன் திட்டத்தால் ஏற்படும் விளைவுகளை மதிப்பிட ஒரு குழுவையும் நிறுவினார். பயிற்று மொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியாகக் கலைச்சொற்கள், பாடநூல்கள், பாடத்திட்ட செயல்முறைகள் ஆகியவற்றைத் தயாரிக்க கல்லூரிக்குத் தமிழ்க்குழு என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவில் கோவை ஜி.ஆர்.தாமோதரன், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் உட்பட ஆறு பேர் இடம் பெற்றனர். இக்குழு 1960-61ஆம் ஆண்டில் பல துறைகளுக்கான கலைச்சொல் பட்டியலையும் பாடநூல்களையும் தயாரித்து வெளியிட்டது. இக்காலகட்டத்தில் தென்னிந்தியத் துணைவேந்தர்கள் மாநாடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் 9.11.1961 ஆம் நாள் நடைபெற்றது. இதில் தமிழ் பயிற்றுமொழிக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கல்லூரிகளில் தமிழ்: ஆதரவும் எதிர்ப்பும்

சி.சுப்பிரமணியத்தின் தமிழ் பயிற்று மொழித் திட்டத்திற்குக் காங்கிரஸ் கட்சியில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அன்றைய மத்திய அமைச்சரும் காங்கிரஸ் தலைவருமான சுப்பராயன் சி.சுப்பிரமணியத்தின் இத்திட்டத்தை மறைமுகமாக எதிர்த்து வந்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 1966ஆம் ஆண்டு ஏற்பாடு செய்த பாரதி விழாவில் "கிராமணியார் தமிழைப் படிக்கச் சொல்கிறார். தமிழன் சிலப்பதிகாரத்தையும் புறநானூற்றையும் படித்துவிட்டால் அவனுக்கு உத்தியோகம் கிடைத்துவிடுமோ?" (ம.பொ.சி. 1974:888) என சுப்பராயன் கேள்வி எழுப்பினார். இக்கருத்து விழாவில் பெரும் குழப்பத்தை விளைவித்தது என்றார். அவரைத் தொடர்ந்து பேசிய ம.பொ.சி. தமிழ் பயிற்று மொழி ஆவதற்கும், தமிழை மொழிப் பாடமாகப் படிப்பதற்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கினார். இக்கூட்டம் ஆபட்ஸ்பரி தங்கும் விடுதியில் நடந்தது. எனவே இக் குழப்பம் 'ஆபட்ஸ்பரி குழப்பம்' என வழங்கப்பட்டது.

இக்கால கட்டத்தில், அறிஞர்கள் கல்வியாளர்களிடையேயும் பயிற்று மொழி ஆதரவு, பயிற்று மொழி எதிர்ப்பு என இரு அணிகள் உருவாகின. பயிற்றுமொழி ஆதரவு அணியில் பாவேந்தர் பாரதிதாசன், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் முதலிய பெருமக்களும்; ஆங்கில ஆதரவு அணியில் ஏ.இலட்சுமணசாமி முதலியார், ஏ.இராமசாமி முதலியார் முதலியோர்களும் மற்றும் தேசியத்தின் பேரால் போலித்தனம் புரிவோரும் அணிவகுத்து நின்றனர் (த.சுந்தரராஜன் 1988:84). இவ்வாறு தமிழ் பயிற்று மொழித் திட்டம் ஆதரவு, எதிர்ப்பு அணிகளால் அரசியலாக்கப்பட்டது.

### தமிழ் பயிற்று மொழி முன்னோடித் திட்டத்தின் செயல்பாடுகள்

இத்திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக கோவை பி.எஸ்.ஜி.கல்லூரி, பொள்ளாச்சி நாச்சிமுத்துக் கவுண்டர் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்வழிக் கல்வி தொடங்கப்பட்டது. இது தவிர இத்திட்டம் சென்னை ராணிமேரி கல்லூரியில் வரலாறு, பொருளாதாரம், புவியியலும்; சென்னை அரசுக்கல்லூரியில் வரலாறு, பொருளாதாரமும்; கும்பகோணம் அரசுக் கல்லூரியில் பொருளாதாரமும் தமிழ் வழியில் நடைபெற அரசு அனுமதித்தது. தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவு கருத்துக்கள் பரவியதைத் தொடர்ந்து 1963-64ஆம் கல்வியாண்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழை பயிற்று மொழியாக்கத் திட்டமிட்டது. இத்திட்டத்திற்குப் பல லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தரப்பட்டது. தமிழில் பாடம் நடத்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்பு 1963, மே, ஜுன் மாதங்களில் கோவை அரசுக் கல்லூரியில் ஐந்து வாரம் தொடர்ந்து நடைபெற்றது.

கல்லூரித் தமிழ்க் குழு செயல்நிலை அறிக்கைகளின்படி, "பல்வேறு கல்லூரிகளிலிருந்து வந்த பதில்கள் உற்சாகமூட்டக் கூடியவையாக இருக்கின்றன. தமிழ்ப் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்கள் ஊக்கம் காட்டுகின்றனர்." ஒரளவேனும் தயக்கம் இருக்கக்கூடும் என்று நினைத்த குழுவினருக்கு இந்த மகிழ்ச்சியான முடிவு எதிர்பாராததாக அமைந்தது (சட்டமன்ற நடவடிக்கை. 1.4.1963:437) என்றவாறு அறிக்கை, பயிற்று மொழிக்கு வரவேற்பை அளிப்பதாக அமைந்திருந்தது.

### காங்கிரசில் குழு மனப்பான்மை

தமிழ் பயிற்றுமொழி ஆக்குவது தொடர்பான கருத்தில் தமிழகக் காங்கிரஸ் ஆட்சியில் இரண்டு குழுக்கள் செயல்பட்டு வந்தன. பயிற்றுமொழிக்கு ஆதரவாக சி.சுப்பிரமணியம் கு.அருணாசலம், தி.சு.அவினாசிலிங்கமும்; எதிர்ப்புக் குழுவில் சுப்பராயன், பக்தவத்சலம் ஆகியோரும் இருந்தனர்.

இதற்கிடையில் 1962ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சி.சுப்பிரமணியம் மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு மைய அரசு அமைச்சராகப் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து புதிய கல்வி அமைச்சராக பக்தவத்சலம் பதவி ஏற்றார். தொடக்கத்தில் பயிற்று மொழிக்கு ஆதரவு தெரிவித்த இவ்வமைச்சர் காலப்போக்கில் தன்னை மாற்றிக் கொண்டார் என்பதை, "தமிழை பயிற்சி மொழியாக்கக் கட்டாய முறையை நாம் கையாள முடியாது. தமிழுக்காகப் பரிந்து பேசுவோர் அதனைப் பயிற்சி மொழியாக்குவதற்கு ஆதரவான சூழ்நிலையை உருவாக்கி பிரச்சாரம் செய்ய வேண்டும். வருகின்ற கல்வியாண்டில் தமிழ் பயிற்சி மொழித் திட்டம் விரிவுபடுத்தப்பட மாட்டாது. நன்கு யோசித்து

பின்னரே அது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும்'' (ம.பொ.சி.1974:891) என்ற அவரின் கூற்றால் அறிகிறோம்.

இந்நிலையில் தமிழ்வழிக் கற்கும் மாணவர்களுக்கு ரூ.30 உதவித்தொகை அளித்ததோடு முன்னோடித் திட்டத்தில் பங்கு பெற்றவருக்குக் கல்விக் கட்டண விதிவிலக்கும் அளிக்கப்பட்டது. இச்சமயத்தில் தமிழ்வழி படிக்க மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதன் எதிரொலி சட்டமன்றத்தில் ஒலித்தது. ''ஒரு இடத்தில் ஆங்கிலம் பயிற்சி மொழியாக வைத்துவிட்டு இன்னொரு இடத்தில் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை வைத்திருப்பதன் காரணமாகத்தான், மாணவர்கள் வரமுடியாத சூழ்நிலை நிலவுகிறது. பயிற்றுமொழியாகத் தமிழ் எடுத்துப் படித்தவர்களுக்குத்தான் உத்தியோகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் போகிறோம் என்றால் தானாகவே இதற்கு முக்கியத்துவம் வந்துவிடும். ஆகவே நம்முடைய தமிழ் மொழியை உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் அமைச்சர் அவர்களுக்கு இருக்குமானால்; ஒரு பாதுகாப்பு உறுதிமொழியை அமைச்சர் கொடுக்க வேண்டும்'' (சட்டமன்ற நடவடிக்கை. 1963:300) என்ற புலவர் சி.கோவிந்தனின் கருத்து வழி என்ன தேவை என்பதை அறிகிறோம்.

தமிழ்வழிக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியதற்குக் கண்டனங்கள் எழுந்தன. அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் இரா.நெடுஞ்செழியன் பயிற்று மொழித் திட்டத்தில் இருந்து அரசு பின்வாங்கக் கூடாது என சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்தார். இச்சமயத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் மதியழகன் தமிழ்வழிக் கல்லூரிக் கல்விக்கான ஆணையைப் படிக்க ஆரம்பித்தார். அந்த ஆணை வரிகள் வருமாறு: In order to commence the change over during the year 1963-64... ஆணையை படித்துக் காட்டிய பிறகு மதியழகனுக்குப் பதில் அளித்த கல்வி அமைச்சர் பக்தவத்சலம் ''அது 1962-1963இல் துவங்குவது பற்றி ''In order to commence' என்று இருக்கிறது. Adopt என்று இல்லை'' என்றார். திரு.கே.ஏ.மதியழகன் குறுக்கிட்டு இன்னொரு..... என்று ஆரம்பித்த பொழுது அமைச்சர் பேஜைப் படித்துக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. இதிலே கமென்ஸ் என்றுதான் இருக்கிறது (சட்டமன்ற நடவடிக்கை. 1963: 470) என்றார். பக்தவத்சலத்தின் இப்பேச்சு, தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் பின்னடைவுக்குக் காரணமாக அன்றைய காங்கிரஸ் அரசு இருந்துள்ளது என்பதை ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாக்குகிறது.

1966ஆம் ஆண்டு அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அத்தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இந்நிலையில் கல்லூரிகளில் தமிழ்வழித் திட்டத்தைச் செயல்படுத்தத் தவறிய



அரசின் மீது கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் போது அதைப் பற்றி விவாதிக்காமல் காலம் கடந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதுமுக வகுப்பு அறிமுகத்தை சாதனையாகக் காட்டிய அன்றைய கல்வி அமைச்சரின் பேச்சு தமிழ்வழிக் கல்லூரிக் கல்வித் திட்டம் தோல்வி அடைந்ததை உறுதிப்படுத்துகிறது. இவர் காலத்திலேதான் ஆங்கில வழிக் கல்வி ஏற்றம் பெற்றது. எப்படி என்றால் 3ஆம் வகுப்பிலிருந்து மீண்டும் ஆங்கில வகுப்புகளைத் தொடங்க ஆணை பிறப்பித்தார். மேலும் உயர்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்புகளிலிருந்து 10ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்புகளிலும், ஒரு பிரிவு, ஆங்கிலம் பயிற்று மொழியாக வகை செய்யும் சட்டம் இயற்றப்பட்டது. இக்காலகட்டத்தில் ''பயிற்றுமொழி பிரச்சனை'' என்ற புத்தகம் பக்தவத்சலத்தால் எழுதி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் வாயிலாக வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

''திருமுருகாற்றுப் படையை இயற்றிய நக்கீரரும் அந்த நூலின் தொடக்கத்தில் 'உலகம் உவப்ப' என்று தொடங்கிப் பாடியதன் மூலம் அவருடைய உலக கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். முக்கியமாக உலகம் பொது மொழியாகவும், வியாபாரத்திற்கும், விஞ்ஞானப் படிப்பிற்கும் மிகமிக இன்றியமையாத மொழியாகவும் உள்ள ஆங்கிலத்தைப் பயில வேண்டும்....! பிராந்திய மொழிகளோடு ஆங்கில மொழியும் கல்லூரியில் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும், பல்கலைக்கழகத்தில் தமிழ் மட்டும் பயிற்சி மொழியாக இருந்தால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள், தேசிய ஒருமைப்பாடு பாதிக்கப்படும், நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் எல்லாம் தனித்தனி ஸ்தாபனங்களாகிப் பிரிவு மனப்பான்மை வளர இடம் ஏற்பட்டு விடும்'' என்றார். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அமைச்சர் ஆங்கில வழிப்படிப்புக்கு மட்டும் ஆதரவு தெரிவித்ததை அறியமுடிகிறது.

# மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்

## சிந்தனை அரங்கம்

### 12 நாட்கள் - 12 சொற்பொழிவுகள்

மக்கள் சிந்தனைப் பேரவையின் சிந்தனை அரங்க நிகழ்வுகள் கீழ்க்கண்ட நிகழ்வு முறைப்படி நடைபெறவுள்ளன
**நிகழ்ச்சி தினசரி மாலை சரியாக 6.00 மணிக்குத் தொடங்கி 7.30 மணிக்கு முடிவடையும்**

தினசரி நிகழ்வின் தொடக்கத்தில் பேரவையின் தலைவர் **த. ஸ்டாலின் குணசேகரன்** நிகழ்த்தும் அறிமுகவுரைக்குப் பிறகு தனித்தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு மட்டுமே இடம்பெறும்

| நாள் | சொற்பொழிவாளர் | தலைப்பு |
|---|---|---|
| 31.07.2020 வெள்ளி | கவிப்பேரரசு **வைரமுத்து** | **இலக்கியத்தில் நாகரிகம்** |
| 01.08.2020 சனி | **பாரதி கிருஷ்ணகுமார்** | **அறிவினைத் தூண்டி நடத்துக !** |
| 02.08.2020 ஞாயிறு | **த. உதயச்சந்திரன்** ஐ.ஏ.எஸ்., | **அகழ்வாரைத் தேடும் நிலம்** |
| 03.08.2020 திங்கள் | பேராசிரியர் **சிற்பி பாலசுப்பிரமணியம்** | **காலவெளியில் ஒரு ஜீவநதி** |
| 04.08.2020 செவ்வாய் | பேராசிரியர் **த. ராஜாராம்** | **விசும்பின் துளியாய் ...** |
| 05.08.2020 புதன் | பேராசிரியர் **தி. மு. அப்துல்காதர்** | **ஆறாவது விரல்** |
| 06.08.2020 வியாழன் | சொல்வேந்தர் **சுகி. சிவம்** | **நம் வாழ்க்கை நம் கையில்** |
| 07.08.2020 வெள்ளி | முனைவர் **வெ. இறையன்பு** ஐ.ஏ.எஸ்., | **பயணங்கள் முடிவதில்லை** |
| 08.08.2020 சனி | பேராசிரியர் **ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன்** | **நூலேணி** |
| 09.08.2020 ஞாயிறு | நீதிபதி **ஆர். மகாதேவன்** | **அறம் பொருள் இன்பம் அகிலமே சூழ்க ...** |
| 10.08.2020 திங்கள் | விஞ்ஞானி **மயில்சாமி அண்ணாதுரை** | **சவால்களும் சந்தர்ப்பங்களும்** |
| 11.08.2020 செவ்வாய் | பேராசிரியர் **சாலமன் பாப்பையா** | **சங்கத்தமிழ்ச் சிந்தனைகள்** |

ஒளிபரப்பப்படும் உரைகளை **makkalsinthanaiperavai** என்ற பெயரிலான **Youtube, Facebook** கணக்குகளின் மூலம் உலகின் எப்பகுதியிலுள்ளவர்களும் கேட்கலாம். உலகெங்கும் உள்ள தமிழர்கள் இவ்வுரைகளைக் கேட்டு நிகழ்வைச் சிறப்பிக்கவும் பயன்பெறவும் அன்புடன் அழைக்கிறோம்

**மக்கள் சிந்தனைப் பேரவை**
தமிழ்நாடு மாநிலக்குழு
**Phone : 0424 - 2269186 / Email : info@makkalsinthanaiperavai.org**




# பாரதி ஆய்வுச்சுடர் அணைந்தது

பா. ஆனந்தகுமார்

தமிழகத்தில் பொதுவுடைமைச் சிந்தனைகள் பாரதியெனும் மகாகவிஞனை அடையாளப்படுத்தி முன்னெடுத்துச் செல்லப்பட்டன. பொதுவுடைமை, புரட்சி என்கிற சொற்களைத் தமிழில் முதலில் அறிமுகப்படுத்தியவர் பாரதியே. தமிழில் மார்க்சியத் திறனாய்வு என்பது பாரதியின் படைப்புகள் பற்றிய விவாதத்தின் வழியே அறிமுகமானது. இதனைத் தொடங்கி வைத்தவர் பேராசான் ப.ஜீவானந்தம். இந்திய விடுதலைக்குப் பின்னர் பாரதி பற்றிய ஆய்வுகளையும், பாரதி விழாக்களையும் முன்னெடுத்துச் சென்றவர்கள் பொதுவுடைமைச் சிந்தனையாளர்களே. ஜீவாவின் முன் முயற்சி காரணமாக பாரதி பிறந்த மண்ணான எட்டையபுரத்தில் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தின் சார்பாக ஆண்டுதோறும் பாரதி நினைவுநாள் செப்டம்பர் மாதத்தில் ஊர்த்திருவிழாவைப் போல் இரண்டு நாள்கள் கொண்டாடி வருகின்றனர். இவ்விழாவின் போது கருத்தரங்குகளும் பட்டிமன்றங்களும் வழக்காடு மன்றங்களும் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்வில் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.கே.தங்கமணி, கே.பாலதண்டாயுதம், அறந்தை நாராயணன், தஞ்சை இராமமூர்த்தி, குன்றக்குடி அடிகளார், கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன், ராஜம் கிருஷ்ணன் ஆகிய பெரும் ஆளுமைகள் கலந்துகொண்டுள்ளனர். பாரதி விழாவின் மூலமாகவே நாவலாசிரியர் பொன்னீலன், பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், பேராசிரியர் தி.சு.நடராசன், ஆய்வாளர் செந்தீ நடராசன், சி.சொக்கலிங்கம், நா.இராமச்சந்திரன் ஆகியோர் பொதுவுடைமை இயக்கத்திற்கும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்திற்கும் அறிமுகமாயினர். எட்டையபுரம் பாரதி விழாவை ஒருங்கிணைத்துத் தொடர்ந்து நடத்தியதில் பேராசிரியர் நா.வானமாமலை, தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோர் வரிசையில் இளசை மணியனுக்கு மிக முக்கியமான பங்குண்டு. விழாவைத் திட்டமிடல், நிதி திரட்டல், மேடை பொறுப்பு, உணவு ஆகிய அனைத்துப் பணிகளிலும் பங்கேற்று தனது வீட்டுத் திருமணத்தைப் போல் இந்த விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வந்தார். பாரதியின் மீதும் பொதுவுடைமைச் சிந்தனையின் மீதும் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக அரசு வேலையைத் துறந்து இளசை மணியன் இப்பணியில் ஈடுபட்டார்.

பாரதி செயல்பாட்டாளர் என்ற நிலையைத் தாண்டி பாரதி ஆய்வாளர் என்ற வரிசையில் அவருக்கு இடம் தேடித்தந்தது 'பாரதி தரிசனம்' (1977) என்ற அவரது பாரதியாரின் இந்தியா பத்திரிகை கட்டுரைகள் தொகுப்பு நூலாகும். இரண்டு பகுதிகளாக வெளிவந்த இந்நூலைப் பெரும் முயற்சியில் வெளிக்கொண்டுவந்தார். கல்கத்தா தேசிய நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த இந்தியா பத்திரிகையின் மூலப் பிரதிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற




உறுப்பினருமான ஹிரேன் முகர்ஜியின் உதவியால் பெற்று நூலாக்கினார். இந்தியா பத்திரிகையின் மைக்ரோ பிலிம்மை வாசிப்பதற்கு உள்ளூர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு லென்சைப் பொருத்தி மிகச் சிரமப்பட்டு வாசித்து மூன்றாண்டுகள் கடுமையாக உழைத்து அதனை நூலாக்கினார். அவ்வகையில் இந்தியா பத்திரிகையில் வெளிவந்த பாரதி கட்டுரைகளை முதலில் நூலாகக் கொண்டு வந்த பெருமை இளசை மணியனுக்கே உண்டு. பாரதி ஆய்வு வரலாற்றில் இந்நூல் இன்றும் ஒரு மைல்கல்லாகத் திகழ்கின்றது.

தொ.மு.சி.ரகுநாதன் அறக்கட்டளையின் செயலாளர் என்ற முறையில் எட்டையபுரத்திலுள்ள ரகுநாதன் நூலகத்தை உருவாக்கியதிலும் அதனைத் தொடர்ந்து பராமரித்துப் பாதுகாத்ததிலும் இளசை மணியனுக்குக் குறிப்பிடத்தக்க பங்குண்டு. இடதுசாரி படைப்பாளியாகவும் விமர்சகராகவும் திகழ்ந்த தொ.மு.சி.ரகுநாதன் இளசை மணியனின் செயல்பாடுகளுக்குப் பல வகையில் தூண்டுதலாக இருந்தார். இதன் காரணமாக ரகுநாதனின் மறைவுக்குப் பிறகு ரகுநாதன், சாந்தி, தாமரை, குமரிமலர், முல்லை, தேசாபிமானி, ஆனந்தபோதினி ஆகிய இதழ்களில் எழுதிய அரிய பல கட்டுரைகளைத் தொகுத்து 'மனசாட்சியின் குரல் பாரதி' (2012) என்ற தலைப்பில் இளசை மணியன் நூலாக்கியுள்ளார். இத்தொகுப்பு நூல் பாரதி ஆய்வு நூல்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதனைத் தொடர்ந்து பாரதியைப் பற்றி அவர் நண்பர்கள் எழுதியதைத் தொகுத்து ஒரு நூலாக்கியுள்ளார் (2018). இந்நூலைக் கீழஈரால் தொன் போஸ்கோ கல்லூரியினர் வெளியிட்டுள்ளனர். மேலும் பாரதியைப் பற்றி மார்க்சிய அறிஞர் ஆர்.கே.கண்ணன் தாமரை, சரஸ்வதி இதழ்களில் எழுதிய பாரதி பற்றிய கட்டுரைகளைத் தொகுத்து 'பாரதியின் கீர்த்தியும் மூர்த்தியும்' (2017) எனும் தலைப்பில் நூலாக்கியுள்ளார். சோவியத் புரட்சியின் நூற்றாண்டு நிறைவையொட்டி சோவியத் பலகனி இதழில் வெளிவந்த ருசியப் புரட்சிக்கும் இந்தியாவிற்குமான தொடர்பு பற்றி சோவியத் அறிஞர்களின் கட்டுரைகளைத் தொகுத்து 'ருசியப் புரட்சியும் இந்தியாவும்' (2019) எனும் நூலாக்கியுள்ளார். இவையன்றி பாரதியையும் தாகூரையும் பற்றி அவர் எழுதிய மூன்று கட்டுரைகளை சிறு பிரசுரமாக வெளியிட எண்ணியுள்ளார். தற்போது அதன் கையெழுத்துப் பிரதி கோவை வழக்கறிஞர் சுப்பிரமணியனிடம் இருப்பதாக அறிகிறேன்.

எட்டையபுரத்திலுள்ள பாரதி அருங்காட்சியகத் தோடும் (பாரதி பிறந்த இல்லம்), பாரதி மணிமண்டப நூலகத்தோடும் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த இளசை மணியன் பாரதியின் அரிய கைப்பிரதிகளையும் தேடிச்சேகரித்து வைத்திருந்தார். விளாத்திகுளம் சுவாமிகள் பற்றிய கட்டுரை தாமரை இதழில் வெளிவரச் செய்தார். அத்தோடு எட்டையபுர அரண்மனையோடு கொண்டிருந்த தொடர்பின் காரணமாக அரண்மனை அச்சகத்தில் வெளியிடப்பட்ட 'வம்ச தீபிகை' முதலான அரிய நூல்களைச் சேகரித்துப் பாதுகாத்து வைத்திருந்தார். அவ்வகையில் பாரதியாரால் இரங்கற்பா பாடப்பட்ட சுப்புராம தீட்சிதர் தெலுங்கிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த 'ஆந்திர மகாபாரதம்' நூலின் பழமையான அச்சுப் பிரதியை அச்சில் கொணரும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் அந்நூலின் முற்பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பக்கங்கள் கறையானால் அரித்துத் தின்னப்பட்டிருந்தன. மதுரை காமராசர் பல்கலைக்கழக மேனாள் தெலுங்குப் பேராசிரியர் டி.எஸ்.கிரிபிரகாஷ் அவர்கள் உதவியோடு அந்நூலை வெளியிட நானும் முயற்சி செய்தேன். தற்போது அந்நூலை வெளியிட சாகித்திய அகாதெமி நிறுவனம் முன்வந்துள்ளது.

இளசை மணியன் எளிய மனிதர். ஆர்ப்பாட்டம் இல்லாதவர். புன்முறுவலோடு எல்லோரையும் வரவேற்று விருந்தோம்பல் செய்யும் நற்பண்பு மிக்கவர். எங்கள் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்கள் கடந்த பத்தாண்டுகளாக எட்டையபுரம் பாரதி விழாவில் பங்கேற்ற போது அவர் செய்த உதவிகள் மறக்கமுடியாதவை. மேலும் எங்கள் பல்கலைக்கழக பாரதியார் ஆய்வகத்தின் சார்பில் பாரதியார் அருங்காட்சியகம் அமைவதற்குப் பேருதவிகள் புரிந்தார். அதன் திறப்புவிழாவில் (15.08.2016) பங்கேற்றுச் சிறப்பித்தார். மேலும் அந்த அருங்காட்சியகத்தினைச் சிறப்பு மிக்கதாக்குவதற்கு பாரதியின் கையெழுத்துப் பிரதி ஒன்றை எனக்குத் தருவதாக வாக்களித்திருந்தார். அதனை அஞ்சலில் அனுப்பி வைப்பதாகவும் சொன்னார். நான் புதிய துணைவேந்தர் வந்த பிறகு அதனை ஒரு நிகழ்வாகச் செய்யலாம் என்று கருதி அனுப்ப வேண்டாமென்று கூறிவிட்டேன். அப்பிரதி இப்போது எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. எட்டையபுரம் பாரதி விழாவைத் தொடர்ந்து நடத்துவதும் ரகுநாதன் நூலகத்தைப் பாதுகாப்பதும் நாடறியச் செய்வதுமே இளசை மணியனுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

●

நூல் மதிப்புரை

# செ.வை.சண்முகத்தின் ‘குயில் பாட்டுத் திறன்’

## கா.செல்லப்பன்




குயில்பாட்டுத் திறன்
செ.வை.சண்முகம்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
ரூ.120/-

“கவிதை மௌனமாக இருக்கிறது; திறனாய்வுதான் பேசுகிறது” என்கிறார் நார்த்ராப் ஃப்ரை என்ற கனேடியத் திறனாய்வாளர் ஆம்; திறனாய்வுதான் கவிதையின் மௌனத்தைக் கலைத்து, அதில் ஒளிந்திருக்கும் உண்மைகளையும் அழகையும் வெளிக்கொணர்கிறது. கருத்து மற்றும் வடிவ நோக்கில் பலவகையான திறனாய்வுகள் உள்ளன. மொழியியல் இலக்கியத் திறனாய்வு கவிதையின் மொழிக் கூறுகளை, மொழியியல் அடிப்படை அலசி ஆய்கிறது. சிறந்த மொழியியல் வல்லுநரும் இலக்கிய ஆய்வாளருமான பேரா.செ.வை.சண்முகம் பாரதியின் அற்புதப் படைப்பான குயில்பாட்டை இந்நூலில் மிக நுணுக்கமாகவும் ஆழமாகவும் ஆய்வு செய்துள்ளார்.

நூலின் முதல் அதிகாரம் மொழியியல் திறனாய்வின் கூறுகளை, தொல்காப்பியம், மற்றும் தற்கால மொழியியல் அடிப்படையில் விளக்குகிறது குறிப்பாக விகாரம், கிளவியாக்கம், உள்ளுறை இறைச்சி ஆகியவற்றையும் மீமிசைச் சொல்லாக்கம் கருத்தன் ஆகியவற்றைத் தொல்காப்பியத்தையொட்டி விளக்கிவிட்டு, உறழ்ச்சி, கருத்தாடல், தொடரியல் முதலியவற்றை மொழியியல் நோக்கில் விளக்குகிறது.

‘அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்’ என்ற புறப்பாடலில் காலம் இருபகுதிகளிலும் கருத்தாக இருப்பதையும், மொழி மாற்றுதலால் முதல்வாக்கியத்தில் காலம்+செயப்படுபொருளும், இரண்டாம் வாக்கியத்தில் செ.பொ.வும் முன்னிலைப் படுத்தப்படுவதைக் காட்டி அவற்றிற்கான காரணங்களையும் ஆசிரியர் சிறப்பாகக் காட்டுகிறார். காலம்தான் மாற்றத்திற்குக் காரணம் எனக் காட்டியுள்ளதை ஆனால் பாடலின் மொத்தவடிவத்தில், காலத்தின் மாற்றத்தால் அற்றை/இற்றை, அவர்கள் வாழ்வில் பெருமாற்றம் ஏற்பட்டதை இணை அமைப்பு, வேறுபாடுமூலம் கவிஞர் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும், இரண்டாம் பகுதி நீண்டிருப்பதற்கு துன்ப உணர்வு காரணம் என்பதை விட, “வென்று எறி முரசின் வேந்தர்” இடையில் வந்ததுதான் என்பதைக் கவிதை அமைப்பு, காட்டுவதாகவும் கொள்ளலாம். மேலும் நேர்மறையும் எதிர்மறையும் நிலை மாற்றத்தை நன்கு காட்டுகின்றன. மொத்தத்தில் அடிப்படைக் கருத்துக்கள் மொழியியல் துணையோடு நன்கு காட்டப்பட்டுள்ளன.

‘மொழித்திறன்’ என்ற அடுத்த அதிகாரத்தில் குயில் பாட்டில், பல்வேறு மொழிக் கூறுகளுக்கான எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன, அவற்றுள் நின், உன், நான், யான், நும் ஆகிய சொற்கள் பாத்திரங்களின் சமூக நிலைக்கேற்ப பயன்படுத்தப்பட்டிருப்பதை ஆசிரியர் நன்கு காட்டியுள்ளார். மேலும், கதைச் சூழலுக்கேற்பவும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள கல்யாணம், கண்ணாலமாக வருவதும் சமூக அடிப்படையிலான பயன்பாடே, ‘ஏனடா மூர்ச்சையுற்றாய்’ என்று வரும் நான்கு வினாக்களில் ‘பொருண்மை இயல்’ திரிசொல்லாக அமைந்துள்ளது என ஆசிரியர் கூறுவது, ஒதெல்லோவில் இறுதியாகக் கைக்குட்டைக்கே என்று (It is gone, lost, out. the way) எனப் பல சொற்களைப் பயன்படுத்துவதை நினைவூட்டுகிறது.

அடுத்து, 'பொருண்மையியல் திறன்' என்ற பகுதியில் குயில் பாட்டில் ஒரு சொல் பலபொருளில் வருவது, மீமிசைச் சொற்கள், உட்சொற்கள் பயன்படுத்துவதைக் காட்டுகிறார். குறிப்பாக உட்சொல்லே, மீமிசைச் சொல்லாக மாறும்போது கவிதையில் அர்த்தங்கள் தொடர்ந்து விரிவடைவது காட்டப்படுகிறது. மேலும் கவிதையில் முரண் போன்ற உத்திகள் பயன்படுத்தப்படும்போது பொருள் இடைவெளி (gaps) அமைந்துள்ளது. வாசகர் பொருளை உய்த்துணர வைக்கவே என்று கூறும்போது வாசகர் மையத் திறனாய்வுக்கு (Ready oriented) வழிவகுக்கிறது. எடுத்துக்காட்டாக, குயிலின் முதற்பாட்டில் காதல் - சாதல், அருள் / இருள், கூடல் / வாடல், தளம் / கூளம் ஆகிய முரண்களுக்கிடையே உள்ள இடைவெளி, வாசகரின் அர்த்த உருவாக்கத்தைத் தூண்டவே. வாசகர்கள் வெறும் அர்த்தத்தை நுகர்பவர்களில்லை; அர்த்தத்தை உருவாக்குபவர்கள் (Not simply consumers, but creators of meaning). கவிதையில் அர்த்த உருவாக்கமும், விரிவாக்கமும் முக்கியப் பண்புகளாகும். ஆசிரியர் இந்தப் பகுதியை மேலும் சற்று விரிவாகச் செய்திருக்கலாம்.

அடுத்து அணித்திறன் என்ற அதிகாரத்தில் குயில்பாட்டில் வரும் உவம, உருவக அணிகளை தொல்காப்பியத்தையொட்டி விளக்குகிறார் ஆசிரியர். அவ்வப்போது அவற்றின் மெய்ப்பாட்டைக் குறிப்பது பயனுள்ளதாய் உள்ளது.

அடுத்து மெய்ப்பாட்டுத் திறன் என்றே ஒரு அதிகாரம் உள்ளது. முதலில் தொல்காப்பியங்களை நகை முதல் உவகை ஈறாக எட்டு மெய்ப்பாடுகளையும் அவற்றின் காரணிகளையும் ஆசிரியர் பட்டியலிட்டுள்ளார். குயில்பாட்டு முழுதும் வியப்பு (மருட்கை) மேலோங்கியிருப்பதாகக் கூறுவது ஏற்புடையதே; கதை மாந்தர்கள் வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகளைக் காட்டிவிட்டு, ஆசிரியர், கவிஞரின் மெய்ப்பாடுகளை விரிவாகக் கூறுகிறார். கவிஞர் ஒரு கதை மாந்தராகவும் கதை சொல்பவராகவும் பல்வேறு மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தி பாடலை இணைக்கும் சக்தியாகவும் விளங்குவதாக ஆசிரியர் காட்டியுள்ளார். பொதுவாக வடமொழித் திறனாய்வாளர்கள் ரசக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதுபோல் தமிழ்த் திறனாய்வாளர்கள் மெய்ப்பாடுகளுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. குயில்பாட்டை மெய்ப்பாடுகள் நோக்கில் ஆசிரியர் காட்டியிருப்பது புதுமையானதே.

எடுத்துரைப்பியலில் பாரதி நிகழ்வுகளை இணைத்துக் கூறும் பாங்கினை ஆசிரியர் விளக்குகிற நிகழ்வுகளின் இடம், காலம் வெளியிடுவதைக் காட்டிவிட்டு, அவைகள் காலம் சார்ந்த தொடர்பு ஒழுங்காலும், காரணகாரியத் தொடர்பு ஒழுங்காலும் இணைக்கப்படுவதாகக் காட்டுகிறார். பெரும்பகுதி காலம் சார்ந்தும், பின்பகுதி காரணம் சார்ந்தும் அமைந்து, முடிவு காலம் சார்ந்தே அமைவதாக ஆசிரியர் கூறுகிறார்.

குயில் பாட்டு ஒரு கதைப் பாட்டு. ஆனால் அது ஒரு கனவுக் கவிதையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. 'பட்டப் பகலில் பாவலர்க்குத் தெரியும் நெட்டைக் கனவு' என்று பாரதியே கூறுகிறார். இது ஃப்ராய்டின் கவிதை பற்றிய கருத்து. நனவுலகில் இடம், காலம் ஆகியன தெளிவாகக் கூறப்பட்டு, பிறகு முக்கிய நிகழ்ச்சிகள் கனவுக் காட்சிகளாக, நாடக பாணியில் காட்டப்பட்டு, நான்காம் நாளில் குயில் பூர்வ ஜென்மக் கதையை முனிவர் கூறியதாகக் கூறும்போது சிக்கல் அவிழ்கிறது. குயில் பெண்ணாகத் தோன்றி கவிஞர் அதை முத்தமிடும் உச்ச கட்டத்தில் கனவு கலைந்து நனவுலகுக்குக் கவிஞரும் நாமும் திரும்புகிறோம். நம்பமுடியாத அதிசய நிகழ்வுகள் கனவில் வருவதும், அவற்றின் உச்சகட்டத்தில் கனவு கலைவதும் இயல்பே. கனவு கலைந்தபின் கவிஞர் தனது பழைய சூழலை விவரிக்கிறார். நனவுலகிலிருந்து கனவுலகுக்குச் சென்று மறுபடியும் நனவுலகுக்கே திரும்புவது கோல்ட்ரிஜ், கீத்ஸ் போன்றோரின் விந்தையுடைய (Romantic Poetry) கவிதையின் தன்மையாகும். கவிஞரே கதை சொல்லியாகவும், கதை நாயகராகவும் மாறிமாறி வருவதால் அவர் கதை மாந்தருக்கும் வாசகர்களுக்குமிடையே பாலமாக அமைகிறார்.

அடுத்து குயில் பாட்டின் யாப்புத் திறனை விரிவாகவே ஆய்வு செய்கிறார். குயில் பாட்டில் பயன்படுத்தப்படும் யாப்புக் கூறுகளை எடுத்துக்காட்டுகிறார். ஆனால் அவை எப்படிக் கருத்தோட்டத்திற்கேற்ப மாற்றம் அடைந்துள்ளன என்பதை மேலும் காட்டியிருக்கலாம்.

இறுதியாக 'வேதாந்தம்' என்ற தலைப்பில், குயில்பாட்டின் அடிக்கருத்து குறித்து ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள வாசிப்புக்களைக் குறிப்பிட்டு ஆசிரியர் விளக்குகிறார். சிவமணி காதலை மையப் பொருளாகக் கொண்டு, அது பாட்டில் ஆன்மிகக் காதல், ஆண்-பெண் காதல் ஆகியவைகளாக உள்ளதாகக் கூறுகிறார். விமலானந்தம் அகத்திணைக் காதலாகவும் அத்வைதமாகவும், கா.மீனாட்சிசுந்தரம் கவிதைக் காதலாகவும், தெய்வீகக் காதலாகவும் காட்டுவதையும் ஆசிரியர் காட்டுகிறார்.

ஆசிரியர் பல்வேறு ஆய்வுகளை விரிவாக விளக்கிவிட்டு வேதாந்த விளக்கம் குறித்து தெளிவான முடிவு தரவில்லை. ஆனால் திணை நோக்கில் காதல் சூழ்நிலையில் விளக்கியிருப்பது சிறப்பாக உள்ளது. குயிலை ஜீவாத்மாவாகக் கொள்வதுதான் பொருத்தமாகத் தோன்றுகிறது. குரங்கை ஆணவமாகவும், மானை ஆசையாகவும் கொள்வதைவிட குரங்கை மனமாகவும், மானை உடலாகவும் கொண்டு குயிலை ஆத்மாவின் பண்பட்ட நிலையாகவும் கொள்ளலாம். இப்படிச்

செய்யும்போது குயிலை மாய சக்தியாக மட்டுமின்றி, கற்பனா சக்தியாகவும் கொள்ள இடமுள்ளது. குயில் மாயக்குயில் என்றே குறிப்பிடப்படுகிறது. இந்த இரண்டு நிலை விளக்கங்களையும் இணைக்க முடியும்.


வேதாந்த விளக்கத்தை முதல் நிலைக் கருப்பொருளாகவும் கற்பனை, தமிழாளர் ஆக்கத்தை இரண்டாம் நிலைக் கருப்பொருளாகவும் கொள்ளலாம். ஐம்புலன்களோடு வேடர்கள் தொடர்புபடுத்தப்படுகின்றனர். சேர இளவரசன் கவிஞனாக வருவதால் இந்த இரண்டு நிலைகளின் தொடர்பைக் காட்டுகிறது. நான்கு நாள் விழிப்புநிலை, கனவு, ஆழ்நிலைத் தூக்கம், துரிய நிலைகளின் குறியீடுகளாகக் கொள்ளலாம். துரிய நிலைதான் மற்ற மூன்று நிலைகளின் அடித்தளம், ஆனால் துரிய நிலைதான் தூய பிரக்ஞை, அது விழிப்புமில்லை தூக்கமுமில்லை.

ஆனால் குயில்பாட்டு போன்ற அற்புதக் கவிதையை எந்த ஒரு தனி அர்த்தத் தளத்திலும் நிலை நிறுத்த முடியாது. அர்த்தப் பன்மைதான், கவிதையின் அடிநாதம். தெய்வீகக் காதல் / மானுடக் காதல், ஜீவாத்மா / பரமாத்மா, கனவு / நனவு போன்ற முரண்பாடுகள் ஒன்றோடு ஒன்று மோதுவதைத்தான் கவிதை காட்டுகிறது. இதை கட்டுடைத்தல் (deconstruction) திறனாய்வு மூலம் காட்ட முயலலாம்.

ஆசிரியர் சார்பு நூல் பற்றி சிவமணி கூறுகிறார். ஆனால், குயில்பாட்டில் கீத்ஸின் வானம்பாடிப் பாடலும், என்டிமியான் என்ற பாடலும் இழையோடுவதை மறுக்க முடியாது. குயில்பாட்டின் கடைசி வரிகள் கற்பனையின் சூழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. கீத்ஸும் Fancy cannot cheat so well. As she is famed to do deceiving elf என்று வானம்பாடிப் பாடலை முடிக்கிறார். தூங்குகிறேனா விழித்திருக்கிறேனா? என்ற ஐயம்தான் அதில் கடைசி வரி. இது குறித்து ‘பொதிகைத் தென்றலும் மேலைக்காற்றும்’ என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

ஆனால், பாரதியில் வேதாந்தம் ஒரு மூலநிலைக் (Archetype) காதலாகக் காட்டப்பட்டுள்ளது. ஆத்மாவின் உண்மை நிலை காதல். அது கற்பனையோடும் இணைக்கப்படுகிறது. ஆனால் எல்லாத்திறனாய்வுகளும் கவிதையை நோக்கி இட்டுச் செல்லும் வழிகள் தாம்; மொழியியல் திறனாய்வும் அப்படி ஒரு வழியே. குயில் பாட்டின் முழுமையையும் அது காட்டாவிட்டாலும் அதன் மொழித்திறனை முழுமையாகக் காட்டும் ஒரு முழுமையான ஆய்வு பேராசிரியர் சண்முகனாரின் நூல் என்பதில் ஐயமில்லை.


●



## அஞ்சலி

ராஜபாளையத்தில்
சிறப்பான மருத்துவ
சேவையில் ஈடுபட்டு வந்தவரும்,
மகத்தான சமூக சேவகரும்,
‘மக்கள் மருத்துவர்’
என்று மக்களால் அன்புடன்
அழைக்கப்பட்டவரும்,
எழுத்தாளருமான
மருத்துவர் சாந்திலால்
அவர்களின் மறைவுக்கு
‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’
அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்கிறது.


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





₹ 750/-





₹ 195/-





₹ 200/-





₹ 175/-





₹ 145/-





₹ 135/-





₹ 135/-





₹ 140/-





₹ 295/-




₹ 225/-





₹ 155/-




₹ 375/-

அஞ்சலி



# கோவை ஞானியின் மெய்யியல் பார்வை

இரா. அறவேந்தன்

'கோவை ஞானி' என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பெற்ற அய்யா கி.பழனிச்சாமி இன்று நம்மிடம் இல்லை. அவர், நம்மீது செலுத்திய அன்பால் அக்கறையால் நம்மனத்துள் வாழ்கிறார். இது போன்று தமிழ் மண்மீதும் தமிழ் மக்கள்மீதும் அவர் கொண்டிருந்த பேர் அக்கறையால் தொடர்ந்து இம்மண்ணில் வாழ்வார். தமிழ் மண் தமிழ் மக்கள் என்ற இச் சொல்லாடல்களின் எல்லையை உலகம் மானுடம் என மாற்றி அமைத்துக்கொள்ள நமக்கு ஞானியின் கருத்தியல் இடமளிக்கின்றது. இக்கருத்தியலை அவர்தம் ஒட்டுமொத்த எழுத்துக்களிலிருந்து நாம் வருவித்துக் கொள்ளலாம். குறிப்பாக 'மார்க்சிய அழகியல்' என்ற குறுநூல் மானுடச் சமதர்மத்தை அடைவதற்கான செயல் திட்டங்களைப்


பதிவிட்டுள்ளதாகக் கருதலாம். பொதுவாக, மார்க்சியம் கம்னியூசம் பெரியாரியம் என்ற அடிப்படைகளில் அமைகின்ற எழுத்துக்களில் எல்லாம் 'கருத்துக்கள்' ஆதிக்கம் செலுத்தும். அதாவது, எந்த ஒரு விடுதலை பற்றிப் பேசும் எழுத்துகளும், கருத்துக்களை விதிமுறைகளாக சூத்திரங்களாக வடிவமைத்துக்கொள்வது இயல்பு. ஞானியின் எழுத்துக்களிலும் இந்த வடிவாக்கத்தைக் காணலாம். எனினும், ஞானி இந்த வடிவாக்கத்தைக், கலையழகு கலையுணர்வு பேரழகு படைப்பியக்கம் எனும் மற்றோர் இணைக்கருத்தியலுடன் வலியுறுத்துகின்றார். இதுதான் ஞானியின் மெய்யியல் அல்லது சிறப்பு.

ஆதிக்கம் அதிகாரம் ஏகாதிபத்தியம் முதலாளித்துவம் போன்ற சொல்லாடல்களின் வழி மனிதச் சமதர்மத்திற்கு எதிரான போக்குகளை அடையாளப்படுத்துவது ஞானியின் இயல்பு. இந்தச் சமதர்ம எதிர்நிலைகளுக்கு எதிராக எதிர்வினை ஆற்ற வேண்டும் என்பதனை ஞானி அழுத்தமாக எடுத்துரைக்கின்றார். இந்த எதிர்வினை சமூகத்தில் களப்போராட்டமாக அமைவதும் உண்டு. களப்போராட்டங்களுக்கு அடிப்படையாக அமையும் கருத்துக்களை உருவாக்கிச் சமூகத்தில் பதிவிட்டுச் சிந்திக்கச்செய்தலாகவும் அமைதல் உண்டு. இவற்றில், ஞானி கருத்துருவாக்கச் செயல்பாட்டாளராகத் தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டார். நூல்களைத் தேடி வாசித்தல், வாசித்தவற்றை நண்பர்களுடன் விவாதித்தல், வாழ்வியல் சூழல்களில் நிலவும் பிரச்சினைகளுக்கான வழிமுறைகளை உருவாக்குதல் என்று ஞானியின் வாழ்வியல் பயணம் அமைந்தது. கோவையில் அவர் நிகழ்த்திய விவாத வட்டங்களும் கருத்தரங்குகளும் வெவ்வேறு பெயர்களில் அவர் வெளியிட்டு வந்த இதழ்களும் சளைக்காது அவர் அளித்துவந்த பேட்டிகளும் எழுதிய கட்டுரைகளும் நண்பர்களுடனான தொலைபேசி உரையாடல்களும் அவருக்கான களமாக அமைந்தன. இதனை ஒட்டு அரசியலுக்கு அப்பாற்பட்ட கட்சிச்சார்புடனும் செய்துள்ளார்; கட்சியிலிருந்து விலகி நின்றும் செய்துள்ளார்; தம் சம வயதொத்த நண்பர்களின் கூட்டுழைப்போடும் செய்துள்ளார்; தனித்து நின்றும் செய்துள்ளார். இந்த அறிவு சேகரிப்புக்கும் பகிர்வுக்கும் அவர்தம் கண்பார்வை என்றும் தடைக்கல்லாக இருந்ததில்லை.

சத்தான கலையுணர்வை, ஆதிக்கமற்ற சமதர்மச் சமூகத்தை மனிதன் அடைவதற்கான வழிமுறையாக ஞானி கருதுகின்றார். புற உலகம் மனிதனின் மனத்தைப் பாதிக்கின்றது. அந்த மனம் தூண்டப்பட்டநிலையில் புறத்தின்மீது எதிர்வினையாற்றுகின்றது. இந்த எதிர்வினை, கலாச்சாரம் இலக்கியம் தத்துவம் எனப் பல்வேறு வடிவங்களாக வெளிப்படுகின்றது. ஏற்கெனவே உருவாக்கப் பெற்றுவிட்ட கலாச்சாரத்தின் மீதும் இலக்கியத்தின் மீதும் தத்துவத்தின் மீதும் எதிர்வினையாற்றுகின்றது. இதுபோன்ற எதிர்வினையாற்றுதலை மார்க்சிய எழுத்துக்கள் பதிவிட்டுள்ளன. இந்தப் பதிவினை ஞானி விரிவாக்கம் செய்கின்றார். ஞானியின் விரிவாக்கத்தில் மையம் கொண்டுள்ள முக்கியக்கூறு மாற்றுக் கருத்தினரை ஒதுக்க வேண்டியது இல்லை; எதனையும் விமர்சனக் கண்ணோட்டத்தோடு அணுகி அங்கு இருக்கின்ற சமதர்மத்துக்குச் சாதகமானவற்றைத் தொகுத்துக்கொள்ள இயலும் என்பது ஞானியின் அசைக்கமுடியாத நம்பிக்கையாக உள்ளது. இந்த அடிப்படையில்தான் திராவிட இயக்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடக்ககால மார்க்சியர்கள் விமர்சனம் செய்ததைத் தவறு என்று குறிப்பிடுகின்றார். மார்க்சிய எழுத்தாளர்கள் என்று ஒருவகை உண்டு. மார்க்சியக் கண்ணோட்டம் உடையவர்கள் என்று ஒருவகை உண்டு. இந்த இரண்டுவகைப் படைப்பாளர்களுக்கும் அப்பாற்பட்ட படைப்பாளர்களிடமிருந்தும் சமதர்மத்தை அடைவதற்கான கூறுகளைச் சேகரித்துக்கொள்ள இயலும் என்கிறார். கநாசு, சுந்தரராமசாமி, வெங்கட்சாமிநாதன், பிரமிள், ஜெயகாந்தன்,ஜெயமோகன், தி.ஜானகிராமன், மௌனி, கு.ப.ரா என்று பெயர்களைக்குறிப்பிட்டு இவர்களையெல்லாம் மார்க்சிய எதிரிகள் பட்டியலில் சேர்க்க முடியாது என்கிறார்(மார்க்சிய அழகியல், ப.163). சுந்தரராமசாமி,ஜெயமோகன் முதலானவர்களின் படைப்புகளில் காணலாகும் வாழ்வியல் நெருக்கடிகளை எடுத்துவிளக்கவும் செய்கின்றார். கேசவன், கைலாசபதி,வானமாமலை, பா.செயப்பிரகாசம் முதலானவர்கள் தன்னுடைய கருத்துக்களைத் தவறாகப் புரிந்துகொண்டு எதிர்வினை ஆற்றியவர்கள் என்று குறிப்பிடும் ஞானி, அவர்களின் ஆக்கப்பூர்வமான எழுத்துக்களுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளார். ரகுநாதனின் பாரதி தொடர்பான புரிதலை ஏற்கின்றார்.அதே நேரம் இளங்கோவடிகள் தொடர்பான ஆய்வில் மன நிறைவு இல்லை என்கிறார். திருவள்ளுவரையும், இளங்கோவடிகளையும் வர்க்கக் கண்ணோட்டத்துடன் விமர்சனம் செய்யும் மார்க்சியர்களை ஞானி கண்டிக்கின்றார்.எல்லா வகையான வாழ்வியல் நெருக்கடிகளையும் வர்க்கம் பொருள்முதல்வாதம் அடிக்கட்டுமானம் மேல்கட்டுமானம் என்ற அடிப்படைகளில்

புர்ந்துகொள்ள இயலாது என்கிறார். அதாவது, எந்த ஒரு பிரச்சினைக்குமான காரணத்தை வரலாற்றில் தேடுதல் வரலாற்றுச்சூழலில் வைத்துப் புரிந்துகொள்ளுதல் வேண்டும் என்கிறார். இந்தப் பார்வையின் அடிப்படையில்தான் மாற்றுக் கருத்துடையவர்களிடம் இருந்தும் நமக்குத்தேவையான ஆக்கக் கூறுகளைச் சேகரிக்க இயலும் என்கிறார். இங்குதான் ஞானியின் மெய்யியல் திருவள்ளுவரின் ஒப்புரவு எனும் கருத்தாக்கத்தில் கட்டமைக்கப் பெற்றுள்ளதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. கருத்தை எதிர்ப்பது வேறு; கருத்துக்குரியவரை வெறுப்பது வேறு. எதிர்ப்பு ஆக்கப்பூர்வமான விளைச்சலுக்கு வழிவகுக்க வேண்டுமே தவிர, வெறுப்பை உருவாக்கிச் சமூகத்தில் அமைதியற்ற சூழல் நிலவிட நாம் துணைபோகக் கூடாது என்பதே ஞானியின் மெய்யியல் எனலாம். இதனை, எங்கும் எந்தச் சூழலுக்கும் ஏற்ற ஒன்றாக நம்மால் அடையாளப் படுத்திக்கொள்ளவும் இயலும்.


ஞானி தம் கருத்துக்களைக், கருத்துக்களாகப் பதிவிடுவதற்கு அப்பால் செயலாக்கத்திற்கான வழிமுறைகளை வகுத்தளிக்கவும் செய்கின்றார். தமிழகத்தில் எங்கெல்லாம் சாதி மதம் முதலான கலவரங்கள் நிகழ்கின்றனவோ அந்தப் பகுதிகளை மையமிட்டுப் படைப்பாளர் முகாம்கள் நிகழ்த்தவேண்டும் என்கிறார். இந்த முகாம்களில் இளம் படைப்பாளிகளுக்குப் பயிற்சி அளிக்கலாம் என்கிறார். இதற்கு ஜீவாவின் பசுமை இயக்கம் சார்ந்த பணிமனைகளைக் கவனத்தில் கொள்ளலாம் என்கிறார். இந்த முகாம்களில் இளைஞர்களைத் திரட்டி அமரவைத்துப் பயிற்சி எனும் போர்வையில் ஆசிரிய அதிகாரம் உருவாவதை ஞானி விரும்பவில்லை. இதற்கு மாறாக ஞானி முன்வைத்துள்ள திட்டம் கவனத்திற்குரியதாக உள்ளது.குறிப்பிட்ட சிறு நகரங்களைத் தெரிவு செய்தல், அந்த நகரங்களை ஒட்டிய சிற்றூர்களுக்குப் படைப்பார்வம் உள்ள இளைஞர்களை அனுப்பித் தங்கச் செய்தல், அங்குள்ள உழவர்கள் நெசவாளர்கள் முதலானவர்களின் வாழ்வியல் முறைகளை பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளச் செய்தல்,மீண்டும் முகாமிற்குத் திரும்பி விவாதித்தல், படைப்புகளை உருவாக்குதல் என்ற செயல் திட்டத்தை ஞானி வடிவமைக்கின்றார்.இந்த முகாம்களில் மூத்த படைப்பாளர்கள் பங்கேற்று ஆரோக்கியமான வழிகாட்டுதல்களை வழங்கலாம் என்றும் குறிப்பிடுகின்றார். ஞானியின் இந்தச் செயல்திட்டம் மேலோட்டமான பார்வையில் இலக்கியப் பயிற்சிப்பட்டறைகள் போன்று தோன்றும்.ஆனால்,ஞானியின் இச்செயல்



திட்டத்தை அவர்தம் ஒட்டுமொத்தமான எழுத்து நீரோட்டத்தில் வைத்துப் பார்த்தால் அவர் கட்டமைக்க விரும்பும் மெய்யியலுக்கான அடிப்படை என்பது தெரியவரும்;படைப்பியக்கம் வளம்பெற வேண்டும் அந்த வளத்திற்குத் திறனாய்வு துணை நிற்க வேண்டும்.இந்தப் படைப்பியக்கத்தால் கருத்துக்கள் விதைகளாக்கப் பெற்றுச் சிந்தனை மாற்றம் உருவாகும். சிந்தனை மாற்றத்தால் எதிர்வினையாற்றுதல் இயல்பாகும். இந்தத் தொடர்ச்சியான நிகழ்வு அதிர்வலைகளை உள்ளடக்கியதாக ஞானியின் மெய்யியல் பார்வை உள்ளது என்பது தெரியவரும். ஞானியின் இப்பார்வை , நீண்ட கால எல்லையை உட்செறித்தது; சமூகப்பிரச்சினைகள் பலவற்றுக்கு உடனடித் தீர்வு சாத்தியமற்றது என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது. ஞானி குறிப்பிடுவதுபோல நாம் நமக்கான உணவு, உடை, வீடு, இல்லறவாழ்க்கை முதலானவற்றை இந்தச் சமூகத்தில் உள்ள ஆதிக்கச் சக்திகளின் வழியாகத்தான் பெரிதும் பெறுகின்றோம். இந்த ஆதிக்கச் சக்திகளிடம் இழையோடும் சம தர்மமற்ற நிலையை எதிர்த்துப் போராடுகையில் நாம் அவர்களோடே பயணிக்கின்றோம்; அவர்களின் துணையின்றிப் பயணிக்க முடியாத அளவிற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இச் சூழலைப் புரிந்து கொண்டால் ஞானியின் கலைப்படைப்பு வழியிலான சமதர்ம மெய்யியலின் தேவையைப் புரிந்துகொள்ள இயலும்.

**துணையன்**


ஞானி, 2019, மார்க்சிய அழகியல், FREETAMILEBOOKS. com, கணியம் அறக்கட்டளை.



# ஞானசவுந்தரி கதை அம்மானை - திரைப்படம் தோல் பாவைக் கூத்து - நாடகம்

அ.கா.பெருமாள்

எழுபதுகளின் ஆரம்பத்தில் கன்னியாகுமரி அருகே மகாதானபுரம் ஊரில் சாதாரண ஓலை வீட்டின் முன், வாகை மரத்தின் நிழலில் கயிற்றுக் கட்டிலில் படுத்துக்கிடந்த கோபால ராவையும் (1882 - 1976). அவரது கடைசித் தம்பி சுப்பையா ராவையும் (1908 - 2003) சந்தித்தபோது நிறையப் பேசினோம்.

கோபாலராவ் அன்று ஞானசவுந்தரி தோல்பாவைக் கூத்து பற்றியும் கொஞ்சம் சொன்னார். தொடர்ந்து பேச அது பற்றிய அறிவும் எனக்கு இல்லை. அவரும் தளர்ந்து இருந்தார், காது மந்தம். அன்றைய பேச்சின் வழி ஒரு விஷயத்தை மட்டும் அறிந்து கொண்டேன். தோல்பாவைக் கூத்து நிகழ்ச்சியில் இராமாயணம் தவிர பிற கதைகள் எல்லாம் 1920ஆம் நூற்றாண்டில்தான் தயாரிக்கப்பட்டன. பார்வையாளர்களின் வேண்டுகோளும் இதற்கு ஒரு காரணம். நல்லதங்காள் கதையும் அப்படி வந்ததுதான் என்பது உண்மையாகிறது.

கோபாலராவின் தந்தை - கிருஷ்ணராவ் (1830 - 1900) காலத்தில்தான் நல்லதங்காள் கதை தோல்பாவைக் கூத்தில் அறிமுகமானது. வாய்மொழியாக இருந்த கதை, ஸ்பெஷல் நாடகக் கதை, அம்மானைக் கதை ஆகியன கூத்துக்குப் பயன்பட்டன. 1935இல் பி.பி.ராவ் இயக்கிய ஏஞ்சல் பிலிம்ஸ் வெளியிட்ட திரைப்படத்தின் காட்சிகளை கோபாலராவ் பயன்படுத்தினார்.

நல்லதங்காள் சினிமா 1955லும் வந்தது. இது ஆர்.எஸ்.மனோகர் நடித்தது. பி.வி.கிருஷ்ணய்யர் இயக்கியது. மருதகாசி பாடல்கள் எழுதினார்.

எம்.எஸ்.சீர்காழி கோவிந்தராசன், பி.லீலா போன்றோர் பாடினர். கோபாலராவ், பி.லீலா பாடிய 'அன்னையும் தந்தையும் இல்லாத' என்ற பாடலைப் பாடியிருக்கிறார். அது அவரோடு முடிந்தது.

நல்லதங்காள் கூத்துக்கு ஹட்ஹின்ஸ் நாடகக் கோஷ்டியார் தயாரித்த ரிக்கார்டு பாட்டுக்களையே 60களில் பயன்படுத்தினர். ஆனால் ஞானசவுந்தரி கூத்து என்பதற்கு நல்லதங்காள் கூத்து உருவான பின்னணி கிடையாது. ஞானசவுந்தரி கூத்து முழுக்கவும் சினிமாவைப் பார்த்துத் தயாரிக்கப்பட்டது.

கோபாலராவ் ஒருமுறை தோவாளை தாலுகாவில் ஒரு சிறு கிராமத்தில் ஞானசவுந்தரி கதை நடத்தியபோது, ஊர்த் தலைவர், "இதேபோல் நாளையும் இந்தக் கதையை நடத்துங்கள், சென்னையிலிருந்து ஒருவர் கூத்தைப் பார்க்க வருகிறார்" என்றாராம்.

கோபால ராவ் அடுத்த நாள் கூத்து நடத்த சிறப்பு ஏற்பாடுகளுடன் இருந்தார். பார்வையாளர்களுக்கு இடையூறு இல்லாதவாறு பிரமுகர் உட்கார நாற்காலி போட்டிருந்தார். பிரமுகர் வந்தார்; கூத்து பார்த்தார். கோபாலராவை அழைத்துப் பாராட்டினார். இரண்டு வேட்டி சேலை, கொஞ்சம் பணமும் கொடுத்திருக்கிறார்.

பரமசிவராவுக்கு அப்போது 13 வயது. இந்தப் பழைய கதையைச் சொல்லிவிட்டு அன்று கூத்துப் பார்த்தவர் சிட்டாடல் பிலிம்ஸ் தயாரித்த ஞானசவுந்தரி சினிமாவுக்கு உரையாடல் எழுதியவர்; கடுக்கரை என்ற ஊரினர்; நாஞ்சில் நாடு T.N.ராஜப்பா என்றார்.

இந்த நிகழ்ச்சி நடந்து 2-3 நாட்களில் நாகர்கோவிலில் - நடந்த இலக்கியக் கூட்டம் ஒன்றில் ராஜப்பா பேசியிருக்கிறார். அதில் "ஞானசவுந்தரி பாவைக் கூத்து பார்த்தேன், என் உரையாடல் கதைக்குப் பெருமை சேர்ப்பது மாதிரி கூத்து நடத்தினார் கோபாலராவ் என்றாராம்." இது தொண்டன் இதழில் (1952 மார்ச்) பதிவாகியிருக்கிறது.

இப்படியாக 80களின் ஆரம்பத்தில் பரமசிவராவ் நடத்திய ஞானசவுந்தரி கூத்தை நான் பார்த்திருந்தாலும் ஞானசவுந்தரி அம்மானையைப் படிக்கவில்லை. எனது பி.எச்டி ஆய்வுக்காகக் கதைப்பாடல் தேடி அலைந்தபோது ஆறுமுகப்பெருமாள் நாடார் வீட்டில் ஞானசவுந்தரி அம்மானை நூலின் ஒரு பிரதியையும் (1979) ஏட்டுப் பிரதியையும் பார்த்தேன். அது என் ஆய்வுப் பரப்பில் இல்லாததால் ஆழ்ந்து படிக்கவில்லை.

"ஞானசவுந்தரி அம்மானை" என்னும் கதைப்பாடல் கன்னியாகுமரி மாவட்டத்தில் 19ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்திருக்கிறது. பெரிய எழுத்து சித்திர புத்திரன் கதை போல் இந்த அம்மானையை ஒருவன் படிக்க பிறர் கேட்பது என்ற பழக்கம் இருந்திருக்கிறது.

தமிழ் எழுத்து வடிவம் தெரியாத ஆனால் தமிழ் தெரிந்த கத்தோலிக்க மலையாளிகள் இக்கதையை மலையாள எழுத்தில் எழுதிவைத்துப் படித்திருக்கிறார்கள். இது 1945இல் அச்சில் வந்திருக்கிறது. பதிப்பாசிரியர் (பாற சாலை பர்னபாஸ்) இதன் ஒரு பிரதியை மணவாளக்குறிச்சி விக்கிரமன் தம்பியின் வீட்டில் பார்த்திருக்கிறேன்.

இந்த அம்மானையை மலையாளத்தில் மொழிபெயர்க்கும் வேலையில் திக்குறிச்சி கங்காதரன் நாயர் இருந்தார். இவர் தமிழிலிருந்து 18க்கு மேற்பட்ட கதைப் பாடல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இவை ஒரே நூலாக வந்திருக்கிறது.

ஞானசவுந்தரி அம்மானை எழுதியவரின் ஊரான தளவாய் புரத்தில் பேரா. பிரான்சிஸ் என்பவரின் வீட்டில் தேவசகாயம் பிள்ளையின் நாடக ஏட்டைத் தேடிச் சென்றபோது அதே ஊரில் ஞானசவுந்தரி அம்மானை ஏடு இருப்பதை அறிந்தேன். சென்று கேட்க முடியாத சூழல். பள்ளம், வில்லிக்கீறி என்ற ஊரிலும் அந்த ஏடு உள்ளது என்று ஒருவர் சொன்னார்.

80களில் தேடியிருந்தால் ஒன்று ரெண்டு ஏடுகள் கிடைத்திருக்கும், நான் முயற்சிக்கவில்லை.

இந்த நூல் அம்மானை வடிவிலானது. 3865 வரிகள். 149 வருக்கங்கள். இது மலையாள, பேச்சு வழக்குக் கலப்புடையது. ஆசிரியர் பெயர் நூலில் இல்லை. இது அரங்கேறியது பற்றிய குறிப்பு உண்டு.

**அம்மானை பாடி அரங்கேற்ற வைத்த தலம்**
**இம்மாநிலத்தில் இலங்கும் பெரும் பதியாம்**
**மந்திக்காட்டூர் தனிலே மாதவத் தோன் கிஷன்**
**அந்தோணி ஆலயத்தில் அமிர்தனார் சர்குருவின்**
**திருநாள் கொடி யேறி தேரோட்டம் காணவந்து**
**இருந்த சபையோனின் இன்னாசி முத்துப்பிள்ளை**
**சபை எல்லாம் போர்த்த சுவாமிநாதப் புலவர்**
**சுயவிருப சொல்லெடுத்து துடர்ந்து முகித்த கதை**

என்கிறது நூல்.

இங்குக் குறிப்பிடப்படும் மந்திக்காட்டூர் நாகர்கோவில் புனித சிலுவைக் கல்லூரி அருகே உள்ள ஊர்; இங்குள்ள அந்தோணியார் கோவிலில்தான் நூல் அரங்கேறியது என்கிறார் பதிப்பாசிரியர் (தி.நடராசன் 1979 ப.11). இந்தக் கோவில் பேச்சு வழக்கில் குருசடிக் கோவில் எனப்படுகிறது.

இந்தக் கட்டுரை எழுதுமுன் இந்த ஊருக்கும் போனேன். வயதான ஒன்றிரண்டு பேரிடம் பேசினேன். அவர்கள் ஞானசவுந்தரி கதையை அறிந்திருந்தனர். நூல் பற்றியும் சொன்னார்கள். அவர்களின் தகவல்படி இந்நூல் 19ஆம் நூற்றாண்டில் அரங்கேறியிருக்கலாம் என்று ஊகித்தேன்.

குருசடிக் கோவில் திருவிழாவில் 9ஆம் நாள் தேரோட்ட விழா அன்று மாலையில் பக்தர்கள் முன் இது அரங்கேறியது. அப்போது சத்குரு இன்னாசி முத்துப் பிள்ளையும் சுவாமிநாதப் புலவரும் உடன் இருந்தனர். அதோடு சுவாமிநாதன் முதலடியை எடுத்துக் கொடுக்க ஆசிரியர் நூலைப் படித்தார் என்று நூல் கூறுகிறது.

நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை என்றாலும் நூல் இயற்றியவரின் ஊர் குறிப்பிடப்படுகிறது.

**சிறப்பிலங்கும் கோட்டாற்றுச்**
**சிறந்த தளவாய்புரத்தில்**
**சர்வேஸ்வரன் நாமம் தருவனார்**
**புத்திரன்தான்**

என்ற வரிகளில் குறிப்பிடப்படும் 'தளவாய்புரம்' என்ற ஊரைச் சார்ந்தவர் இந்த அம்மானை ஆசிரியர். இது இப்போது நாகர்கோவில் இராமன்புதூர் அருகே உள்ள ஊர். இப்போது கத்தோலிக்கத்தினர் மட்டுமே வாழ்கின்றனர்.

இந்நூல் எழுதப்பட்ட காலத்தை அறிய நூலில் ஒரு சான்று உண்டு.

**ஏடெழுத நான் துவங்கி எண்பத்து**
**ரெண்டாண்டில்**
**தேடியே ஆனித் திங்கள் பிறந்த**
**தேதி ஆறதிலே**

என்ற வரிகளின் அடிப்படையில் இந்நூல் 73 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது என்கிறார் பதிப்பாசிரியர். அதாவது இந்நூலில் வெளியிடப்பட்ட 1979ஆம் ஆண்டிலிருந்து 73 ஆண்டுகளைக் கழித்தால் 1906 வரும். இந்த ஆண்டில் நூல் எழுதப்பட்டது என்பது நூலாசிரியர் கருத்து. இது தவறான கருத்து.

நாகர்கோவிலில் 19ஆம் நூற்றாண்டில் அச்சுப் புத்தகம் வந்துவிட்டது. 1870 அளவில் தாளில் எழுதுவதும் சகஜமாகிவிட்டது. ஆட்சியர் அலுவலகத்தில் தாளில் எழுதுவதற்குப் பயிற்சியும் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் 1906இல் இந்த அம்மானை ஓலையில் எழுதப்பட்டது என்று கூறுவது பொருந்துமாறில்லை

இந்நூலில் "ஏடெழுத நான் துவக்கி எண்பத்தி ரெண்டளவில்" என்பது மலையாள வருஷத்தைக் குறிப்பது, ம.ஆ.82 என்பதை 982 ஆகக் கொள்ளவேண்டும். இதில் ஆனி மாதம் என்ற குறிப்பும் உள்ளது. ஆகவே இந்த அம்மானை கி.பி.1806இல் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதலாம்.

ஞானசவுந்தரி அம்மானை கதையின் சுருக்கம் வருமாறு: இதே கதை மிகச் சிறிய மாற்றங்களுடன் சினிமா, தோல்பாவைக்கூத்து, நாடகம் ஆகியவற்றில் வருகிறது. மூலக்கதை ஒன்றுதான்.

ரோம அரசர் தர்மர். அவரது மனைவி உடல்நலமில்லாமல் இறந்துவிட்டாள். 6 வயதில் பெண் குழந்தை உண்டு. பெயர் ஞானசவுந்தரி. தர்மன் லேனாள் என்ற பெண்ணை இரண்டாவதாக மணம் செய்து கொண்டான். ஒருமுறை பொது ஜனங்கள், அரசனிடம் காட்டு விலங்குகள் விவசாய நிலங்களை அழிக்கின்றன என்று முறையிட்டார்கள். அதனால் அரசன் விலங்குகளை வேட்டையாடப் போனான். லேனாள் சித்தியின் பொறுப்பில் இருந்தாள்.

ஞானசவுந்தரியை ஒழித்தால் தனக்கு நிம்மதி என்று நினைத்த லேனாள் அதற்குத் திட்டமிட்டாள். இரண்டு கொலையாளிகளுக்குப் பொன் கொடுத்து ஞானசவுந்தரியைக் காட்டில் கொண்டுபோய் வெட்டிவிடுமாறு கூறினாள். கொலையாளிகள் அவளை காட்டில் வெட்ட முயன்றபோது ஏகத்துவான் இளவரசன் பிலவேந்திரன் வந்துவிட்டான், அதனால் கொலையாளிகள் அவளது கையை மட்டும் வெட்டிவிட்டுச் சென்றனர்.

இளவரசன் அவளை தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தான்; பெற்றோர் விருப்பமின்றி அவளை மணந்து கொண்டான். தருமர் வேட்டையை முடித்துவிட்டு நாட்டுக்கு வந்தார். லேனாள் "எவ்வளவு சொல்லியும் கேட்காமல் உங்களைத் தேடி காட்டுக்குப்போய் விட்டாள்" என்கிறாள். மன்னனும் அதை நம்புகிறான்.

இந்தச் சமயத்தில் பகைவர்கள் தருமனின் நாட்டின் மேல் படையெடுத்தனர். தருமன், பிலவேந்திரனிடம் உதவி கேட்டான். அவன் படையுடன் வந்தான். போர் நடந்தது. அப்போது பிலவேந்திரனுக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தியைத் தூதன் கொண்டு வந்தான். பிலவேந்திரன் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி ஒரு கடிதம் கொடுத்தான்.

அதன்மூலம், ஞானசவுந்தரி உயிருடன் இருப்பதை லேனாள் அறிந்தாள். அவளை எப்படியும் கொல்லத் திட்டமிட்டு தூதனைச் சூழச்சியால் வரவழைத்தாள். பிலவேந்திரன் அவனிடம் கொடுத்த ஓலையைக் கைப்பற்றினாள். வேறு ஒரு ஓலையை எழுதி அவன் பையில் வைத்தாள். அதில் ஞானசவுந்தரியையும் அவளது குழந்தையையும் கொல்லும்படி பிலவேந்திரனின் தந்தைக்கு செய்தி இருந்தது. ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஞானசவுந்தரியைக் காட்டுக்கு அனுப்பிவிட்டனர்.

ஞானசவுந்தரி காட்டில் பரலோக தேவநாதனைக் கண்டாள். இழந்த கைகளைப் பெற்றாள். பூரண பொலிவு பெற்றாள். பிலவேந்திரன் போர் முடிந்த பின் தன் வீட்டிற்குத் திரும்பினான். நடந்ததை அறிந்தான் காட்டுக்குச் சென்றான். ஞானசவுந்தரியைக் கண்டான். திரும்பியழைத்தான். தருமரிடம் நடந்ததைச் சொன்னான். விஷயம் தெரிந்து, அவர் தன் மகளை ஆசையோடு அழைத்துக் கொண்டார். லேனாளை

நெருப்பில் தள்ளுமாறு தருமர் ஆணையிட்டார். தருமரின் நாடு பிலவேந்திரனின் நாட்டுடன் இணைந்தது.

காலம் கடந்தது. தருமன் இறந்தான். பின் பிலவேந்திரன், ஞானசவுந்தரி ஆகியோரும் இறந்தனர்.

⋆⋆⋆

இந்த அம்மானையில் 12 கிளைக்கதைகள் உள்ளன. அவை சந்தியாகு மன்னன் கதை, செனுகர் பூராக்கினி கதை, கர்த்தர் பன்னிரண்டாம் வயதில் தப்பிச் சென்ற கதை, சவேரியார் பெண் குழந்தையை ஆண் குழந்தையாக ஆக்கிய கதை, எஸ்தாக்கியார் குழந்தைகள் கதை, கர்த்தர் தண்ணீரைத் திராட்சை ரசமாக்கிய கதை, விசத்தியப்பர் கழுதையின் கழுத்தை அறுத்துப் பின் பொருத்திய கதை ஆகியன.

திருவிதாங்கூரில் போர்ச்சுக்கீசியரின் வரவிற்குப் பின் வாசகப்பா, பாஸ்கா போன்ற கலை வடிவங்கள் நுழைந்தன. இவற்றிற்குப் பின்னணியாக உள்ள கதைகளும் கத்தோலிக்கரிடம் வாய்மொழியாகப் பேசப்பட்டன. இப்படியான கதைகளில் ஞானசவுந்தரி கதையும் ஒன்று.

மத்தேயு சுவிஷேசத்தில் வரும் சில நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது இக்கதை. ஆபிரகாம் (தருமர்), ஆதார் (ஞானசவுந்தரி), சாராய் (லேனாள்) என்னும் பாத்திரங்களுடன் தொடர்புடையது.

மலைப்பொழிவில் (மத்தேயு) துயருறுவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் என்பதற்கு ஞானசவுந்தரி கதையை சான்றாக்குவர்.

விவிலியக் கதைப்படி லேனாள் தூக்கிலிடப்பட்டு நெருப்பில் தள்ளப்படுகிறாள்.

⋆⋆⋆

ஞானசவுந்தரி அம்மானை அரங்கேறிய மந்தங்கரை குருசடிக் கோவிலில் 80களில் கூட ஞானசவுந்தரி சினிமாவை பொதுமக்களுக்காகக் காட்டினார்களாம். கேபிள் டி.வி கூட பரவலாகாத காலம். அதனால் அந்தக் கதை பரவலாக அந்த ஊர் மக்களுக்குத் தெரிந்திருக்கிறது.

ஞானசவுந்தரி கதையை ஒரே சமயத்தில் இரண்டு பேர் திரைப்படமாக்கினார்கள். ஏன் அப்படிச் செய்தார்கள் என்று தெரியவில்லை.

இந்திய சுதந்திரத்தின் அடுத்த வருஷம் ஜெமினியின் ஞானசவுந்தரி சினிமா வந்தது. (1948 ஜூன்) இயக்கம் முருகதாசா, தயாரிப்பு நாயனார். கொத்தமங்கலம் சுப்பு திரைக்கதை உரையாடலையும் சில பாடல்களையும் எழுதியிருந்தார். பாபநாசம் சிவனும் சில பாடல்களை எழுதியிருந்தார். இசை எம்.டி.பார்த்தசாரதி.

இந்த சினிமாவில் பிலவேந்திரனாக எம்.கே. ராதாவும் ஞானசவுந்தரியாக எஸ்.வி.சுசீலாவும் நடித்திருக்கின்றனர். படம் படுதோல்வி. இதே சமயத்தில் ஜோசப் தளியத் எடுத்த படம் அமோக வெற்றியடைந்தது. அதனால் ஜெமினிவாசன் தான் எடுத்த படத்தின் படச் சுருளை எல்லாம் திரும்பிப் பெற்று ஒன்றாகப் போட்டு நெருப்பு வைக்கச் சொன்னாராம். அந்தப் படம் எடுக்கப்பட்டதன் அடையாளம் கூட இல்லாமல் ஆனது.

சிட்டாடல் பிலிம்ஸ் தயாரித்த ஞானசவுந்தரி சினிமாவும், 1948 தை மாதம் 8ஆம் தேதி வெள்ளியன்று வெளியானது. ஜெமினி படம் தோல்வியடைந்த பிறகுதான் சிட்டாடல் படம் வந்தது. இந்த சினிமாவை ஜோசப் தளியத், எம்.நாகூர் இருவரும் இயக்கியிருந்தனர். தயாரிப்பு ஜோசப் தளியத். இது அமோக வெற்றிப் படம்.

படம் முழுவதும் நீயோடன் ஸ்டுடியோவில் எடுத்திருந்தார்கள். இந்தப் படத்தின் உரையாடலை நாஞ்சில் நாடு டி.என்.ராஜப்பா என்பவர் எழுதியிருந்தார். இவர் இன்றைய கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், கடுக்கரை ஊரைச்



சார்ந்தவர். இவரது தம்பி பிரபல தி.மு.க. பிரமுகர் நீலநாராயணன், இப்படத்தில் இருபது பாடல்கள் இருந்தன. பாடல்களை பாலச்சந்திரகவி, கம்பதாசன், பாபநாசம் சிவன், கே.ஆர்.சாரங்கபாணிபிள்ளை, கே.டி.சந்தானம் ஆகியோர் எழுதியிருந்தனர். இசை எஸ்.வி.வெங்கட்ராமையா. லலிதா, பத்மினி இருவரின் தனி நடனக் காட்சிகள் உண்டு.

இப்படத்தில் பிலவேந்திரனாக டி.ஆர். மகாலிங்கமும் ஞானசவுந்தரியாக எம்.பி.ராஜம்மாவும் சிறுமி ஞானசவுந்தரியாக பேபி ராஜா மனைவியும் லேனாளாக பாக்கமும் நடித்திருந்தனர். மற்றும் பாலசுப்பிரமணியம் (தருமர்), பி.ஆர்.மங்களம் (ஆரோக்கியம்), புளிமூட்டை ராமசாமி (அந்தோணி) பபூன் சண்முகம் (சூசை) ஆகியோரும் நடித்திருந்தனர்.

இந்தப்படம் நாகர்கோவிலில் அழகப்பா தியேட்டரில் 100 நாட்கள் ஓடியது. இதே வருஷம் கோட்டாறு சவேரியார் கோவில் திருவிழாவின்போது 25 நாட்கள் ஓடியது. ஒரு நாளைக்கு காலை இரவு என ஐந்து காட்சிகள். இதற்காகத் திரைப்படப் பாடல்கள், கதைச் சுருக்கம் அடங்கிய பாட்டுப் புத்தகம் பிரசுரமாயிருக்கிறது. (நாகர்கோவில் அலெக்சாந்திரா பிரஸ். 1948. அக்.)

ஐம்பதுகளில் கூட பல வருஷங்களில் சவேரியார் திருவிழாவின் ஞானசவுந்தரிப் படத்தைப் போடுவது என்ற வழக்கம் நாகர்கோவிலில் இருந்தது. கத்தோலிக்கர்களில் பலருக்கு இந்தப் பட வசனம் மனப்பாடமாயிருந்திருக்கிறது.

ஞானசவுந்தரி தோல்பாவைக் கூத்தை முதலில் தூத்தூர் கடற்கரை கிராமத்தில்தான் பார்த்தேன். பரமசிவராவ் நடத்தினார். கோபாலராவும் கோமதிபாயும் பின்பாட்டுப் பாடினர். இது 1984 ஜூலை மாதம். தூத்தூர் கேரள எல்லையில் உள்ளது. இங்கு புனித தாமசின் ஆலயம் உண்டு. இது அரபிக் கடலுக்கும் ஏ.வி.எம் சானலுக்கும் இடைப்பட்ட இடத்தில் இருக்கிறது. இது ஓர் அற்புதமான இடம்.

திருவிதாங்கூர் அரசர் மார்த்தாண்ட வர்மா டச்சுப் படையை எதிர்த்துப் போரிட்டபோது இந்த ஊர் மீனவ மக்கள் அவருக்கு உதவினர். மார்த்தாண்டவர்மா இங்கு புனித தோமையார் ஆலயத்தைக் கட்டிக் கொடுத்தார் (1741) என்கிறார்கள். இங்கு புனித அந்தோணியார் குருசடி உண்டு.

இங்கு நடக்கும் பாஸ்கா திருவிழா குறிப்பிடத்தகுந்தது. துக்க வெள்ளி நிகழ்வும் நடக்கும்போது இயேசுவின் சொரூபம் வீதி வழிவரும். பக்தர்கள் தெருவில் முழந்தாளிட்டு வணங்கும் அதிசயக் காட்சியைக் காண்பதற்கென்று கூட்டம் வருகிறது.

பரமசிவராவ் ஊர்மக்களின் அழைப்பின் பேரில் இந்த ஊரில் ஒரு நாளும், பக்கத்து ஊர்களில் 4 நாட்களும் ஆக 5 நாட்கள் நடத்தினார். நான் ஒரு நாள் தூத்தூரில் நிகழ்ச்சி பார்த்தேன்; பதிவும் செய்தேன். அடுத்தநாளே நிகழ்ச்சியை எந்த மாற்றமும் செய்யாமல் அப்படியே எழுதி எடுத்துவிட்டேன்.

ஞானசவுந்தரி நிகழ்ச்சி எல்லாமாக 92 பக்கங்கள் வந்தன. 4 பாடல்கள் சிட்டாடல் தயாரிப்பு சினிமாப் பாடல்கள் இரண்டு. மீதி இரண்டும் நல்லதங்காள் கூத்திலும் ராமாயணத்திலும் வருபவை. சில மாற்றங்களுடன் இருந்தன.

வெண்திரையில் உச்சிக் கொப்புளான், உளுவத்தலையன், கோமாளி ஆகிய மூன்று பாத்திரங்களும் உரையாட ஆரம்பிக்கும். இது நகைச்சுவை நிகழ்ச்சி, முடிந்ததும் கோமாளி "இனி கவனியுங்கள் ஞானசவுந்தரி கதையை. இது ரோம் நாட்டில் நடந்த கதை; அன்னை மரியால் கை உருப் பெற்ற அபலையின் கதை" என்று சொல்லிவிட்டு இடது பக்கம் வழி ஓடுவான். பின் இசைக் கருவிகளோடு ஒரு பாடல்.

**தரும மகாராஜன் வாறாரே**
**ஒய்யாரமாக**
**தரும மகாராஜன் வாறாரே**
**மல்லிகை சூடச் சூட**
**ஒய்யாரமாகக் கையைவீசி**
**தரும ராசா வாறாரே**

இப்பாடல் ராமாயணக்கூத்தில் உள்ளது. தசரதன் வருகையில் பாடப்படுவது. தசரதன் என்னும் பெயர் தருமர் என மாற்றப்பட்டிருக்கிறது.

தருமராசன் வேட்டைக்குச் செல்லும் போது இரண்டாவது மனைவியிடம் "லேனாளே என் மூத்த மனைவி பெற்ற பிள்ளையாக இருக்கக் கூடிய ஞானசவுந்தரியைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்" என்கிறார். சிறுமி ஞானசவுந்தரி தந்தையுடன் காட்டுக்கு வருவேன் என அடம்பிடிக்கிறாள். அவன் சமாதானப்படுத்துகிறான்.

மூன்று முதல் பத்து வரை உள்ள காட்சிகளில் ஞானசவுந்தரியை லேனாள் துன்புறுத்தல், கொலையாளிகள் ஞானத்தின் கைகளை வெட்டுதல் ஆகிய நிகழ்ச்சிகள். 11-14 காட்சிகளில் ஞான சவுந்தரியை பிலவேந்திரன் காப்பாற்றுதல், கல்யாணம் செய்தல் ஆகிய நிகழ்ச்சிகள். 15-23 காட்சிகளில் துர்கிஸ்தான் படையை விரட்ட பிலவேந்திரன் வருதல்; அவனுக்கு குழந்தை பிறந்த செய்தி, அதை ஞானசவுந்தரிக்கு எதிராக மாற்றி லேனாள் சூழ்ச்சி செய்தல், ஞானம் மறுபடியும் காட்டுக்கு செல்லுதல், மாதாவின் அருளைப் பெற்று கரங்களை மீண்டும் பெறுதல், பிலவேந்திரன் அவளைக் கண்டுபிடித்தல் ஆகியன. 24 - 26 காட்சிகளில் தருமர் உண்மை அறிதல்; காவலரிடம் லேனாவுக்கு மொட்டை அடித்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையில்

*ஏற்றச் சொல்லுதல்; பின் கொலையாளிகளுக்கு மரண தண்டனை, வேலைக்காரி ஆரோக்கியத்துக்கு நாடு கடத்தல் தண்டனை என தருமர் நியாயம் சொல்லுதல் ஆகிய காட்சிகள், இறுதியில் "அருள் தரும் தேவமாதாவே..." பாடலுடன் நிகழ்ச்சி முடியும்.*

*ஞானசவுந்தரி நாடகத்தில் தான் பிரதி ஒன்றை ஞானசவுந்தரி அம்மானை எழுதியவரின் ஊரில் (தளவாய்புரம்) பார்த்தேன். பேராசிரியர் பிரான்சிஸின் வீட்டிலிருந்த அந்தப் பிரதி 1951இல் எழுதப்பட்டது. அதே ஊரில் நடிக்கப்பட்டது. இந்த நாடக வடிவம் பெரும்பாலும் சினிமாவுடன் ஒத்துப்போவதே, பாடல்கள் சினிமாப் பாடல்களே.*

*1921இல் பாண்டிச்சேரியில் டி.கே.எஸ் சகோதரர்கள் இந்த ஞானசவுந்தரி நாடகத்தை மேடை ஏற்றியிருக்கின்றனர். அப்போது இதற்குரிய கதையை கே.ஜி.குப்புசாமிநாயுடு என்பவர் எழுதியிருந்தார். இவர் சங்கரதாஸ் சுவாமிகளின் மாணவர்.*

*வாசன் நாடகம், ஸ்பெஷல் நாடகங்களில் நடிப்பதற்குப் பயன்பட்ட கதையின் அடிப்படையில் குப்புசாமி நாடகக் கையெழுத்துப் பிரதியைத் தயாரித்திருக்கிறார். இந்த நாடகத்தில் டி.கே.சண்முகம் ஞானசவுந்தரியாகவும், டி.கே.முத்துசாமி லேனாளாகவும் நடித்தனர், பாண்டிச்சேரியில் நாடகம் அரங்கேறிய போது சங்கரதாஸ் சுவாமிகள் பார்வையாளராக இருந்து பார்த்தார். அவர் மிகவும் தளர்ந்திருந்த சமயம் அது, இந்த நாடகம் பற்றிய வேறு விவரங்கள் கிடைக்கவில்லை.*

*அம்மானை, சினிமா, தோல்பாவைக்கூத்து மூன்று வடிவங்களிலும் உள்ள கதை பெரிய அளவில் மாற்றமில்லை.*

*அம்மானையில் நகைச்சுவை என்பது மருந்துக்குக் கூட இல்லை. தோல்பாவைக்கூத்து, சினிமாவின் நிலைவேறு. புளிமூட்டை ராமசாமி (அந்தோணி), பபூன் சண்முகம் (சூசை), மங்களம் (ஆரோக்கியம்) என்னும் சினிமா பாத்திரங்கள் காமெடிக் காட்சியில் வருகின்றன. இவை கதைப்போக்கில் அமைந்தவை; ஆரோக்கியம் வேலைக்காரியாக வருகிறார். சினிமாவில் வரும் இரு காமெடி நடிகர்களும் தோல்பாவைக் கூத்தில் உளுவத்தலையன் உச்சிக்குடும்பனுமாக வருகின்றனர். ஆரோக்கியம் அதே பேரில் வருகிறாள்.*

*சினிமாவில் லலிதா, பத்மினி நடனக் காட்சி உண்டு. தோல்பாவைக் கூத்தில் கிடையாது. சினிமாவில் உள்ள இரண்டு பாடல்கள் கூத்தில் அப்படியே பாடப்படுகின்றன, அம்மானை கதைமுடிவில் லேனாள் நெருப்பில் தள்ளப்படுகிறாள்; சினிமாவில் லேனாள் மன்னிக்கப்படுகிறாள்; தோல்பாவைக் கூத்தில் கொலையாளிகள் மட்டுமே தண்டிக்கப்படுகின்றனர். ஆரோக்கியம் நாடு கடத்தப்படுகிறாள்.*

*பரமசிவராவ் 80களில் சொன்னது நினைவு இருக்கிறது, அப்பா கோபாலராவ் அழகப்பா தியேட்டரில் ஞானசவுந்தரி சினிமாவை அஞ்சாறு முறை பார்த்துவிட்டு நல்லதங்காள் கதைக்குரிய பாடல்களை வைத்தே சமாளித்து விடலாம்; படங்களை இராமாயணத்திலிருந்து எடுக்கலாம் என்றாராம். பரமசிவராவின் மனைவி "நல்லதங்காளை அண்ணி கொடுமைப்படுத்துறா ஞானசவுந்தரி கதையில் சித்தி எல்லாம் ஒன்றுதான்" என்றாள்.*

*பின் இணைப்பு: சிட்டாடல் பிலிம்ஸ் ஞானசவுந்தரி சினிமா பாடல்கள்*

அருள்தரும் தேவ மாதாவே
ஆதியே இன்ப ஜோதியே
இருள் நீங்கவே இகமீதிலே -
ஈடிலா நிதியே
தொகையறா
திருவே துணை நீயே - தேவத்தாயே
சிறியாள் வினைதீராய்
வானின் தேவதையே - அருள்வாய் மரியே
தேனின் மேலாம்ப தமிதே
ஜீவாதாரமே - நல் ஆதி
விதியிதுவோ பேதை நதி இதுவோ
என் செய்வேன்
கன்னியே மாமரித்தாயே என்
காணிக்கை கண்ணீரே
இன்னல் கடல்தனிலே இறகில்லா
பட்சிபோல் வீழ்ந்தேன்
மின்னல் நிகரான வாழ்வில் மீளாத
சோகம் கொண்டேனே
பெண்களில் நான் பெரும்பாவி ஏன்
பிறந்தேன் இப்புவிமீதே
அன்னையில்லாத சேய் நான் அன்பாக
ஏழைபால் அருள்வாய்

*- கம்பதாசன்*

வெட்டுண்ட கைகள் வேதனை
கொண்டேனே
விதிவசத்தால் இந்தக் கதியை
அடைந்தேனே
கொட்டுண்ட ஏக்கமே கொஞ்சமோ
மாதாவே
கும்பிடுங் கரங்களைக் கொண்டு
சென்றாரே
இனிவரும் வாழ்வில் துணை
புரிவாயே
கனவிலும் உனை மறவாத
மனந்தருவாயே மாமரித்தாயே

-கே.ஆர்.சாரங்கபாணிபிள்ளை

●



# மக்கள் கலைஞர் கலைமாமணி
# தோழர் பொன். கைலாசமூர்த்தி

## நா. இராமச்சந்திரன்

*2020* ஜூலை 10-ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களிடமிருந்து தொலைபேசி வந்தது. 'கைலாசமூர்த்தி இறந்துட்டாருப்பா...' அதற்குமேல் அவரிடமிருந்து வார்த்தைகளில்லை. அவரால் பேச இயலவில்லை. சற்று நிதானித்துவிட்டு 'மதியத்துக்குப் பிறகுதான்... ஹார்ட் அட்டாக்...' நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நடுங்கிய குரலுடன் அவர் பதிலளித்தார்...

இந்தச் செய்தி கேட்டதிலிருந்து தோழர் கைலாசமூர்த்தி பற்றிய சிந்தனைகள் மீண்டும் மீண்டும் என்னை ஆக்கிரமித்தன. இரவு முழுதும் தூக்கமில்லை. 1979-இல் தோழர் கைலாசமூர்த்தியை, பேராசிரியர் நா.வானமாமலை எனக்கு அறிமுகப்படுத்தினார். அப்போது அவர் காங்கிரஸ்காரர். 'இஸ்கஸ்' அமைப்பில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது பேராசிரியரைப் பார்க்க அவரது இல்லத்துக்கு வருவார். மகாகவி பாரதியின் தாடியை நினைவூட்டும் வகையில் தாடி வைத்திருப்பார். அவ்வப்போது நடக்கின்ற கூட்டங்களுக்குத் தம்முடைய கையிலிருந்து காசு செலவழிப்பார். இதைப்பார்த்த பேராசிரியர் நா.வா. உட்பட தோழர்கள் பலரும் உங்கள் கைக்காசு போடக்கூடாது என்று கண்டிப்பார்கள். அவரைக் கம்யூனிஸ்ட் ஆக்கியதில் தோழர் எஸ்.எஸ். தியாகராஜன் முக்கியமானவர்.

தோழர் கலைமாமணி கைலாசமூர்த்தி இரண்டு தினங்களுக்கு முன்தான் என்னிடம் தொலைபேசியில் பேசினார். உற்சாகமாகப் பேசினார். எப்போது பேசும்போதும் முதலில் ஒரு சிரிப்புடன்தான் பேசத் தொடங்குவார். நான் வணக்கம் சொல்வதற்குப் பதிலாக 'அய்யா... பல்லாண்டு வாழ்க அய்யா' என்றுதான் பேச்சைத் தொடங்குவேன். அதைக் கேட்பதில் அவருக்கு ஆர்வம் மிகுதி.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் நாகர்கோவில் கிளையும் - கோவைக் கிளையும் இணைந்து நடத்திக் கொண்டிருக்கும் மெய்நிகர் சந்திப்பில் அடிக்கடிக் கலந்துகொள்வார். ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது என்னைப் பார்ப்பதற்கும் - என் குடும்பத்தோடு உரையாடுவதற்கும் - வீட்டுக்கு வருவார். ஒயிலாட்டம் குறித்து வகுப்பெடுப்பதற்கு ஏதேனும் கல்விக் கூடங்களிலிருந்து அழைப்பு வந்தால்; தாம் பேச வேண்டியவற்றை எழுதி வைத்துக் கொண்டு தொலைபேசி வழியாகவே என்னிடம் வாசித்துக் காட்டுவார். சில நேரங்களில் தூத்துக்குடியிலிருந்து பாளையங்கோட்டைக்குக் கிளம்பி வந்து என்னிடம் விவாதிப்பார்.

மிகவும் அன்பானவர். அவர் கோபப்பட்டு நான் பார்த்ததில்லை. எப்போதும் புன்னகைதான். தம் மனதுக்குப் பிடிக்காததை யாரேனும் செய்தால் அமைதியாகிவிடுவார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் ஆகியவற்றின் விழா மேடைகள், அரசியல் பிரச்சாரங்கள் ஆகியவற்றில் கலைமாமணி கைலாசமூர்த்தி நிகழ்த்தும் நாட்டார் பாடல்களும், விழிப்புணர்வுப் பாடல்களும், கவிஞர் பரிணாமன் பாடல்களும், பாரதியார் - பாரதிதாசன் பாடல்களும் மேடைகளில் அதிர்வினை ஏற்படுத்துவன. மேற்கண்ட மேடைகளிலும் தெருக்களிலும் திடல்களிலும் அவரும் அவருடைய குழுவினரும் நிகழ்த்தும் புதுமையான ஒயிலாட்ட நிகழ்ச்சிகள் மேலும் விழாக்களை மெருகூட்டின.

மரபுவழியிலான ஒயிலாட்ட நிகழ்வுகளில் முக்கியமாக இராமாயணக் கதையும் மகாபாரதக் கதையும் பாடல்களாகப் பாடப்பட்டன. ஆனால், கலைமாமணி கைலாசமூர்த்தியின் ஒயிலாட்டத்தில் காந்தி, நேரு, வ.உ.சி., ஜீவா, பாரதி ஆகியோரைப் பற்றிய பாடல்களும்; பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பரிணாமன் ஆகியோருடைய கவிதைகளும் பாடல்களாகப் பாடப்பட்டன. தாமே எழுதிய பாடல்களையும், பூதப்பாண்டி நல்லதம்பித் தாத்தா பாடல்களையும், தோழர் கே.ஏ. குணசேகரன் பாடிய பாடல்களையும், பிற முற்போக்கு இயக்கங்களைச் சார்ந்த பாடகர்கள் பாடிய பாடல்களையும் பொருத்தமான இடங்களில் அமைத்துப் பாடி ஒயிலாட்டத்தை நிகழ்த்த வைப்பதில் கைலாசமூர்த்திக்கு நிகர் அவரே. தோழர் பரிணாமன் கவிதைகளைத் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சேர்த்துப் புகழ் பரப்பியதில் தோழர் கைலாசமூர்த்தியின் பங்கு முக்கியமானது.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மிகப் பெரிய எண்ணிக்கையில் மாணவர்களுக்கு ஒயிலாட்டப் பயிற்சி அளித்து அரங்கேற்றம் செய்விப்பார். தூத்துக்குடி தூய மரியன்னை கல்லூரியில் ஏறத்தாழ 600 மாணவிகளுக்கு ஒரே நேரத்தில் ஒயிலாட்டப் பயிற்சி கொடுத்த அனுபவமும் கைலாசமூர்த்தி அவர்களுக்கு உண்டு. ஒயிலாட்டப் பயிற்சியளிக்கும் போது தன்னை மறந்த நிலையில் அக்கலையோடு ஒன்றி, மாணவர்களின் ஆற்றலை உணர்ந்து பொறுமையாக அவர் பயிற்சியளிப்பதை நான் அருகிருந்து பலமுறை பார்த்திருக்கிறேன்.

அவரைப் பொறுத்த வரையில் ஒயிலாட்டக் கலையை வளர்த்தெடுப்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வம் மற்றும் தாம் கற்ற கலையை முற்போக்கு இயக்கங்களின் கொள்கைகளைப் பரப்புவதற்கு எவ்வாறெல்லாம் பயன்படுத்துவது ஆகிய இரண்டு பற்றியே அவருடைய சிந்தனை இருக்கும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்கள், தேர்தல் காலத்தில் பிரச்சாரங்கள், மாநாடுகள் - விழாக்கள் ஆகியவற்றில் ஒயிலாட்டக் கலையை முற்போக்கு நோக்கமுடன் கைலாசமூர்த்தி நிகழ்த்தும்போது உணர்ச்சிமிக்க அவரது நிகழ்த்துகை முழு ஆற்றலுடன் விளங்கும் என்பதை தோழர்கள் அனைவரும் நன்கு அறிவர். தமிழக முதல்வராகக் கலைஞர் இருந்த காலத்தில்; மாநில ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தோழர் கைலாசமூர்த்தியின் கலைப்பணியைப் பாராட்டி கலைமாமணிப் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தார்.



நாட்டார் கலைஞர்கள் நிகழ்த்துகையின்போது பார்வையாளர்களையும் தமது கலையை நிகழ்த்தச் செய்வர். தோழர் கைலாசமூர்த்தியும் அவர்களோடு இணைந்து செய்வதை நான் கண்டிருக்கிறேன். நிகழ்த்துகையின்போது நாம் பார்க்கும் கைலாசமூர்த்தி வழக்கமாகப் பார்க்கும் கைலாசமூர்த்தியாக இருக்கமாட்டார். தாம் பாடும் பாட்டு - கலைஞர்களின் அடவு முறைகள் - பார்வையாளர்களின் ஊடாட்டம் - தாளக் கலைஞர்களின் ஒத்திசைவு ஆகியவற்றைக் கவனித்துக் கொண்டே இருப்பார். பாடல்களின் உள்ளடக்கத்திற்கு ஏற்றவாறு அவருடைய முகபாவம் மாறிக் கொண்டே இருக்கும். பாட்டின் வேகத்திற்கு ஏற்றவாறு அவருடைய உடலசைவு அமையும். தம்முடைய கலைஞர்களுக்கு அவரே ஒப்பனை செய்து விடுவதையும் நான் கண்டிருக்கிறேன்.

நான் பணியாற்றும் தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறை - ஆய்வு மையம் ஆகியவற்றின் நிகழ்வுகள் அனைத்திலும் - அவருடைய நிகழ்ச்சி இல்லாவிட்டாலும் - தோழர் கைலாசமூர்த்தி

ஆர்வத்துடன் கலந்துகொள்வார். கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள், சொற்பொழிவுகள், கலைப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் அனைத்திலும் தோழர் கைலாசமூர்த்தியைக் காணலாம். கல்லூரியில் நடைபெறும் கலை நிகழ்வுகள் அனைத்திலும் அவர் பார்வையாளராக வந்துவிடுவார். கல்லூரி நடத்தும் கலைப் போட்டிகளில் அவரை நடுவராக அழைப்பது வழக்கம். ஒருசில வேளைகளில் நடுவராக அவரை அழைக்காவிட்டாலும் கூட அந்நிகழ்வுகளில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து, மாணவர்களை உற்சாகப் படுத்துவார். நாட்டார் வழக்காற்றியல் பயில்வோருக்கும் பயிலரங்குகளில் பங்கேற்போருக்கும் களஆய்வு ஒரு பகுதியாக இருக்கும். சில களஆய்வுகளைத் தோழர் கைலாசமூர்த்தி மூலம் நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். அப்போதெல்லாம் அவரும் எங்களோடு வருவார். இரவு முழுக்கக் கண்விழித்திருந்து எங்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்வார்.

கடந்த ஜூன் மாதம் 10ஆம் தேதிவாக்கில் அவரிடமிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு. எல்லா கல்லூரிகளும் மெய்நிகர் கருத்தரங்குகளைப் பல்வேறு நிறுவனங்களுடன் சேர்ந்து நடத்துகின்றன. நாமும் அதுபோல் ஏதேனும் ஒரு கல்லூரியோடு சேர்ந்து நடத்த வேண்டும் என்று சிந்தித்தோம். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தூத்துக்குடி கிளை, கன்னியாகுமரி மாவட்டம் விவேகானந்தர் கல்லூரியின் தமிழ்த் துறையுடன் இணைந்து 17-06-2020ஆம் நாள் மெய்நிகர் கருத்தரங்கம் நடத்தத் தீர்மானித்துள்ளோம். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் முனைவர் காமராசுவும் தாங்களும் உரை நிகழ்த்த வேண்டும் என்றார். நாங்கள் இருவரும் மகிழ்ச்சியோடு ஒத்துக் கொண்டோம். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அந்தச் சான்றிதழ்களில் தம்முடைய கையெழுத்து இடம்பெற வேண்டாம் என்று சாதித்தார். தோழர் கைலாசமூர்த்தி, அப்போது தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் துணைத் தலைவர். இந்நிலையில் அவருடைய கையெழுத்தும் வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். கூச்சத்தோடு அவர் ஒத்துக் கொண்டார். தாம் ஒருங்கிணைக்கும் நிகழ்வுகளில் தன்னை முன்னிறுத்தாத பெரிய மனது படைத்தவர் தோழர் கலைமாமணி கைலாசமூர்த்தி என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் பல வகைகளில் வளர்வதற்கும், மக்களுடைய ஆதரவிற்கும் தோழர் கைலாசமூர்த்தியின் பங்களிப்பு மிகவும் மகத்தானது. குறிப்பாக, குமரி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் தோழர் கைலாசமூர்த்தி இல்லாமல் கலை இலக்கியப் பெருமன்ற விழாக்கள் எப்பொழுதும் நடந்ததில்லை.

இதுபோலவே குமரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் மே மாதம் நடைபெறும் பேராசிரியர் நா.வா. கலை இலக்கிய முகாம்களில் தோழர் கைலாசமூர்த்தி கலந்து கொள்வார். தமது பாடல்களைப் பாடுவார். தோழர்களை உற்சாகப்படுத்துவார். தென்மாவட்டக் கலை இலக்கியப் பெருமன்றத் தோழர்களின் இல்ல நிகழ்வுகள் அனைத்திலும் தோழர் கைலாசமூர்த்தி பங்கெடுத்துள்ளார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்திற்குத் தோழர் கலைமாமணி கைலாசமூர்த்தியின் மகத்தான பங்களிப்பைப் பாராட்டியும், அவருக்கு நன்றி செலுத்தும் நோக்கத்திலும் 2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னையில் நடைபெற்ற இலக்கியப் போட்டி பரிசளிப்பு விழாவில் "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கிச் சிறப்பு செய்யப்பட்டது மறக்க முடியாத நிகழ்வாகும்.


கலைகளைச் சிறப்புடன் வளர்த்தெடுக்க வேண்டுமென்றால்; நாட்டார் கலைஞர்கள் நலமுடன் வாழவேண்டுமென்பதிலும் தோழர் கைலாசமூர்த்தி ஈடுபாட்டுடனும் அக்கறையுடனும் செயல்பட்டார். தம்முடைய உயிர் பிரியும் வரையில் அதற்காக உழைத்த மானுட நேயமிக்க மகத்தான கலைஞர். தூத்துக்குடிப் பகுதியில் வாழும் நாட்டார் கலைஞர்கள் ஊரடங்கின் காரணமாக நிகழ்ச்சிகள் ஏதுமின்றி வறுமையில் வாடுவதைக் கண்ட தோழர் கைலாசமூர்த்தி நிதி திரட்டி உயிர் வாழ்வதற்குத் தேவையான பொருட்களாகவும், அத்தியாவசியத் தேவைகளுக்காகப் பணமாகவும் அக்கலைஞர்களுக்குக் கொடுக்கத் தீர்மானித்தார். பெரு முயற்சியுமெடுத்தார். ஜூலை மாதம் 11ஆம் நாள் காலையில் கட்சித் தோழர்களோடு சென்று அக்கலைஞர்களைச் சந்திக்க முடிவெடுத்து தூத்துக்குடிக் கட்சி அலுவலகத்திற்குச் சென்று, மாவட்டச் செயலாளரையும் தோழர்களையும் சந்தித்துப் பேசிவிட்டு, வீட்டுக்கு மதியம் (10ஆம் தேதி) வந்து சேர்ந்தபோதுதான் தோழருக்கு மரணம் நிகழ்ந்துவிட்டது. தலை சுற்றுகிறது என்று சொன்னார். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதயம் செயலிழந்துவிட்டது......

தோழர் கலைமாமணி கைலாசமூர்த்தியின் மரணச் செய்தி அவருடைய குடும்பத்தாரையும், அவருடைய கலைக் குழுவினரையும், தமிழக நாட்டார் கலைஞர்களையும், நண்பர்களையும், கட்சித் தோழர்களையும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத் தோழர்களையும், கலை ஆர்வலர்களையும், பண்பாட்டு ஆய்வாளர்களையும், அவரிடம் ஒயிலாட்டப் பயிற்சியெடுத்த மாணவர்களையும் பெருந்துயரத்தில் ஆழ்த்தியது.

அற்புதமான ஒரு கலைஞரை - தோழரை - மனிதரை - மானுடச் செயல்பாட்டாளரை - போராளியை நாம் இழந்து நிற்கிறோம். அவருடைய நினைவு நம் எல்லாருடைய உணர்விலும் நிலைத்து நிற்கும். அவருக்கு நமது செவ்வணக்கம். ●

நூல் மதிப்புரை

# காகிதங்களை ஆயுதங்களாக்கிய வரலாற்றுத் தூரிகை




**கண.குறிஞ்சி**

வரலாற்றுப் பாதையில்
த.ஸ்டாலின் குணசேகரன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
ரூ.490/-

“நீளந் தாண்டுதலில் எந்தளவுக்குப் பின்னால் ஓடுகிறீர்களோ, அந்த அளவுக்கு அதிகமான தூரத்தை நீங்கள் தாண்ட முடியும். வரலாற்றைப் படிப்பதும் அப்படித்தான்” எனக் குறிப்பிட்டார் வின்செண்ட் சர்ச்சில். வரலாற்றைப் படிப்பது, வரலாற்றைப் படைப்பதற்காகத்தான் என்பதை இதன்வழி புரிந்து கொள்கிறோம்.

கடந்தகாலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ள முடியாது. மேலும் எதிர்காலத்தைத் திட்டமிடவும் முடியாது. எனவேதான் வரலாறு என்பது நம் மீதான சுமை அல்ல; மாறாக நம் கையிலிருக்கும் ஒளிவிளக்கு. இதை உணராவிட்டால், மரத்தின் ஒரு பகுதிதான் நான் என்பதை அறியாத இலையைப் போல, நாம் வீழ்வோம்.

“வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ளவில்லை என்பதைத்தான் வரலாற்றிலிருந்து மீண்டும் மீண்டும் நாம் கற்றுக் கொள்கிறோம்” என்று இதைத்தான் டெஸ்மாண்ட் டூ டூ குறிப்பிட்டார்.

தனிமனித வாழ்வாகட்டும், வரலாற்று நிகழ்வாகட்டும் அது தரும் படிப்பினையைக் கற்றுக் கொண்டோம் என்றால், வரலாற்றின் ஆன்மாவை நாம் கண்டு கொண்டோம் என்று பொருள்.

அதிக உழைப்பைச் செலுத்தி, அதிக நேரத்தைச் செலுத்தித் தன் வாழ்நாளில் ஒருவர் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய அடிப்படைச் செய்திகளை, எவ்விதச் சிரமத்தையும் நமக்குக் கொடுக்காமல் நமக்காக ஒருவர் அந்த அறிவுத்தேடலை மேற்கொண்டால், அது எவ்வளவு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்? அந்த அனுபவத்தை, அனுகூலத்தை ஸ்டாலின் குணசேகரன் “வரலாற்றுப் பாதையில்” எனும் நூல் மூலம் நமக்கு நல்குகிறார்.

சூரியனுக்குக் கீழுள்ள, காலத்தால் அழியாத ஈர்ப்புமிக்க பல்வேறு செய்திகளை 118 தலைப்புகளில் 475 பக்கங்களில் வடிகட்டிச் சாறு பிழிந்து நம் முன் விருந்தாகப் படைத்திருக்கிறார் நூலாசிரியர். 2007 சனவரி 18 முதல் நாள்தோறும் ஒரு கட்டுரையாக ‘ஜனசக்தி’ நாளிதழில் இவை தொடர்ச்சியாக வெளிவந்தது என்பது ஓர் அசுர சாதனை ஆகும்.

பனித்துளி ஒன்று ஆலமரத்தையே தன்னுள் படம் பிடித்துக் காட்டுவது போல், மூன்று அல்லது நான்கு பக்கங்களில், எடுத்துக் கொண்ட பொருள் குறித்த காத்திரமான தகவல்களைக் குறுங்கட்டுரைகளாகத் தருகிறார் நூலாசிரியர். அவர் எடுத்துக் கொண்ட தலைப்புகளே அவரது ஆளுமையை வெளிப்படுத்துகின்றன.

மகளிர் என்றால் வாலென்டினா, கல்பனா சாவ்லா, மேடம் காமா, அஞ்சலா டேவிஸ், கே.பி. சுந்தராம்பாள், முத்துலட்சுமி ரெட்டி, கல்பனா தத், பிரீதிலதா, தில்லையாடி வள்ளியம்மை, நாகம்மாள் - கண்ணம்மாள், கேப்டன் இலட்சுமி, அருணா ஆசப் அலி, மீராபென், நைட்டிங்கேல் என எத்தனை வகையான ஆளுமைகள்!

அறிவியல் அறிஞர்கள் என்றால் மேடம் கியூரி, ஆல்பிரட் நோபல், எடிசன், டார்வின், கலிலியோ, சி.வி. இராமன், ஜி.டி.நாயுடு, விக்ரம் சாராபாய் என எத்தனை சாதனையாளர்கள்!

விடுதலை வீரர்கள் என்றால் சூர்யா சென், செண்பகராமன், உத்தம்சிங், திப்பு சுல்தான், ஜதீந்திரநாத் தாஸ், திருப்பூர் குமரன், சந்திரசேகர ஆசாத், வ.உ.சி., மருது சகோதரர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை என எவ்வளவு தியாகிகள்!

கலை - இலக்கியப் படைப்பாளிகள் என்றால் பாப்லோ நெரூடா, பெர்னாட்ஷா, மாக்சிம் கார்க்கி, சார்லி சாப்ளின், பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன், தமிழ்ஒளி என எத்தனை எழுத்து வேந்தர்கள்!

சமயச் சீர்திருத்தவாதிகள் என்றால் புத்தர், நாராயண குரு, இராமானுசர், வள்ளலார் எனப் பல்வேறு சான்றோர்கள்!

மேற்காண் ஆளுமைகள் குறித்துப் புத்தக ஆர்வலர்கள் பல செய்திகளைப் பரவலாக அறிந்திருக்கலாம். ஆனால் பலரும் ஏற்கெனவே அறிந்திருக்கும் செய்திகளைத் தவிர்த்து, வாசகர்கள் அறிந்திராத செய்திகளை, ஒரு தேனீயைப் போல அறிவுத்தளத்தில் அலைந்து திரிந்து, தேடிக் கண்டுபிடித்து இக்கட்டுரைகளைச் செதுக்கியுள்ளார் ஸ்டாலின் குணசேகரன்.

கோபுரத்திலிட்ட விளக்குகள் போல் ஒளிரும் ஆளுமைகளைத் தவிர, நாம் சற்றும் அறிந்திராத, உரிய அங்கீகாரம் பெற்றிராத குடத்திலிட்ட விளக்குகளாக வரலாற்றின் பக்கங்களில் உறைந்து நிற்கும் 'எம்டன்' ஆரோக்கியசாமி, அரங்கசாமி ராஜா, சேலம் சிறைத்தியாகிகள் சுப்பு - ஆறுமுகம் - காவேரி முதலியார் - ஷேக் தாவூத், இராஜபாளையம் காளியம்மாள் போன்ற பல்வேறு தியாகமலர்களை நம் கவனத்திற்குக் கொண்டு வந்து சீரியதோர் வரலாற்றுக் கடமையைச் செவ்வனே ஆற்றியிருக்கிறது இப்புத்தகம். மற்ற வரலாற்று நூல்களிலிருந்து இந்த நூல் வேறுபட்டிருக்கும் போற்றத்தக்க கூறு இது.

வரலாறு என்பது ஒரு சில தனிநபர்களால் உருவாக்கப்படுவதல்ல, மாறாக அது மக்களின் மகத்தான பங்களிப்போடு ஒரு சில முன்னோடிகளால் உருவாக்கப்படுவது என்ற மாறுபட்ட கண்ணோட்டம், இந்நூல் முழுவதும் விரவிக் கிடப்பதை ஆழ்ந்து படிக்கும் ஒருவர் சட்டென உணர்ந்து கொள்ள முடியும்.

'அகிலத்தை அசைத்த அறிக்கை' எனும் கட்டுரை அதை மெய்ப்பிக்கிறது. 30 வயதான கார்ல் மார்க்ஸ் மற்றும் 28 வயதான பிரடெரிக் எங்கெல்சு ஆகியோர் 1848ஆம் ஆண்டு வெளியிட்ட 'கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை' 'உலகத்தைப் புரட்டிப் போட்ட நெம்புகோல்களில் ஒன்றாக' மாறியதைச் சுட்டுகிறது அது.

அதேபோல், ஹேரியட் பீச்சர் ஸ்டோவ் எனும் அமெரிக்கப் பெண் எழுத்தாளர் 1852 ஆம் ஆண்டு வெளியிட்ட 'அங்கிள் டாம்ஸ் கேபின்' எனும் நூல் ஆதிக்க நிறவெறிக்கு எதிரான ஒரு பெரும் போரை எவ்வாறு மக்களிடையே உருவாக்கியது என்பதை 'ஒரு புத்தகம்! ஒரு யுத்தம்!' எனும் கட்டுரை தெளிவாக்குகிறது.

முதலில் 5000, பிறகு 10,000 என ஒரே வாரத்தில் விற்றுத் தீர்ந்த 'இந்தப் புத்தகம், வெளி வந்த ஓராண்டிற்குள் 3,00,000 படிகள் அமெரிக்காவில் மட்டும் விற்றன. எட்டு அச்சு இயந்திரங்கள் இரவு பகலாக இயங்கி இந்த நூலை அச்சடித்துத் தள்ளிக் கொண்டே இருந்தன. மூன்று காகித ஆலைகள் காகிதங்களை இப்புத்தகத்திற்காக உற்பத்தி செய்து அனுப்பும் பணியில் முழுக்க ஈடுபட்டிருந்தன. இவ்வளவு முயற்சிகளுக்குப் பிறகும் ஆர்டர்களை பூர்த்தி செய்ய முடியாமல் திணறல் ஏற்பட்டது. அந்நாடு முழுக்க ஓரளவேனும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அத்தனை பேரின் கைகளிலும் இந்நூல் இருந்தது. இரண்டாண்டுகள் கழிவதற்குள் சுமார் 60 மொழிகளில் இந்நூல் வெளியாகி உலகை வலம் வந்தது... இந்த நூலுக்குக் கிடைத்த வரவேற்பு ஒரு பிரமாண்டமான தீப்பற்றி எரிவது போல் இருந்தது. எதிர்ப்பின்றி அலையலையாக அதிலிருந்து கிளர்ந்த உணர்ச்சிப் பெருக்கு மோதியது. வானமெல்லாம் அதன் ஜோதிதான் கடலையும் கடந்து சென்றது. உலகம் அனைத்துமே இதைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை; பேசவுமில்லை என்பது போல் தோன்றியது' எனச் சுட்டிக்காட்டும் நூலாசிரியர்,

'இப்புத்தகம் உள்நாட்டு யுத்தத்தையே உருவாக்கியது' என ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டதையும் தவறாமல் பதிவு செய்துள்ளார்.

அமெரிக்காவில் கருப்பின விடுதலைக்கு வித்திட்ட நூலைப் போன்றே, இங்கிலாந்தின் முடியாட்சியிலிருந்து அமெரிக்கா விடுதலை பெறக் காரணமாக இருந்த மற்றொரு நூலைப் பற்றியும் குறிப்பிடுகிறார் ஸ்டாலின் குணசேகரன்.

இங்கிலாந்தில் பிறந்த தாமஸ்பெயின், 'இங்கிலாந்து எனும் தேசத்திற்குக் கீழ்ப்படிந்த அடிமை

நாடாக அமெரிக்கா இருக்கக் கூடாது என்பதற்கான காரண காரியங்களை விளக்கி 'பகுத்தறிவு' (Common Sense) என்ற துண்டுப் பிரசுரத்தை எழுதி வெளியிட்டார். 1776 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆம் தேதி பகுத்தறிவு வெளியானது. வெறும் 47 பக்கங்களே கொண்ட இந்தத் துண்டுப்பிரசுரம் 'ஓர் ஆங்கிலேயரால் எழுதப் பெற்றது' என்ற அறிவிப்புடன் வெளிவந்தது. அச்சடித்து வெளிவந்த மூன்று மாதங்களில் 1,20,000 பிரதிகள் விற்றன. பின்னர் வெகு விரைவில் 5,00,000 பிரதிகள் சர்வ சாதாரணமாக விற்றுத் தீர்ந்தன. இலக்கிய வரலாற்றிலேயே இந்த அளவுக்கு ஒரு நூல் விற்றதே இல்லை. தாமஸ் பெயினின் 'பகுத்தறிவு' வெளியான ஆறு மாதங்களுக்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதே போல் 'தமிழைப் போற்றிய காந்தியடிகள்' என்ற அருமையான கட்டுரை குறிப்பிடத்தக்கது. தமிழின் மீதும், தமிழ் மக்களின் தியாகத்தின் மீதும் காந்தியார் கொண்டிருந்த மதிப்பை இக்கட்டுரை விதந்தோதுகிறது.

"தமிழர்களைச் சந்திக்கும் போது என் உடன் பிறந்தவர்களைச் சந்திப்பது போன்றே உணர்கிறேன். எத்தனையோ ஆண்டுகளாக நான் போற்றி வளர்த்த உணர்ச்சி இது. இதற்குக் காரணம் வெளிப்படையானதே. சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கு பெற்ற இந்தியர்களிடையே உள்ள பல்வேறு பிரிவினருள் இப்போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்கியவர்கள் தமிழர்கள்தான்... எந்த முறையில் பார்த்தாலும் இந்தியாவின் மிகச் சிறந்த பரம்பரைக்கு மிகச் சிறந்த சான்று தமிழர்கள் என்பதை அவர்கள் மெய்ப்பித்திருக்கிறார்கள். எள்ளளவும் மிகைப்படுத்தி இதனை நான் கூறவில்லை... மற்ற இந்தியர்கள் தமிழர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. அவர்கள் புகழ் மேலும் மேலும் விசாலமடைந்து கொண்டு போகிறது. தமிழர் தொண்டுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? அவர்கள் கற்பிக்கும் பாடத்தை மற்றவர்கள் பின்பற்றி, அரவமில்லாமல் தாய்நாட்டிற்குச் சேவை செய்வதுதான் சிறந்த கைம்மாறு..." "நம்மில் கொஞ்சம் பேருக்கு மட்டுமே திருவள்ளுவரின் பெயர் தெரியும். அந்த மாமுனிவரின் பெயரை வட இந்தியர்கள் அறியாமல் இருக்கிறார்கள். திருக்குறள் கூறும் ஞானத்தின் பொக்கிஷத்தை அவரைப் போன்று வழங்கியவர்கள் வேறு எவருமிலர்" எனப் புகழ்மாலை சூட்டியதோடு, 'மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி' என்று தனது முழுப் பெயரையும் தமிழில் கையெழுத்தாகப் போட்டுக் கொடுத்துப் பலரையும் பரவசத்தில் ஆழ்த்தினார் காந்தியடிகள் என்பதையும் இக்கட்டுரை பதிவு செய்கிறது.

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயரை வைக்க வேண்டும் என மக்கள் தலைவர் ஜீவா உள்ளிட்ட பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் வலியுறுத்திப் போராடியதை 'தமிழ்நாடு கேட்ட வங்காளம்' எனும் கட்டுரை தெளிவுபடுத்துகிறது. 1956 ஆம் ஆண்டு மார்ச்சு 28 ஆம் நாள் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட மாநில மறுசீரமைப்புத் தீர்மானத்தின் பொழுது ஜீவா அவர்கள் இப்பரிந்துரையை முன்மொழிந்துள்ளார்.

"மொழி வழிப் பிரிவினை, தேசிய ஒற்றுமையைச் செழுமைப் படுத்துகிறதேயொழிய அதைப் பிரித்துவிடவில்லை என்பதைத் துரதிர்ஷ்டவசமாகச் சமீப காலத்தில் நம்முடைய தலைவர்கள், மேலிடத்தார் ஒப்புக் கொள்ளாமல் மொழி வழிப் பிரிவினை, வெறியாகத்தான் மாறும் என்று தப்புக்கணக்குப் போடுவது இன்னும் இருக்கிறது. நாங்கள் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ளவில்லை... தமிழன் என்ற பெயரால் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். நிதியமைச்சரையும், முதலமைச்சரையும், காங்கிரஸ் தரப்பிலே இருக்கிற மற்ற உறுப்பினர்களையும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். 'தமிழ்நாடு' என்று பெயரிடுவதுதான் முறை. தமிழர்கள் நல்ல முறையிலே இதயபூர்வமாக நம் தேசிய முன்னேற்றத்திற்கும், ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்களை நிறைவேற்றவும், தமிழ்நாடு என்ற திருப்பெயரைச் சூட்ட வேண்டியது அவசியமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் திசையிலே இதைப் பார்க்க வேண்டுமேயொழிய ஒருவருக்கொருவர் கட்சி சார்பிலே இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று ஜீவா அவர்கள் வலியுறுத்தியது வரலாறு என்பது பலரும் அறியாத செய்தியாகும்.

மேலும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.பாசு மக்களவையில், "சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனவும், மைசூர் மாநிலத்திற்குக் 'கர்நாடகம்' எனவும் பெயரிட வேண்டும்" என ஆணித்தரமாகப் பேசியுள்ளார்.

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 1956 ஆம் ஆண்டு தியாகி சங்கரலிங்கனார் 78 நாள்கள் உண்ணாவிரதம் இருந்து மரணத்தைத் தழுவினார்.

வங்காள மாநிலத்தைச் சேர்ந்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் புகழ்மிக்க தலைவர் பூபேஷ் குப்தா அவர்கள், தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டியதன் தேவையைப் பல்வேறு ஆதாரங்களையும், எடுத்துக்காட்டுகளையும் குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் அழுத்தமாகப் பேசினார். இதனை அப்பொழுது நாடாளுமன்ற

உறுப்பினராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் வரவேற்று வாழ்த்தினார்.

இவ்வளவு முயற்சிகளுக்கும், தியாகங்களுக்கும் பின்னர் அண்ணா தமிழக முதல்வராக ஆன பிறகு. 1967 ஆம் ஆண்டு சூலை 18 ஆம் நாள் 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றம் நடைமுறைக்கு வந்தது என்பதைக் காண்கிறோம்.

வரலாற்று நாயகனாகிய கார்ல் மார்க்சின் காதல் மனைவி ஜென்னியின் உயரிய தியாகத்தையும், மார்க்சுக்காக அவர் பட்ட அளப்பரிய துன்பங்களையும் சித்தரிக்கும் 'மூலதனத்தின் மூலதனம்' எனும் கட்டுரையும், கார்ல் மார்க்ஸ் - பிரடெரிக் எங்கெல்ஸ் ஆகியோரது காவிய நட்பையும் ஈர்க்கத்தக்க வகையில் படம் பிடிக்கும் 'தோழமை' எனும் கட்டுரையும் முத்தாய்ப்பாக விளங்குவனவாகும்.

ஈ.வெ. ராமசாமி நாயக்கர், 'பெரியார்' என அழைக்கப்பட்டதன் வரலாற்றுப் பின்னணியை 'பெரியாரைப் பெரியாராக்கிய பெரியோர்' எனும் கட்டுரை விளக்கமாகத் தெரிவிக்கிறது. 1938 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு' மீனாம்பாள் சிவராஜ், டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், திருவரங்க நீலாம்பிகை அம்மையார், பார்வதி அம்மையார், பண்டித நாராயணி அம்மையார், தாமரைக்கண்ணி அம்மையார் போன்றோர் பங்கேற்கச் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்ற இம்மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"இந்தியாவில் இதுவரையில் தோன்றிய சீர்திருத்தத் தலைவர்கள் செய்ய இயலாமற் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ. இராமசாமி செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவரும் இல்லாததாலும், அவர் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம்மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம்தான் இப்பெண்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலேயே முதலானதும் முக்கியமானதும் ஆகும் என்பது சுவைபடப் பதிவாகி உள்ளது.

ஸ்டாலின் குணசேகரனது சொற்பொழிவு மற்றும் எழுத்துகளைக் கூர்ந்து கவனிப்பவர்கள், அவற்றில் பொதிந்து கிடக்கும் முக்கியமானதோர் அம்சத்தைக் கண்டறிய முடியும். அவரது வெளிப்பாட்டுப் பாணி, ஒரு திரைப்பட இயக்குநரது தன்மையில் அமைந்திருக்கும். அதாவது எதையும் காட்சிப்படிவமாக முன்வைப்பது என்பதுதான் அவரது தனித்தன்மை. அதனாலேயே அவரது சொற்பொழிவாகட்டும், எழுத்தாகட்டும் மக்களை எளிதில் ஈர்க்கிறது.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் கோபுரத்தில் இளம் தேசபக்தர்கள் இந்தியக் கொடியைப் பறக்க விடுவதைச் சித்தரிக்கும் பொழுது, அவரது பேனா, திடுமென ஒரு புகைப்படக் கருவியாகி விடுகிறது. ஏதோ ஒரு துப்பறியும் திரைப்படத்தைப் பார்ப்பது போல் மிகுந்த பீதியோடுதான் வாசகன் அந்தக் காட்சியைக் காண நேர்கிறது. அதே போல், சோசலிசப் புரட்சியாளர்கள் சூர்யாசென் தலைமையில் வங்கத்திலுள்ள 'சிட்டகாங்' ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றும் நிகழ்வையும் நொடிக்கு நொடி ஆவலைத் தூண்டும் காட்சிப் படிமமாகக் காணமுடியும்.

இப்படி வரலாறும், திரைப்படமும், இலக்கியமும் கலந்த சித்திரங்களாக இருப்பதால், இக்கட்டுரைகள் சூடும் சுவையும் மிக்கதாக மிளிர்கின்றன. இத்தகைய பன்முகத்தன்மை (Variety) ஊடுசரமாகக் கரைந்திருப்பதால், ஒரே அமர்வில் வாசிக்கத் தூண்டும் ஈர்ப்பு (Readability) இப்புத்தகத்தின் தனிச்சிறப்பாகும்.

வரலாறு எனும் இயந்திரத்தை இயக்கும் எரிபொருளாக விளங்குபவை வியர்வையும் இரத்தமும்தான். தனிமனித அளவிலாகட்டும், நாடு தழுவிய நிகழ்விலாகட்டும் இந்த இலக்கணம் செவ்வனே பொருந்துவதைக் காண முடியும். அந்த வகையில், இந்நூலிலுள்ள குறுங்கட்டுரைகளில் வியர்வையோ அல்லது இரத்தமோ உறைந்து கிடப்பதை முதல் வாசிப்பிலேயே ஒரு புத்திசாலி வாசகன் கண்டுகொள்ள முடியும்.

'படித்ததில் பிடித்ததும், பிடித்ததில் சுவைத்ததும், சுவைத்ததில் நிலைத்ததுமான செய்திகள், தகவல்கள், வரலாற்றுக் குறிப்புகளை வைத்து இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன' எனவும், 'இந்த வரலாற்றுக் குறுங் கட்டுரைகள், பெரும் நூல்களை வாசிக்கத் தூண்டும் நோக்கில் எழுதப்பட்டவையாகும். இந்நூலை வாசித்தவர்கள் வரலாற்றுத் தேடல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்களெனில், அதுவே இந்நூலின் வெற்றி எனக் கொள்ளலாம்' எனவும் நூலாசிரியர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நூலைப் படித்து முடித்தவர்கள், 'தனது நோக்கத்தில் ஸ்டாலின் குணசேகரன் சிறப்பான வெற்றி பெற்றுள்ளார்' என்பதைக் குன்றின் மேலிருந்து பிரகடனப் படுத்துவார்கள்.

●



கட்டுரை

# பழந்தமிழரின் பயிர்ப்பாதுகாப்பு முறைகள்

முனைவர் ந. பெரியசாமி

மக்களின் வாழ்க்கைநிலை மேம்பட்டு விளங்குவதற்குத் தொழில்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. சங்க காலச் சமுதாய மக்களை அவர்களின் தொழில் அடிப்படையில் உழவர்கள், கைத்தொழில் செய்வோர், வேட்டுவர், இடையர், மீனவர், வணிகர், அரசியல் பணி செய்பவர் என்று பகுத்துப் பார்க்க முடிகிறது. நானிலங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சங்க கால மக்கள் தொழில்களைச் செய்துள்ளனர். இதற்கு நில அமைப்பும் அவர்கள் வாழ்வியற் சூழலும் அடிப்படைகளாக இருந்துள்ளன. வேளாண்மைத் தொழில், நெசவுத் தொழில், இரும்புத் தொழில், அணிகலத் தொழில், ஓவியத் தொழில், இசைக் கருவிகள் செய்தல் போன்றவை குறித்துச் சங்க இலக்கியக் குறிஞ் சித்திணைப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. வேளாண்மைத் தொழில் பற்றிய குறிப்புகள் பலவகையில் பதிவாகியிருக்கின்றன. அவற்றுள் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த பதிவுகள் மிகவும் கவனம் பெற்றுத் திகழ்கின்றன.

**வேளாண் தொழில்**

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. பழங்கால மனிதர்கள் காட்டில் கிடைக்கும் பழங்கள், பயறுகள் போன்றவற்றை உண்டு வாழ்ந்துள்ளனர். மக்கள் தொகை பெருகப் பெருக உணவின் தேவையும் பெருகியது. உணவுக்காக நிலங்களைப் பயன்படுத்திப் பயிர் செய்துள்ளனர். மனிதன் தோன்றியபோதே வேளாண்மையும் தோன்றியது எனலாம். உணவுப்பொருளின் இன்றியமையாமையை உணர்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டனர். எனவே வேளாண்மைத் தொழில் தலைமைத் தொழிலாக, உயிர்த்தொழிலாகப் போற்றப்பட்டது. அ.மு. பரமசிவானந்தம் அவர்கள் வேளாண்மை என்பதற்கு இவ்வாறு விளக்கம் அளிக்கிறார்

“வேளாண்மையைக் குறிக்க ‘Agriculture’ என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. Agriculture என்பது இலத்தீன் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்ததாகும். ‘Ager’ என்றால் வயல் (Field), ‘Culture’

என்றால் பண்படுத்தல் (cultivate) எனப் பொருள் கொள்கின்றனர். இவற்றைப் பெருத்த நோக்கினால் நிலத்தை நல்ல வகையில், மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுக்கும் வகையில், நல்ல பயிர்விளையும் வகையில் பண்படுத்துதல் 'Agriculture' ஆகின்றது (சமுதாயமும் பண்பாடும், ப. 219).

வேளாண்மை என்ற சொல்லுக்குக் கொடை, உபகாரம், பயிர் செய்யுந்தொழில், சத்தியம் எனவரும் பொருளைத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகின்றன.

தமிழர் சமுதாயம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையுடையதாக இருந்திருக்கிறது. சங்க கால மக்கள் நிலங்களை நான்கு வகையாகப் பிரித்து, அந்தந்த நிலங்களுக்கேற்ற தொழில்களைச் செய்து வந்துள்ளனர். இன்றைக்கு இருப்பதுபோலவே பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பகுதி மக்கள் வேளாண்மையையே தங்கள் வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டிருந்தனர்.

**விளைநிலங்களை உருவாக்குதல்**

வேளாண்மைத் தொழிலுக்கு நிலமும், நீரும் இன்றியமையாதவையாகும். மலைப் பகுதியில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் வேளாண்மைத் தொழிலுக்கு ஏற்றவாறு நிலத்தை வெட்டிச் சீர்செய்து, பயிர் செய்துள்ளனர். மேலும் மலைப் பகுதியிலுள்ள காடுகளை அழித்தும், மரங்களை வெட்டியும் விளைநிலங்களை உருவாக்கியுள்ளனர்.

விளைநிலங்களுக்காக வெட்டப்பட்ட மரங்களைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். மரங்களை வெட்டிச் சுட்டெரித்துச் சீர்திருத்தப்பட்ட புனம் 'சுடுபுனம்' என்றழைக்கப்பட்டது. மரங்களை எரித்ததால் மண் நன்கு சுடப்பட்டு பயிர்கள் நன்றாக வளர உதவுகின்றது. மரங்களை எரித்ததனால் கிடைக்கக்கூடிய சாம்பல் உரமாகவும் பயன்பட்டிருக்கிறது. தீயினால் காட்டினைத் திருத்தி எரிக்கப்பட்ட கொல்லை 'எரிதின் கொல்லை' என்றழைக்கப்பட்டது. குறவர்கள் காடுகளிலுள்ள அகில், சந்தனம் போன்ற மரங்களை வெட்டியழித்து விளைநிலத்தை உருவாக்கிய செய்தி காணப்படுகின்றது.

"சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்
படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே" (குறுந். 291; 1-2)
"நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை" (குறுந். 339; 1)
"எரிதின் கொல்லை யிறைஞ்சிய ஏனல்" (அகம். 288; 5)

வேளாண்மைத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதிகள் அதனியல்பு கருதி வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டதைச் சங்கப் பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது. குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலம் 'துடவை' என்றும், பழமையான விளைநிலம் 'முதைபுனம்' என்றும், மரங்களை வெட்டியெரித்து உருவாக்கிய நிலம் 'சுடுபுனம்' என்றும் வழங்கப்பட்டுள்ளன. காடுகளை அழித்து விளைநிலமாக்கப்படும் புதிய நிலம் 'இதை' என்று வழங்கப்பட்டுள்ளது. 'புனம்' என்பது மலைச்சார்பான கொல்லையாகும்.

"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை" (குறுந்.105; 1)
"முதைபுனங் கொன்ற ஆர்கலி உழவர்" (குறுந்.155; 1)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய இந்நானிலங்களும் வன்புலம், மென்புலம் என்ற இரு பிரிவில் அடங்குகின்றன. மண்வளமும், நீர்வளமும் குறைந்த பகுதியாகிய குறிஞ்சியும், முல்லையும் வன்புலத்திலும் மண்வளமும், நீர்வளமும் நிறைந்த பகுதியாகிய மருதமும், நெய்தலும் மென்புலத்திலும் அடங்குகின்றன. தினை, வரகு முதலிய புன்செய் பயிர் விளையும் நிலங்களைப் 'புன்புலம்' என்றழைத்தனர். இதை ஒரு ஐங்குறுநூற்றுப் பாடல் இவ்வாறு சுட்டுகிறது:

"புன்புலம் வித்திய புனவர் புணர்த்த" (ஐங். 246; 3)

**நீர் ஆதாரங்கள்**

பயிர்த்தொழிலுக்கு நிலத்தை அடுத்து மிகவும் இன்றியமையாதது நீர்வளமாகும். ஒரு நாட்டின் வளமும் நலமும் அந்நாட்டின் நீர்வளத்தைக் கொண்டு அமைகின்றன. மனிதனுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உருவாக்குவதற்கும், மனிதனின் உடல் நலத்திற்கும் நீர் இன்றியமையாததாகின்றது. நீரில்லையேல் இவ்வுலகம் இல்லை என்று கபிலர் குறிப்பிடுகின்றார். பண்டைக் காலந்தொட்டே வேளாண்மைக்கு நீர் வளம் தேவை என்பதை மக்கள் அறிந்திருந்தனர். நீர்நிலைகளை அமைத்துக் கொடுப்பது அரசனின் கடமையாகக் கருதப்பட்டது.

திணை அடிப்படையில் வாழ்ந்த சங்க கால மக்கள், அந்தந்த நிலத்திற்கும் இயற்கையாக அமைந்த நீர்நிலைகளையும் செயற்கையாக அமைத்துக்கொண்ட நீர்நிலைகளையும் அன்றாட வாழ்க்கைக்கும், வேளாண்மைக்கும் பயன்படுத்திக் கொண்டனர். குறிஞ்சி நிலத்தில் இயற்கையாக அமைந்த நீர்நிலைகளாக அருவியும், சுனையும் காணப்படுகின்றன. அருவி நீரும், சுனை நீரும் வேளாண்மைத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டன.

"மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும்" (குறுந். 371; 1-2)
"அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்ப" (நற். 5; 2)

மழை நீர் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய செல்வமாகும். உழவுத் தொழிலுக்கு ஏற்றவாறு பெய்யும் மழை 'தொழில் மழை' என்று அழைத்தனர். குறிஞ்சி நில மக்கள் பருவமழை பெய்யாத காலங்களில் மழைநீரைக் குளங்களில் சேமித்து வைத்துப் பயன்படுத்தியுள்ளனர். நீர் சேமித்து வைத்துள்ள குளங்களின் கரைகள் உடையாமல் பாதுகாக்கக் காவல் பணி மேற்கொள்ளப்பட்டிருந்ததைக் குறிஞ்சித்திணைப் பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

"தொழின்மழை பொழிந்த பானாட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉஞ் சிறுகோட்டுப்
பெருங்குளங் காவலன் போல" (அகம். 252; 11-13)
"அன்னாய் வாழிவேண் டன்னை யுவக்காண்
மாரிக் குன்றத்துக் காப்பா என்னன்" (ஐங். 206; 1-2)

பழந்தமிழர்கள் நீர்நிலைகளை அமைக்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் சிறந்து விளங்கியுள்ளனர். பள்ளமான பகுதிகளையும், அறைகளையும் பொறைகளையும் இடையிடையே கரையாக அமையுமாறு பிறைவடிவில் குளங்களை அமைத்துள்ளனர். குளங்களுள் சிறுகுளம், பெருங்குளம் என இரண்டு வகை காணப்படுகின்றது. இவற்றுள் சிறுகுளத்து நீர் குடிப்பதற்கும், பெருங்குளத்து நீர் பயிர்த்தொழிலுக்கும் பயன்படுத்தப்பட்டதைக் கீழ்வரும் புறநானூற்றுப் பாடலடிகளால் அறிந்துகொள்ள முடிகின்றது.

"அறையும் பொறையும் மணந்த தலைய
எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர் சிறுகுளம்" (புறம். 118; 1-3)

பெய்த மழைநீரைக் கொண்டு பயிர்செய்ததோடு மட்டுமல்லாமல், எஞ்சிய நீரைத் தேக்கி வைத்து மழை பெய்யாக் காலத்தில் பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது.

**உழவும் வாழ்வும்**

'அகல உழுதலின் ஆழ உழுதல் நன்று' என்பது பழமொழியாகும். எருதுகளைக் கொண்டு பல ஏர்களால் நிலத்தை உழுத செய்தி குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணப்படுகின்றது. அவ்வாறு உழுத நிலத்தில் பயறுகளை விதைத்துள்ளனர். நிலத்தை உழுவதற்கு எருதுகளை மட்டுமின்றி எருமைகளையும் சங்க காலத்தில் பயன்படுத்தியுள்ளனர்.

"முதைபடு பசுங்காட் டரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட வுழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்து" (அகம். 262; 1-3)
"பெருநெல் பல்கூட்டு எருமை உழவ" (நற். 60; 2)

களைகளைப் போக்கவும், ஈரம் தாங்கவும், பயிர்கள் நன்றாக வேர்விட்டுப் படரவும், கீழ்மண் மேலும், மேல்மண் கீழும் புரளவும் ஆழ உழும் முறையே உழவர்களால் இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. வேளாண்மையில் உழுதல், உரமிடுதல், களைநீக்குதல், நீர் பாய்ச்சுதல், பயிர்ப்பாதுகாப்பு ஆகியவை இன்றியமையாதவையாகும்.

சங்க காலத்தில் விதைப்பயிறுகளை விதைக்க 'வட்டி' என்ற சிறுபெட்டியைப் பயன்படுத்தியுள்ளனர். இதைக் 'கடகப்பெட்டி' என்றும் வழங்கியுள்ளனர். ஓலை அல்லது மூங்கில்களைக் கொண்டு 'வட்டி' செய்யப்பட்டுள்ளதைக் கீழ்க்காணும் அறியமுடிகின்றது.

"முதைப்புனங் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுள" (குறுந். 155; 1-2)

**பயிரிடுதல்**

குறிஞ்சி நில மக்கள் ஐவன நெல், தினை, பருத்தி, அவரை, உழுந்து போன்ற பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். ஐவன நெல் மலைப்பகுதிகளில் விளையும் நெல்லாகும். இதை 'மலைநெல்' என்றும் வழங்குவர். மலைப்பகுதியிலுள்ள காடுகளைத் தீயிட்டுக் கொளுத்திச் சீர்செய்த நிலங்களில் அருவி நீரைக்கொண்டு ஐவன நெல்லை விதைத்துள்ளனர்.

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி" (குறுந். 100; 1)
"துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி
ஐவனங் கவருங் குன்ற நாடன்" (ஐங். 267; 2-3)

வேளாண்மைத் தொழில் செய்து வந்த மக்கள் எந்தெந்தக் காலங்களில், எந்தெந்தத் தாவரங்கள் காய்க்கும் என்பதை அறிந்திருந்தனர். பருவ காலத்திற்கு ஏற்றவாறு பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். உழுந்து பனிப்பருவத்தில் காய்க்கும், அவரை பனிப்பருவத்தில் மலரும் போன்ற செய்திகள் குறுந்தொகைப் பாட்டொன்றில் இடம்பெற்றுள்ளன.

"பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி அவரை பூக்கும்
அரும்பனி அற்சிரம் வாரா தோரே" (குறுந். 82; 4-6)

**ஊடுபயிர் முறை**

"ஒரு பயிரின் வரிசைகளுக்கிடையில் மற்றொரு பயிரைச் சாகுபடி செய்தல் 'ஊடுபயிரிடுதல்' எனப்படும். ஊடுபயிர் முறையில் முதன்மைப் பயிரின் (Main Crop) எண்ணிக்கை எவ்வகையிலும் பாதிக்கப்படக்கூடாது. பயிரின் இடைவெளியைத் தக்க மாற்றம் செய்து ஊடுபயிரான (Inter crop) வேறொரு பயிரை அவ்விடைவெளியில் பயிரிட வேண்டும். ஊடுபயிரின் வயது முதன்மைப் பயிரின் வயதைவிடக் குறைவாக இருத்தல் வேண்டும். சில சமயங்களில் ஊடுபயிரின் வயது முதன்மைப் பயிரின் வயதைவிடக் கூடுதலாக இருப்பதும் உண்டு." இவ்வாறு அறிவியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

குறிஞ்சி நில மக்கள் தினைப் பயிர்களுக்கிடையே அவரையையும், பருத்தியையும் ஊடுபயிராக விதைத்திருந்த செய்தி காணப்படுகிறது. தினை கொய்த தாளில் அவரை படர்ந்து காய்த்திருக்கின்றது. இதிலிருந்து ஒரு பயிருக்கிடையே மற்றொரு பயிரைப் பயிரிடும் 'ஊடுபயிர்' முறையைச் சங்க காலத்திலேயே தமிழர்கள் அறிந்திருந்ததைக் காணமுடிகிறது.

"சிறுதினை கொய்த விருவி வெண்காற்
காய்த்த வவரைப் படுகிளி கடியும்" (ஐங். 286; 1-2)
"பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி யவரை பூக்கும்" (குறுந். 82; 4-5)
"வரை வெள்ளருவி மாலையின் இழிதர
கூலம் எல்லாம் புலம்புக நாளும்" (நற். 93; 2-3)

நற்றிணையின் முதல் பதிப்பாசிரியராகிய பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் மலைப்பகுதியில் வாழ்ந்த குறவர்கள் நெல், புல், வரகு, சாமை, தினை, இறுங்கு, தோரை, இராகி, எள், கொள், பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, சோளம், கம்பு ஆகிய பதினெட்டு வகைக் கூலங்களை விளைவித்ததாக உரை எழுதியிருப்பது கவனத்திற்குரியது.

#### எருவிடுதல்

சங்க காலத்தில் கால்நடைகளின் கழிவுகளையும், இலை தழைகளையும் உரமாகப் பயன்படுத்தியுள்ளனர். நிலத்தின் வளத்திற்கும், பயிர்களின் வளத்திற்கும் எருவிடுதல் இன்றியமையாததாகும். தொழு உரமிடுவதும், தழையுரமிடுவதும் இன்றும் வழக்கிலுள்ளன. அறிவியல் வளர்ச்சியால் செயற்கை உரங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. பயிருக்குத் தேவைப்படும் சத்துக்களை தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து இவற்றில் எது தேவையோ அதை மட்டும் இடும் முறையும், இலை வழியாக உரமிடும் முறையும் (Foliar application) அறிவியல் வளர்ச்சியால் விளைந்தவையாகும். மீண்டும் தொழு உரங்கள் (farm yard manure), பசுந்தாள் உரங்கள் (green-manure), உயிர் உரங்கள் (Bio-fertilizer) ஆகிய இயற்கை உரங்களைப் பயிருக்கு இடும் சூழல் தற்காலங்களில் உருவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"முதைபடு பசுங்காட் டரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட வுழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்து" (அகம். 262; 1-3)
"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" (குறள். 1038)

குறிஞ்சி நில மக்கள் பழமையான நிலங்களில் மழை பெய்து நன்கு வளர்ந்துள்ள கொடிகள் மண்ணில் மறையும்படி உழுத செய்தி காணப்படுகின்றது. கொடிகள் தழையுரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலத்தை உழுவதற்கு முன்னர் எரு இட்டுள்ளனர். உழுவதைக் காட்டிலும் உரமிடுதல் சிறந்தது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

#### பயிர்ப் பாதுகாப்பு

மலையும் மலை சார்ந்த பகுதியில் விளைந்த பயிர்களைப் பறவைகளிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் பாதுகாப்பது பெரும் பணியாக இருந்துள்ளது. குறிஞ்சிக் குறவர்கள் யானை, பன்றி போன்ற விலங்குகளை விரட்டித் தினைப்புனக் காவல் மேற்கொண்டிருந்தனர். குறிஞ்சி நிலக் கொடிச்சியர் இசைக்கருவிகளை இசைத்து கிளிகளை விரட்டியுள்ளனர்.

#### கிளிகடிதல்

குறிஞ்சி நிலத்திற்குரிய ஒழுக்கம் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகும். தலைவியின் பெற்றோர் தலைவியைத் தோழியுடன் கிளிகளை விரட்டத் தினைப்புனத்திற்கு அனுப்புகின்றனர். தினைப்புனக் காவலில் உள்ள தலைவி தலைவனைச் சந்திக்கின்றாள். இத்தகைய சூழலையுடைய குறிஞ்சித்திணைப் பாடல்களில் பயிர்ப்பாதுகாப்பு குறித்த செய்திகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன.

"வேங்கைஅம் கவட்டிடைச் சாந்தின் செய்த
களிற்றுத்துப்பு அஞ்சாப் புலிஅதள் இதணத்து
சிறுதினை வியன்புனம் காப்பின்" (நற். 351; 6-8)
"நெடுவரை ஆசினிப் பணவை ஏறி" (கலி. 41; 9)

வேங்கை மரத்தின் உயர்ந்த கிளையில் கட்டிய பரணில் இருந்து கிளிகளை ஓட்டிய செய்தி காணப்படுகின்றது. சந்தன மரக்கட்டைகளைக் கொண்டு பரண் அமைத்து, அதன்மேல் புலித்தோலை விரித்துள்ளனர். இத்தகைய பரணின் மீதிருந்து தலைவி கிளிகளை விரட்டியதாகக் கூறப்படுகின்றது. பரணை இதணம், கழுது, பணவை என்ற பெயர்களால் வழங்கியுள்ளனர்.

#### கிளிகடி கருவிகள்

குறிஞ்சி நில மக்கள் தழல், தட்டை, குளிர், கணை, கிணைப்பறை, கவண் போன்ற கருவிகளைக் கொண்டு கிளிகளை ஓட்டியுள்ளனர். மேலும் தொண்டகச் சிறுபறையை இசைத்தும் கிளிகளை விரட்டித் தினைப்புனக் காவல் புரிந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்களால் அறியமுடிகின்றன.

#### குளிர்

குளிர் என்னும் கருவி கொண்டு தினைப்புனத்தில் மேய வரும் கிளிகளை விரட்டியுள்ளனர். இக்கருவிகளைக் கொண்டு பெரும்பாலும் பெண்களே கிளிகளை விரட்டியுள்ளனர். இக்கருவி இசைக்கு ஏற்பப் போடப்படும் தாளத்தைப் போன்று ஒலிக்கக்கூடியது. குளிர் என்பது மூங்கிலை வீணைபோல் கட்டித் தெரித்து ஓசை எழுப்பும் கருவியாகும். ஒரு சில நேரங்களில் குளிரின் ஓசையைக் கேட்டு மயங்கிய கிளிகள் தினைப்புனத்தை விட்டுப் போகாமலும் இருப்பதுண்டு என்று உ.வே.சாமிநாதையர் குறுந்தொகை உரையில் குறிப்பிடுகின்றார்.

"படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே
இசையின் இசையா இன் பாணித்தே" குறுந். 291; 2-3)

#### தட்டை

தட்டை என்பதும் தட்டைப்பறை என்பதும் ஒன்றாகக் கொள்ளப்பட்டுள்ளது. மூங்கிலைக் கணுக்குக்கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாக ஒன்றிலே தட்டுவது என்று நச்சினார்க்கினியர் குறிஞ்சிப்பாட்டு உரையில் குறிப்பிடுகின்றார். தட்டையின் ஒலியைத் தேரை எழுப்பும் ஒலிக்கு உவமையாகச் சங்கப்புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்" (குறுந். 193; 2-3)

**தழல்**

மலைச் சாரலில் உள்ள கொடிப் பிரம்பினால் பின்னிய, தழல் என்னும் கருவியைக் கையால் சுழற்றும்போது எழும் ஓசையின் வழி பறவைகளை விரட்டியுள்ளனர். தழல் என்ற கருவியைச் சுழற்றியும், தட்டை என்ற கருவியைப் புடைத்தும் (தட்டியும்) தினைப்புனத்தைப் பாதுகாத்துள்ளனர். குளிர், தட்டை, தழல் ஆகிய இம்மூன்று கருவிகளும் பெண்களால் மட்டும் பயன்படுத்தப்பட்ட பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளாகும்.

"தழலை வாங்கியும் தட்டை யோப்பியும்
அழலேர் செயலை அந்தழை அசைஇயும்
குறமகள் காக்கும் ஏனல்" (அகம். 188; 11-13)
"தழலும் தட்டையும் குளிரும் பிறவும்
கிளிகடி மரபின ஊழூழ் வாங்கி" (குறிஞ். 43-44)

**கவண்**

கவண் என்பது கைவிரலுள் கோத்துச் சுழற்றும் கயிற்றுக் கருவியாகும். கவணைக் கொண்டு குறிஞ்சி நில மகளிர் பறவைகளையும், கானவர்கள் விலங்குகளையும் விரட்டியுள்ளனர். தினைப்புனத்தில் மேய்கின்ற யானைகளை விரட்டக் கவண் கல் எறிந்துள்ளனர். கானவர்கள் நீண்ட ஆசினிப்பலா மரத்தில் கட்டப்பெற்றுள்ள பரணின்மீது ஏறிநின்று கவண் கல் எறிகின்றனர். அவ்வாறு எறியப்பட்ட கல்லானது, வேங்கைப் பூக்களைச் சிதறி, கனிந்த ஆசினிப் பலாவை உதிர்த்து, தேன் கூட்டைச் சிதைத்து, மாங்கொத்துக்களை உழக்கி, வாழை மடலைக் கிழித்துப் பலாப்பலத்தினுள் சென்று தங்குவதாகக் கூறப்படுகின்றது. இதிலிருந்து கவண் கல் வீசுவோர் ஆற்றலையும், அக்கல் செல்லும் வேகத்தின் திறனையும் கீழ்க்காணும் கலித்தொகைப் பாடலால் அறிய முடிகின்றது.

"கடுவிசைக் கவணையில் கல் கை விடுதலின்
இறுவரை வேங்கை ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிரா
தேன்செய் இறாஅல் துளைபடப் போகி" (கலி 41; 10-13)

**விலங்குகடி கருவிகள்**

சங்க கால மக்கள் அடார், கணை, கிணை, ஞெகிழி போன்ற கருவிகள் விலங்குகளை விரட்டுவதற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

**ஞெகிழி**

யானையை விரட்டுவதற்குக் கொள்ளிக் கட்டையைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வழக்கம் இன்றும் உள்ளதைக் காணலாம். யானை முதலான விலங்குகள் நெருப்புக்கு அஞ்சும் என்பதையறிந்து கொள்ளி கொண்டு யானையை ஓட்டியுள்ளனர்.

"ஞெகிழியில் பெயர்த்த நெடுநல் யானை" (குறுந். 357; 6)

**கணை, கிணைப்பறை**

குறிஞ்சி நில மக்கள் தினைப்புனத்தில் புகுந்த யானையை வில் கொண்டு 'கணை' எய்து விரட்டிய செய்தி காணப்படுகின்றது. 'கிணை' என்பது ஒருவகைப் பறையாகும். கிணைப்பறையால் ஒலியெழுப்பி விலங்குகளிடமிருந்து பயிர்களைக் காத்துள்ளதை அறியமுடிகிறது. யானையை விரட்டுவதற்குக் குறிஞ் சித்திணைக்குரிய தொண்டகச் சிறுபறையையும் பயன்படுத்தியுள்ளனர்.

"ஒளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென ஆர்ப்பவர் ஏனல் காவலரே" (கலி. 52:13-14)
"சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்
திரவரி வாரின் தொண்டகச் சிறுபறை" (குறுந். 375; 3-4)

**அடார்**

தினைப்புனத்தில் விளைந்த தினையை மேய வருகின்ற பன்றியைப் பிடிக்க 'அடார்' என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். 'அடார்' என்பது பெரிய கல்லாலான அமைப்பாகும். கருங்கல் பலகையை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கீழே முட்டுக்கொடுத்து உணவை உள்ளே வைத்திருப்பர். உணவை உண்ண வரும் விலங்கு அந்த முட்டைத் தொட்டவுடன் கல் விழுந்து அதனுள் மாட்டிக்கொள்கிறது. பன்றிகள் தினைப்புனத்திற்கு வரும் சிறிய வழிகள்தோறும் இக்கற்பொறியை வைத்திருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழியாக அறியமுடிகிறது.

"தினையுண் கேழல் இரியம் புனவன்
சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்
ஒண்கேழ் வயப்புலி படூஉம் நாடன்" (நற். 119; 1 - 3)
"விளைபுன நிலத்திலின் கேழல் அஞ்சிப்
புழைதொறும் மாட்டிய இருங்கல் அடாஅர்"
(மலை. 193-94)

தற்காலத்தில் அணில், எலி போன்ற சிறிய விலங்குகளைப் பிடிக்க வெடால் அல்லது எடால் என்ற கருவி பயன்படுத்தப்படுகின்றது. சங்க காலத்தில் பயன்படுத்திய 'அடார்' என்ற கருவியின் சிறிய மாற்று வடிவமாக வெடாலைக் கருதலாம்.

**பொய்ப் புலி உருவம்**

தினைப்பயிரை சிறிய விலங்குகள் அழிக்காமல் காக்கப் பெண்புலிபோல் உருவம் செய்து, அதற்குக் கழலைக்காயைக் கண்ணாக அமைத்து உயிருள்ள புலி போன்ற தோற்றத்துடன் நிறுத்தியுள்ளனர். இப்பெண் புலியின் பொய்த்தோற்றம் கண்டு, அப்பக்கம் ஆண்புலியின் இயக்கம் இருக்கும். புலிக்கு அஞ் சிய விலங்குகள் தினைப்புனத்திற்கு வருவதில்லை. இதிலிருந்து உயிர்களிடையே அச்ச உணர்வை உண்டாக்கி அவைகளிடமிருந்து பயிர்களைக் காக்கும் ஓர் உத்தியைக் கையாண்டுள்ளதை அறியமுடிகிறது.

"கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉ
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த
மெய்ம்மை யன்ன பெண்பாற் புணர்ந்து" (ஐங். 246; 2 - 4)

'பொய்ப்புலி' முறையை இன்று வயல்களில் வைக்கப்படும் சோளக்கொல்லைப் பொம்மையோடு ஒப்பு நோக்கலாம்.

**களையெடுத்தல்**

நன்செய் நிலங்களில் விளைந்த களைகளைக் கையால் பிடுங்கியும், புன்செய் நிலத்தில் விளைந்த களைகளைத் 'துளர்' (களைக்கொட்டு அல்லது களைக்கொத்து) கொண்டு வெட்டியும் எடுத்த செய்தி காணப்படுகின்றது. நன்செய் பயிரான நெற்பயிருக்கிடையே களையாக வளர்ந்துள்ள மலை மல்லிகை, மரல் ஆகியவற்றைக் கையால் பறித்ததையும், புன்செய் பயிரான தினையிடையே வளர்ந்துள்ள களைகளைத் துளர் கொண்டு வெட்டி எடுத்ததையும் கீழ்க்காணும் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணமுடிகின்றது.

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்" (குறுந். 100; 1-3)
"கடவை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
துளரெறி நுண்டுகட் களைஞர் தங்கை" (குறுந்.392; 4-5)

**அறுவடை**

கார்ப் பருவ மழையில் விதைக்கப் பெற்ற புன்செய் பயிர்கள் முன்பனிக் காலத்தின் தொடக்கத்தில் விளைந்து விடுகின்றன. வேங்கை மலர்கள் மலர்ந்தவுடன் தினை அறுவடை செய்யப்படுகின்றது. வேங்கை பூப்பது தினை அறுவடைக்குரிய காலமாகக் கருதப்படுகின்றது. குறிஞ்சி நில மக்கள் இரவு நேரங்களிலும் தினை அறுவடை செய்துள்ளனர். இரவு நேர அறுவடையின்போது விலங்குகள் அணுகாமலிருக்கத் தொண்டகப் பறையடித்து விலங்குகளை விரட்டி அறுவடை செய்ததைக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணமுடிகின்றது.

"சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து
இரவுஅரி வாரின் தொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்துங் கறங்கும்" (குறுந். 375; 3-5)

கதிர்களுடன் கூடிய தினை, வரகு போன்றவை தாளுடன் அறுவடை செய்யப்பட்டன. அறுவடை செய்தவற்றைப் பாறைகளின்மேல் குவித்து வைத்து, எருது அல்லது யானையைக் கொண்டு தாம்படித்த செய்தி காணப்படுகின்றது.

"மென்தினை நெடும்போர் புரிமார்
துஞ்சுகளிறு எடுப்பும் தம்பெருங்கல் நாட்டே"
(நற். 125; 11-12)

"எருதுகால் உறாஅது இளைஞர் கொன்ற
சில்வினை வரகின் புல்லென் குப்பை" (புறம். 327; 1-2)

குறைந்த அளவு விளைச்சல் எனில் இளைஞர்கள் காலால் மிதித்துத் தானியங்களைப் பிரித்ததையும் அறிய முடிகிறது.

**தானியப் பாதுகாப்பு**

யானை அல்லது எருதுகளைக் கொண்டு தாம்படித்துப் பிரித்தெடுத்தத் தானியங்களைப் பாறைகளின் மேலிட்டுக் குறவர்கள் நன்கு காயவைத்துள்ளனர். இவ்வாறு காய வைப்பதனால் தானியங்களிலுள்ள ஈரம் உலர்ந்து, நீண்ட நாள் கெடாமலிருக்க உதவுகின்றது. நன்செய் பயிராகிய நெல்லைக் 'கூடு' மற்றும் 'நெடுங்கூட்டிலிட்டும்', புன்செய் பயிராகிய தினை, வரகு போன்றவற்றைக் 'குதிர்' மற்றும் 'தொடுகூடுகளிலிட்டும்' சேமித்து வைத்திருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழியாக அறியமுடிகின்றது.

"இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பி" (குறுந். 335; 2)
"செவ்வி சேர்ந்த புள்ளி வெள்ளரை
விண்டுப் புரையும் புணர்நிலை நெடுங்கூட்டுப்
பிண்ட நெல்லின் தாய் மனை (நற். 26; 2-4)

குறிஞ்சி நில மக்கள் காடுகளை வெட்டியழித்து, மரங்களை எரித்து, நிலங்களைத் திருத்திப் பயிர் செய்துள்ளனர். தினைப் பயிர்களுக்கிடையே அவரையையும், பருத்தியையும் ஊடுபயிராக விதைத்திருந்தனர். பண்டைத் தமிழரிடம் ஊடுபயிர் முறை செழுமைபெற்று இருந்ததைச் சங்க இலக்கியங்களால் அறிய முடிகிறது.

நெல், புல், வரகு, சாமை, தினை, இறங்கு, தோரை, இராகி, எள், கொள், பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, கம்பு, சோளம் ஆகிய பதினெட்டு வகைப் பயிறுகளை மலைப்பகுதியில் விதைத்திருந்தனர். வேங்கை மலர்கள் மலரும் காலமே அறுவடைக்குரிய காலமாகக் கருதப்பட்டது. குளிர், தட்டை, தழல், கவண், ஞெகிழி, கணை, கிணைப்பறை, அடார் போன்றவற்றைப் பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளாகச் சங்க கால மக்கள் பயன்படுத்தியுள்ளனர். அவ்வகைப் பாதுகாப்பு முறைகள் பலவும் தற்கால வேளாண் குடிகளிடம் இன்றளவும் வழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. பதிப்பாசிரியர் குழு, தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், 1982,
2. பரமசிவானந்தம், அ.மு., சமுதாயமும் பண்பாடும், தமிழ்க் கலைப் பதிப்பகம், சென்னை, 1972, இரண்டாம் பதிப்பு.
3. பதிப்பாசிரியர் குழு, அறிவியல் களஞ்சியம், தொகுதி 5, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988
4. நாராயணசாமி ஐயர், நற்றிணை மூலமும் உரையும், சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம், 1915


●

ADVT

ADVT

ADVT


ADVT

ADVT

ADVT

ADVT

ADVT



அஞ்சலி

# அழியா எழுத்து: சாயாவனம் கந்தசாமி

## முனைவர் இரா. காமராசு

**"என் கதைகளில் கதைகளே கிடையாது. கதைகளில் இருந்து கதையைப் புறந்தள்ளியவை என் கதைகள்" என்று சொன்ன எழுத்தாளர் சா. கந்தசாமி காலமானார் (ஜூலை 31, 2020).**

ஒன்றுபட்ட தஞ்சையின் காவிரி தீரத்தில், 1940 ஜூலை 23இல் ஓர் வேளாண் குடும்பத்தில் பிறந்தார். வேளாண்மையும், நெசவும் செழித்த மயிலாடுதுறை - கூறைநாடு அவரது பூர்வீகம். "பூம்புகார் என் தாயார் வீடு, அந்தக் காலங்களில் சீர்காழி, பூம்புகார் போன்ற இடங்களைச் சுற்றியிருக்கிறேன். எங்களம்மா கூட பூம்புகாருக்கு காவேரிக்கரையோரமா நடந்தே போகிற பழக்கம் உண்டு. அங்குக் கண்ட இளமைக்கால நினைவுகள்தான் என் கதைகளில் வருகிறது" என்று அவரே தான் பிறந்து வளர்ந்த சூழலைக் குறிப்பிடுவார்.

பள்ளிப்பருவத்தில் சா. கந்தசாமியின் குடும்பம் சென்னைக்குப் புலம்பெயர்ந்தது. வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை மேல்நிலைப்பள்ளியில் பயின்று, பின்னர் சென்னை மத்திய பாலிடெக்னிக்கில் ஆட்டோமொபைல் பட்டயப்படிப்புப் படித்தார். பின்னர் சென்னை குரோம்பேட்டையில் உள்ள எம்.ஐ.டி.யில் பரிசோதனைக் கூடத்தில் முதலில் பணிக்குச் சேர்ந்தார். பின்னர் இந்திய உணவுக் கழகத்தில் பணியாற்றி இணை இயக்குநர் நிலையில் விருப்ப ஓய்வு பெற்றார்.

சா.க. பதின் பருவம் தொடங்கி நூல்களைக் கற்பதில் ஆர்வமுடன் இருந்தார். வெ.சாமிநாதசர்மாவின் நூல்களை விரும்பி வாசித்ததைக் கூறுவார். 1964 தொடங்கி சென்னை கன்னிமரா நூலகத்தின் தீவிர வாசகராக இருந்தார். புத்தக வாசிப்பு போலவே ஓவியம் தீட்டுவதிலும் தொடக்கம் முதலே ஆர்வமுடன் விளங்கினார். பின்னர் சிற்பம், இசை, திரைப்படம், கலைகள் எனத் தன் எல்லைகளை விரிவாக்கினார். தமிழ்ச் சூழலில் இலக்கியத்தைப் பிற நுண்கலைகளோடு சேர்த்து அணுகியவர் அவர். அசோகமித்திரன் திரைப்படத்துறையை எழுத்தோடு இணைத்துப் பார்த்ததைப்போல சா.க. செயலாற்றினார்.

பெரியாரின் தொடர்புறவால் திராவிட இயக்கம், தமிழுணர்வில் சா.க. ஈடுபாடு கொண்டார். என்றாலும், இலக்கியத்தில் தனக்கெனத் தனித்தன்மையை நிலை நாட்டினார். சென்னை நண்பர்களுடன், 'கசடதபற' இதழைத் தொடங்கி

நடத்திய அனுபவம் இவரை நவீன இலக்கியத்தில் நிலை நிறுத்தியது. இவர் மௌனியின் தொடர்ச்சியாக தன்னைக் கருதியதுண்டு. சமூகம் சார் சிக்கல்களைக் காட்டிலும், மனித மனம் சார் சிக்கல்களை முதன்மைப்படுத்தினார். இவரது சிறுகதைகள் வித்தியாசமான களங்களைத் தொட்டது. பாலுணர்வு, மனவிகாரங்கள் பல கதைகளில் மையம் கொண்டன. தன் போக்கில் வாழ்க்கை நிகழ்வுகளை நடத்திக் காட்டியது இவரது எழுத்து.

1960களில் தமிழ் எழுத்துலகில் கலை கலைக்காக, கலை மக்களுக்காக என நிகழ்ந்த விவாதப் புள்ளியில் முகிழ்த்தது சா.க.வின் படைப்பு வாழ்க்கை, அவர் இரண்டுக்கும் நடுவாகவும், பாலமாகவும், ஒரு விதத்தில் பதிலாகவும், தன் படைப்புகளை அமைத்துக் கொண்டார் எனலாம். எனினும் புரிகிறமாதிரி எழுதுவது, வாழ்க்கையை நுணுகிப் பார்ப்பது, மக்களை, அவர்தம் மொழியைப் பதிவு செய்வது என்பதில் உறுதியாக இருந்தார்.

நிறைய நாவல்கள் எழுதினார், சாயாவனம். அவன் ஆனது, தொலைந்து போனவர்கள், ஏரிக்கரையிலே, எட்டாவது கடல், விசாரணைக் கமிஷன், சொல்லப்படாத நிஜம், வான்கூவர், இன்னொருமனிதன், ரம்பையும் நாச்சியாரும் போன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கவை.

சா.க.வுக்கு முன் அடையாளமாக அமைந்தது ‘சாயாவனம்’ அவரின் முதல் படைப்பு. இருபது வயதில் எழுதியது. இலக்கிய வட்டம் வெளியீடாக வந்தது. அவரின் ஆகச்சிறந்த படைப்பு இது எனலாம். காவிரிக் கரையோரத்தில் இருக்கும் ஒரு சிற்றூர் வேளாண் வாழ்விலிருந்து தொழிற்கருவி வாழ்வுக்கு மாறுவதை நுட்பமாகச் சித்தரிப்பார். கரும்பாலைச் சக்கரங்களில் அரைபடும் பல்லுயிர்களைக் கவனப்படுத்தினார். வனம் - காடு அழிவில் நாடு வாழுமா? எனும் உள்ளக் குமுறலை சூழலியல் கவனம் பெறாத 1970களில் மையப்படுத்தியது நாவல். நகரம் X கிராமம், வேளாண்மை X தொழிற்சாலை என்ற முரண்கள் பண்பாட்டு நிலவியல் அடையாளங்களுடன் துலக்கம் பெற்றது.

1998-இல் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற ‘விசாரணைக் கமிஷன்’ இன்றைய நம் அதிகார வர்க்கம் பற்றிய விசாரணையாக அமைந்தது. ஓர் எளிய குடும்பம் காவல், நீதி, தொழிற்சங்கம், சமூகம் ஆகியவற்றால் எப்படி அலைக்கழிக்கப் படுகிறது என்பதை அவரவர் நியாயங்களுடன் வெளிப்படுத்தும் நாவல் இது. மனித உணர்வுகள், மனச்சிக்கல்கள், முரண்பாடுகள், நடுத்தட்டு மக்கள் உணர்வுகள், ஏழை, எளிய, உதிரிப்பாட்டாளிகள் நிலை ஆகியவற்றை இவர்தம் கதைகள் பிரதிபலித்தன.

எழுத்து மரபும், வாய்மொழி மரபும், இவரின் எழுத்தில் கலந்தன. நாட்டார் வழக்காறுகள் பல இயல்பாக இடம்பெற்றன. "மொழி என்பது அலங்காரமாக இருக்கக்கூடாது என்பது என் கொள்கை. அண்ணா, கருணாநிதி, லா.ச.ரா இவர்களைப் படிச்சதுனால் ஏற்பட்ட விளைவு, மொழியை அலங்காரமாகப் பயன்படுத்தக்கூடாது என்பதுதான்" எனக் கூறிய சா.க. மிக இயல்பான, மிரட்டல் இல்லாத, வாசகனை அரவணைத்துக் கொள்ளும் முறையில் எழுதினார். தன் தோற்றம் போலவே எழுத்தும் பகட்டும் அல்லாததாக இருக்க விரும்பினார். நூற்றைம்பதுக்கும் குறையாத சிறுகதைகள் எழுதிய அவர், அவற்றில் ஆகச்சிறந்த கதைகளையும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பதித்துச் சென்றார் எனலாம். இரணியவதம், கிழக்கு பார்த்த வீடு, மாயவலி, ஆறுமுகசாமியின் ஆடுகள் முக்கியமானவை.

அனைத்துத் தரப்பிலும் கொண்டாடப்பட்ட அவரின் சிறுகதை ’ஒரு தக்கையின் மீது நான்கு கண்கள்’ - மீன் பிடிக்கும் ஒரு தாத்தாவுக்கும், பேரனுக்குமிடையேயான மனப் போராட்டமே கதை. பெரியவர், சிறியவர் என்ற தலைமுறை இடைவெளி நுட்பமாகக் கதையில் வெளிப்படும். புகழ்பெற்ற ‘கடலும் கிழவனும்’ நாவலின் சிறுதுளிபோல வாழ்வைப் பந்திவைப்பதில் இக்கதை மிளிர்கிறது.

சா.க. சமகால நிகழ்வுகளை தன் எழுத்துக்களில் வரலாற்றுச் சரடாகப் பதிவிடும் வழக்கம் உடையவர். ‘ஆறுமுகசாமியின் ஆடுகள்’ சிறுகதையில், ஆறுமுகசாமியின் அப்பா கலியபெருமாள் டிரைவராக இருப்பவர். ஊரிலிருந்து சென்னை அறிவாலயம் திறப்பு விழாவிற்கு தொண்டர்களை வேனில் அழைத்துச் செல்கிறார். திரும்பி வரும்போது திண்டிவனத்தில் ஒரு இயக்கத்தின் சாலைமறியல் போராட்டம். வேன் தாக்கப்படுகிறது. கீழே இறங்கிப் போகும் அவர்மீது வெட்டிய மரம் விழுகிறது. மரணமடைகிறார். இந்த இரண்டையும்

போகிற போக்கில் சொல்லி விடுகிறார். அப்புறம் கட்சியினரால் ரூபாய் ஐயாயிரம் நிதி கிடைப்பது, அதை வைத்து வங்கியில் ஆட்டு லோன் வாங்குவது. விதவை பெரியநாயகியும், பள்ளிப்படிக்கும் சிறுவன் ஆறுமுகசாமியும், அவற்றைப் பாடுபட்டு வளர்ப்பது, ஆறுமுகத்துக்கு படிப்பின் மீதுள்ள மோகத்தால் பாடப்புத்தகங்களைப் படித்துக் கொண்டே ஆடுகள் மேய்ப்பது, அந்த வழியே வந்த ஒரு காவல் துறை சப் இன்ஸ்பெக்டர் பத்து ஆடுகளை, ஆடுவாங்கும் நபர்களிடம் சொந்த ஆடுகள் எனச் சொல்லி மேய்ந்த ஆடுகளை திருட்டுத்தனமாக விற்று பணம் வாங்கிச் சென்று விடுவது, ஆறுமுகசாமி இதனை அறியாமல் வெகுளியாக ஆடுகளைத் தேடிக் கொண்டிருப்பதோடு கதை முடியும். கூடவே இதில் வரும் பண்ணைக்காவல் முனியாண்டித்தேவரை அச்சு அசல் தஞ்சை வாசத்தோடு காட்டுவார். சுருட்டு பிடிப்பது, இடுப்பு வேட்டிக்கு பச்சைக் கலர் பெல்ட் போட்டிருப்பது இன்றைக்கும் தஞ்சை மிராசுகளின் அடையாளம். இப்படி ஒரு கதைக்குள் நடப்புக் காலத்தின் குணாதிசயங்களை சா.க. அட்சரம் பிசகாமல் பதிவு செய்கிறார்.

அதேபோல பள்ளிக்கூடம், பிள்ளைகள், ஆசிரியர்கள் அநேகம் கதைகளில் இடம் பெறுகின்றனர். கிராமத்துச் சிறுவர்களின் எண்ண ஓட்டங்களை சா.க. அற்புதமாகச் சித்தரிப்பார். ‘விசாரணைக் கமிஷன்’ நாவலில் கூட கதாநாயகன் தங்கராசு அவன் மனைவி ருக்மணியை ஆசிரியையாகத்தான் படைத்திருப்பார்.

சா.க. தொடர்ந்து எழுதினார். விமர்சித்தார். கரடுமுரடாகத் தெரிவார். சுபாவமும் அப்படித்தான். யாரையும் எளிதில் ஏற்றுக் கொள்ளமாட்டார். கலை உள்ளம் படைத்தவராக இருந்தார். ஜெயகாந்தனின் தோழராக அவர் சபையில் வீற்றிருந்தார். அவரைப் போலவே எழுத்தாளர் கர்வமும் இவரிடமிருந்தது. திராவிட இயக்கச் சார்பு என்பதில் உறுதியோடு நின்றார். அதுமட்டுமல்லாமல் தமிழ் இன, மொழி உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார்.

முன்பு சொன்னதுபோல ‘விசாரணைக் கமிஷன்’ நாவலிலும் பல உண்மை நிகழ்வுகள் சுட்டப் பெறுவதைக் காணலாம்.

‘அண்ணாகிட்ட கையெழுத்து வாங்கப்போறேன்’

எம்.ஜி.ஆரை கட்சியவிட்டு நீக்கிட்டாங்க’

இந்திரா காந்திய சுட்டு கொன்னுட்டாங்க’

‘ராஜீவ் காந்திக்கு ஆதரவு தாரீர்’

என்று அரசியல் நிகழ்வுகள் பதிவாவதைச் சுட்டலாம்.

இந்த நாவல் போக்குவரத்து ஊழியர்கள், காவல் துறை மோதல் அதன் உடன் விளைவுகள், தொழிலாளர் போராட்டம், தொழிற்சங்கம், அரசுநிலை, விசாரணைக் கமிஷன் எனும் கண்துடைப்பு ஏமாற்று என முழுக்க அரசியல் நாவலாகவே அமைகின்றது. கூடவே தங்கராசு. ருக்மணியின் காதல் வாழ்வு, பிரியம், குழந்தையின்மை எனும் சிக்கலும் அது சார்ந்த மன உளைச்சலும் சா.க.வால் சித்தரிக்கப்படுகின்றது.

கவிதை, நாவல், சிறுகதை, கட்டுரை, பயண இலக்கியம், மொழிபெயர்ப்பு, ஆவணப்படம், இலக்கியத் தொகுப்புகள் என்று தொடர்ந்து இயங்கினார். தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை அறிந்தவராக இருந்தார். எனினும் தமிழ் மொழியின் மீது தீராப்பற்றுக்கொண்டவராகவும் இருந்தார். ‘சுடுமண் சிலைகள்’ இவரின் அரிய படைப்பு. சிற்பி தனபால், ஜெயகாந்தன், அசோகமித்திரன் பற்றிய இவரது ஆவணப் படங்கள் தனித்துவமிக்கவை.

கலைமாமணி விருது உட்பட பல விருதுகளையும் அங்கீகாரங்களையும் பெற்றார். பல படைப்புகள் - விசாரணைக் கமிஷன் உட்பட தொலைக்காட்சித் தொடராக வெளி வந்தன. சாயாவனம், சூரியவம்சம், விசாரணைக் கமிஷன் ஆகியவை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. சாகித்திய அகாதெமி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், நேஷனல் புக் டிரஸ்ட் உறுப்பினராகவும் இருந்து செய்த பணிகள் முக்கியமானவை. அதே போல அவர் தொகுத்த நூல்களும் கருதத்தக்கவை. தமிழில் தன்வரலாறுகள், புலம் பெயர்வு குறித்தும் இறுதியாக ரயில் பயணம் குறித்த கதைகள் தொகுப்பும் தனித்துவமிக்கவை.

"சா.கந்தசாமியின் கதைகளும் நாவல்களும் அற்புதமாக அமைந்துவிட்டன என்று காணும்போது தமிழர்கள் எத்தனைதான் குப்பைப்பத்திரிகைகளுக்கு அடிமைப் பட்டிருந்தாலும் இலக்கியரீதியாக அதிஷ்டசாலிகள் என்று சொல்ல வேண்டி இருக்கிறது" என்ற க.நா.சு.வின் மதிப்பீடு கருதத்தக்கது.


அறுபதாண்டுகள் எழுத்து, இயக்கம் எனப் பயணித்தவர் தன் பயணத்தை நிறைவு செய்துகொண்டார். சா.க. எனும் சாகா எழுத்துக்கலைஞர் என்றும் நினைக்கப்படுவார்.

●

# சிறார்களுக்கான
# நெஸ்லிங்கின் புதிய வெளியீடுகள்





₹ 65.00




₹ 45.00




₹ 70.00





₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00





₹ 70.00




₹ 70.00




₹ 100/-
(இரண்டு புத்தகங்களும் சேர்த்து)





₹ 70.00

**தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்**
**சிறார்களுக்கான நூல்களை வெளியிடும் சிறந்ததொரு புத்தக நிறுவனம்**

## நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050
☎: 044- 26251968, 26258410, 48601884,
Email: nestlingbooks@gmail.com | www.ncbhpublisher.in



கட்டுரை

# கேரளாவில் தமிழ்ப் பேசும் மலைப்புலையர் - இனவரைவியல்

முனைவர் ஆ.கார்த்திகேயன்

**இடுக்கியில் வாழும் மக்கள்**

இடுக்கி மாவட்டம் கேரளாவில் உள்ளது. இம்மாவட்டத்தைச் சுற்றிலும் கேரளாவின் எர்ணாகுளம், கோட்டயம், பந்தனம்திட்டா ஆகிய மாவட்டங்களும், தமிழகத்தின் திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களும் அமைந்துள்ளன. இடுக்கி மாவட்டம் பசுமையான புல்வெளிப் பள்ளத்தாக்குகளையும், உயர்ந்த மலைகளையும், செறிந்துவளர்ந்த மரங்களையும் கொண்ட குறிஞ்சி நிலப் பகுதியாகும். இது பெரியார் வனச் சரணாலயம், சின்னார் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி, மாட்டுப்பட்டி போன்ற அணைக்கட்டுக்களையும் கொண்டு சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலமாக விளங்குகின்றது. சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் அங்குச் சென்றால் படையெடுத்து வரும் பள்ளி மாணவர்களையும், சுற்றுலாப் பேருந்துகளையும் காணமுடியும். யானைகள், வரையாடுகள், மலை அணில், காட்டு எருமை, அரியவகை மரங்களும் மலர்களும் இயற்கை தந்த வரம் நம் கண்களுக்கு விருந்தாக அமைகின்றன. மறையூரில் இயற்கையாக விளைந்த சந்தன மரக்காடுகள் மணம் பரப்பும் சோலைகளாக விளங்குகின்றன.

இடுக்கி மாவட்டத்தில் வாழும் மக்கள் பல்வேறு காலகட்டங்களில் அப்பகுதிக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு ஆதிவாசி மக்கள் தமிழகப் பகுதிகளிலிருந்தும், கேரளாவின் பிற பகுதிகளிலிருந்தும் 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டுகளில் புலம் பெயர்ந்துள்ளனர் (பிஜுமோன் வர்கீஸ், 2015). ஐரோப்பியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நுழைந்து தேயிலை, காப்பித் தோட்டங்களை உருவாக்கினர். இக்காலகட்டத்திலும் தமிழகத்திலிருந்து பல மக்கள் இடுக்கி மாவட்டத்திற்குச் சென்று நிரந்தரமாய் வாழத் தொடங்கினர். தற்போது இடுக்கியில் மலையாளிகள், தமிழர்கள், ஆதிவாசி மக்கள் எனப் பலரும் வசித்து வருகின்றனர்.

**இடுக்கியில் பேசப்படும் மொழிகள்**

இடுக்கி மாவட்டத்தில் முக்கியமாக மலையாளமும் தமிழும் பேசப்படுகின்றன. மலையாளம் மாநில மொழி. அம்மொழியைக் கேரளர் தாய்மொழியாகப் பேசுகின்றனர். அத்துடன் பல்வேறு மொழி பேசும் மக்களிடையே பொதுவாக கருத்துப் பரிமாற்ற மொழியாகவும் அது பயன்படுகின்றது. தமிழகத்திலிருந்து குடியேறி வாழும் தமிழ் மக்களால் தமிழ் மொழி பேசப்படுகின்றது. காலங் காலமாகத் தமிழர்கள் அங்கு வசித்து வந்தார்களா என்பதும் ஆராய்ச்சிக்குரிய விஷயம். இவ்விரு பெரிய மொழிகள் தவிர, பல பழங்குடி மொழிகளும் இம்மாவட்டத்தில் பேசப்படுகின்றன. அவற்றுள் முதுவன், மன்னான், மலை வேடன், மலையரையன், உள்ளாடன், மலைப் பண்டாரம், மலைப் புலையன் போன்றவை முக்கியமான ஆதிவாசி மொழிகளாகும். மலையாள மொழியை ‘நாட்டுபாஷை’ என்றும், தமிழ் மொழியை ‘ஊர் பாஷை’ என்றும், பழங்குடி மொழிகளைக் ‘குடி பாஷை’ என்றும் குறிப்பிடுகின்றனர். இக்கட்டுரை மலைப்புலையர்களின் இனவரைவியல் குறித்து விவரிக்க முயற்சிக்கிறது.

**மலைப்புலையர்**

மலைப்புலையர்கள் பொலெயரு, பௌயரு, மலப்புலையர் என்றெல்லாம் அழைக்கப் படுகின்றனர்[1] ‘ஹில்புலையா’ என்ற ஆங்கிலப்படுத்தப்பட்ட (Hill Pulaya) சொல்லும் அறிந்து வைத்துள்ளனர். மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அட்டவணையில் ‘Hill Pulaya’ என்ற சொல்லே இடம்பெற்றுள்ளது. மலைப்புலையர்களில் மூன்று வகை உண்டு.

1. குறும்பப் புலையர்
2. கரைவழிப் புலையர்
3. பாம்புப் புலையர்

குறும்பப் புலையர்கள் ஆடு மாடுகள் மேய்க்கும் தொழில் செய்ததால் குறும்பர்கள் என்றும், கரைவழிப் புலையர்கள் விவசாயத்தில் ஈடுபட்டதால் (காடு கரை என்ற சொல் விவசாய நிலங்களைக் குறிக்கும் சொல்) கரைவழி வந்தவர்கள் என்றும் இரு பிரிவுகள் உண்டாயிற்று என்றும் கூறுகின்றனர். இந்த இரு பிரிவுகளே மட்டுமின்றி பாம்புப் புலையர் என்ற பிரிவினர் தமிழக எல்லைப் பகுதியில் வாழ்வதாகவும் தெரிகிறது. மூன்று பிரிவினரும் அசைவ உணவைச் சாப்பிடுகின்றனர். குறும்பர்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதில்லை. கரைவழிப் புலையர்கள் மாட்டிறைச்சி உண்பர். பாம்புப் புலையர்கள் பாம்புக் கறி சாப்பிடுவர். இதனை ஏனைய இருவரும் சாப்பிடுவதில்லை. உணவு அடிப்படையிலேயே பிரிந்துள்ளனர். இவர்களுக்கிடையே திருமண உறவோ, போக்குவரத்தோ அறவே கிடையாது.

**மலைப்புலையர் வாழ்விடமும் மக்கள்தொகையும்**

மலைப்புலையர்கள் கேரளாவில் இடுக்கி மாவட்ட தேவிக்குளம் தாலுக்காவில் மறையூர், காந்தலூர் பஞ்சாயத்துகளில் வாழ்கின்றனர்.[2] தமிழ்நாட்டின் உடுமலைப்பேட்டையிலிருந்து மூணார் செல்லும் பாதையில் சுமார் 35 கி.மீ. தொலைவில் மறையூர் உள்ளது. மறையூருக்கு கிழக்காக சுமார் 15 கி.மீ. தொலைவில் காந்தலூர் உள்ளது. முற்றிலும் வனங்களும் மலைக் குன்றுகளும் சூழ்ந்த இப்பகுதிகளில் 24 குடிகளில் (settlements) இம்மக்கள் வாழ்கின்றனர். கரைவழி புலையர், குறும்பப் புலையர்கள் தனித்தனியாகவே பிரிந்து வாழ்கின்றனர். ஒருவருக்கொருவர் தொடர்பில்லை. 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 3024 மலைப் புலையர்கள் இருந்ததாகவும், அதில் 1512 பேர் ஆண்கள்; 1512 பேர் பெண்கள் என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது (காண்க: என்சைக்ளோபீடியா திராவிட ஆதிவாசிகள், ப. 218). கீழ்க்கண்ட அட்டவணையில் புலையர்கள் வசிக்கும் குடிகளின் பெயர்களும், மக்கள் தொகையும் (குடிவாரியாக) தரப்பட்டுள்ளன.

**கரைவழிப் புலையர் (குடிவாரியாக மக்கள் தொகை)**

| வ.எண் | ஊர் | மொத்த மக்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| 1. | குமிடாங்குழி | 579 | 297 | 282 |
| 2. | பட்டிக்காடு | 237 | 116 | 121 |
| 3. | செம்மங்குடி | 5 | 3 | 2 |
| 4. | பிரியதர்ஷிணி | 25 | 13 | 12 |
| 5. | இந்திரா காலனி | 308 | 140 | 168 |
| 6. | நாச்சிவயல் | 27 | 12 | 16 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | செறுவாடு | 275 | 146 | 129 |
| 8. | சொரக்குளம் | 333 | 163 | 170 |
| 9. | கர்ஷாநாடு | 39 | 16 | 22 |
| 10. | திண்டுகொம்பு | 398 | 204 | 194 |
| 11. | கோவில்கடவு | 30 | 12 | 18 |
| 12. | மிஷன்வயல் | 190 | 85 | 105 |

**குறும்பப் புலையர்**

| வ.எண் | ஊர் | மொத்த மக்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஊஞ்சம்பாறை | 25 | 15 | 10 |
| 2. | புறவயல் | 62 | 29 | 33 |
| 3. | கரிமுட்டி | 58 | 28 | 30 |
| 4. | ஈச்சம்பட்டி | 208 | 96 | 112 |
| 5. | ஆலம்பட்டி | 230 | 144 | 86 |
| 6. | சம்பக்காடு | 240 | 138 | 102 |
| 7. | பாலப்பட்டி | 222 | 109 | 113 |
| 8. | வண்ணாந்துறை | 45 | 18 | 27 |
| 9. | பொங்கம்புளி | 212 | 95 | 117 |
| 10. | கொட்டப்பள்ளம் | 60 | 28 | 32 |
| 11. | கணக்காயம் | 129 | 60 | 69 |
| 12. | முனியறு | 60 | 28 | 32 |

இந்த அட்டவணைப்படி மொத்த மலைப்புலையர்களின் மக்கள் தொகை 4047 என்று தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தக் கணக்கெடுப்பு ஆதிவாசி மேம்பாட்டுப் பணியாளர்களால் 2014 இல் எடுக்கப்பட்டது. குமிடாங்குழியில் வசிக்கும் ஆதிவாசி மேம்பாட்டுப் பணியாளரான திரு.முருகன்காளி என்பவரால் இந்த அட்டவணை எனக்கு வழங்கப்பட்டது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல குறும்பப் புலையர்களும், கரைவழிப் புலையர்களும் தனித்தனி குடிகளில் வசிக்கின்றனர். கலந்து வாழ்வதில்லை. உணவுப் பழக்கங்களில் மாட்டிறைச்சி உண்பது கரைவழிப் புலையர்களிடையே காணப்படுகிறது. குறும்பப் புலையர்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதில்லை. அதனை விலக்குவதாகக் கூறுகின்றனர். குறும்பப் புலையர்கள் அடர்ந்த காடுகளில் வசிக்கின்றனர். கரைவழிப் புலையர்கள் சற்று சமவெளிப் பாங்கான இடங்களில் நகர்ப்புறமாகிற பாங்கில் வசிக்கின்றனர். பாதுகாக்கப்பட்ட சின்னார் வனப் பகுதியில் சில குறும்பப் புலையர்களின் குடிகள் உள்ளன.

**குடி** (Settlement)

மலைப்புலையர்களின் வாழ்விடம் குடி (Settlement) என்றழைக்கப்படுகிறது.[3] 50 முதல் 250 குடும்பங்கள் வரை ஒரு பகுதியில் வாழ்கின்ற இடத்தை குடி என்றழைக்கின்றனர். Colony (கோலனி) என்ற சொல்லையும் அம்மக்கள் அறிந்து வைத்துள்ளனர். கணக்காயம் குடி, புங்கம்புளி குடி என்றே அழைக்கின்றனர். வீடுகளை ‘வூடு’ அல்லது ‘பூடு’ என்று குறிப்பிடுகின்றனர். ஒரு காலத்தில் தருவெ புல் முதலியவற்றால் வேய்ந்த கூரை வீடுகளில் வாழ்ந்தனர். பாறையில், கல்லங்காட்டில் இடம்கிடைத்த இடத்தில் வீடு அமைந்துள்ளது. தெருக்களாக வீடுகள் இருப்பதில்லை. தற்போது எல்லா மக்களுக்கும் அரசாங்கம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்துள்ளது. காவல் குடிசையும் (காவ குடிசி) விலங்குகளைக் கண்காணிப்பதற்குக் கட்டிக் கொள்கின்றனர். சடங்குகளின்போதும் பிற நிகழ்ச்சிகளின்போதும் தற்காலிகக் குடிசை வீட்டுக்கு முன்னால் கட்டிக் கொள்கின்றனர். வீடுகள் பொதுவாக மலைச் சரிவில் இருப்பதைக் காணமுடிகின்றது. பொதுவாக யானை முதலிய விலங்குகள் எளிதாகச் சென்றுவிடாத மாதிரியான குன்றுகளில் வீடுகள் அமைந்துள்ளன. அப்படியிருந்தாலும் யானைகள் சில வேளைகளில் குடிக்குள் புகுந்துவிடுகின்றன.

**குடி சமூக அமைப்பு**

மலைப்புலையர் குடியின் தலைவர் காணி

அல்லது மூப்பன் என்று கூறுகின்றனர். குடியில் வாழும் இளைஞர்களும், நடுவயது மனிதர்களும் காணிப்பாட்டன், காணியப்பன் என்று அன்போடு விளித்து அழைக்கின்றனர். குடியில் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் தலைவராக காணி விளங்குகிறார். குடியிலுள்ளோர் மீது சட்டம், காவல்துறை சார்ந்த விசாரணை இருந்தால் காணியை அணுகி அப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். காணிக்கு உதவுவதற்குத் தண்டல்காரன், கோல்காரன் போன்ற அடுத்த (கீழ்நிலை) தலைவர்கள் உள்ளனர். கோல்காரன்குடியில் நடைபெறும் நோன்பு விழா, ஒவ்வொரு வீட்டில் நடைபெறும் சடங்குகள் ஆகியவற்றை முறைப்படுத்திக் கண்காணிக்கும் பணிகளை (Supervising) மேற்கொள்வர். கண்காணிக்கும் பணியைக் கண்ணோட்டம் என்று கூறுவர். தண்டல்காரன் பணம் வசூலித்தல் போன்ற பிற பணிகளைச் செய்வர். இப்பதவிகள் பரம்பரை பரம்பரையாக வரும் வாரிசுகளுக்குப் போய்ச் சேரும். தலைவர்களில் யாருக்காவது உடல் நிலை சரியில்லையென்றால் நோன்பு போன்ற குடியின் நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படும். பொதுப் பிரச்சினைகளை / குடியின் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ள ஒரு பொதுவிடம் இருக்கும். அவ்விடத்தைப் 'பொது மந்தை' என்று கூறுவர். அவ்விடத்தில் 'மந்தெ கல்லு' என்ற ஓர் இருக்கை இருக்கும். காணி அந்தக் கல்லில் அமர்ந்துதான் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். நமது பேச்சு வழக்கில் 'மந்தை' என்ற சொல் ஆடு, மாடு கூட்டத்தைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. மந்தை என்ற சொல் மன்று, மன்றம் என்ற பழந்தமிழ்ச் சொல்லோடு தொடர்புடைய சொல்லாகவிருக்கலாம்.

**உணவுப் பழக்கவழக்கங்கள்**

மலைப்புலையர்கள் அரிசி, ராகி ஆகியவற்றைப் பிரதான உணவாகக் கொள்கின்றனர். கரைவழிப் புலையர்கள், குறும்பப் புலையர்கள் இருவருமே அசைவ உணவை உண்பர். ஒரே வேறுபாடு என்னவென்றால் கரவழிப் புலையர்கள் மாட்டிறைச்சி உண்பார்கள். ஆனால் குறும்பப் புலையர்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை. அதனை விலக்கிவிட்டு, கோழி, ஆட்டிறைச்சி போன்றவற்றை உண்பர். இக்கருத்து ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டது. அரசு கொடுக்கிற 'பாமாயில்' போன்ற எண்ணெயைச் சமையலுக்குப் பயன்படுத்துவர். காலையும் மாலையுமென இருவேளை மட்டுமே உணவு உட்கொள்வர். காட்டுக் கிழங்குகளையும் பழங்களையும் கிடைக்கும்போது உண்பர். குடிகளுக்குப் பக்கத்தில் ஆறு (பாம்பாறு) 'பெரியாத்து' ஓடுவதால் ஆற்றில் மீன்பிடித்துச் சமைத்து சாப்பிடுவர். சாம்பார் / குழம்பு என்ற சொல்லுக்குப் பதில் 'சாறு' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். மீன் குழம்பு என்பதை 'மீன்சாறு' என்கின்றனர். ஆற்றுப் பறைகளிலேயே காட்டுக் கீரைகளைப் பறித்து அரைத்து 'சமந்தி' (சட்னி, கீரை உணவு) தயாரித்துவிடுவார்கள். வேட்டை நாய்களைக் கொண்டு வன விலங்குகளை வேட்டையாடிச் சமமாகப் பிரித்துப் பங்கிட்டு உண்ணும் வழக்கமும் உள்ளது.

சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தைப் பஞ்ச காலம் என்று நினைவுகூர்கின்றனர். அப்பொழுது மலையம்கிழங்கு / நூத்தக்கிழங்கு என்ற இரு கிழங்கு வகைகளை நம்பியே ஜீவிதம் இருந்துவந்துள்ளது. மலையம் கிழங்கைத் தோண்டுவதற்கு கொளுவுகோலு அல்லது தொட்ட கோலு என்றொரு கருவி பயன்படுத்தப்பட்டது. அக்கருவியை இப்போதும் பயன்படுத்துகின்றனர். அதோடு மலையம் கிழங்குதான் அவர்களைக் காப்பாற்றியும் வந்துள்ளது.

**பொருளாதார நடவடிக்கைகள்**

அரசாங்கம் வனப்பகுதியில் இந்த ஆதிவாசி மக்களுக்கு சில ஏக்கர் நிலங்களை இலவசமாக வழங்கியுள்ளது. பட்டாயம் செய்து கொடுக்கப்பட்டுள்ள இந்தப் பூமியை இவர்கள் யாருக்கும் விற்றுவிடுவதற்கு உரிமையில்லை. இந்த நிலத்தில் சிலர் வரகு, சாமை, தினை வகைகளைப் பயிரிடுகின்றனர். சிலர் தென்னை, பாக்கு போன்ற மரங்களை வளர்த்தும் வருகின்றனர். ஆனால் பொதுவாகக் காட்டுவிலங்குகளின் அட்டகாசத்தால் பயிரிடுவது சாத்தியப் படுவதில்லை என்கின்றனர். குறிப்பாக 'யானை சல்லியம்' (சல்லியம்-தொந்தரவு) கூடுதலாக இருப்பதால் விவசாயம் இல்லை. மலைப்புலையர்கள் வறுமையான வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றனர். அரசு தருகின்ற இலவச உணவுப் பொருட்களே இவர்களுக்கு அடிப்படை உணவு ஆதாரமாகவுள்ளது. சில குடிகளில் வாழும் மக்கள் வயலறுக்கச் செல்கின்றனர். விதை விதைத்தல், நீர் பாய்ச்சுதல், கரும்பு நடுதல் போன்ற கூலி வேலைகளுக்குச் செல்கின்றனர்.

மறையூர், காந்தலூர் பஞ்சாயத்துகளில் கரும்பு விவசாயம் முக்கியமான ஒன்றாகும். கரும்பு வெட்டி வெல்லம் தயாரித்தல் இப்பஞ் சாயத்திலுள்ள ஊர்களில் வெகுவாகச் செய்யப் படுகிறது. இந்த வேலைகளில் மலைப்புலையர்கள்

கூலி வேலைக்குச் செல்கின்றனர். 'தைலப்புல் அறுத்தல்' மற்றொரு வேலை வாய்ப்பாகும். இவ்வேலைக்குப் பெண்களே செல்கின்றனர். ஒரு நாளைக்குக் கூலியாகக் கிடைக்கும் சுமார் 300/- ரூபாயை அவர்களே குடும்பச் செலவினங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். சில வீடுகளில் கோழி, ஆடு வளர்ப்பும் செய்கிறார்கள். முட்டைகளை அருகிலுள்ள கடைகளுக்குச் சென்று விற்றுவிட்டு வீட்டுக்கு வேண்டியதை வாங்குகின்றனர். வீடுகளில் பழத்தோட்டங்களில் விளையும் பழங்களையும் ஆதிவாசி கூட்டுறவுக் கடைகளில் விற்று பணம் பெறுவர். தேன் எடுத்தல், மூலிகை வேர்கள் ஆகிய காட்டுப் பொருள்களையும் சேகரித்துக் கடைகளில் விற்றுப் பணம் ஈட்டுவர். அரசாங்கம் இவற்றைச் சந்தைப்படுத்துவதற்குப் பல வசதிகளைச் செய்து தருகிறது. அமராவதி அணைக்கட்டிற்கு வந்து மீன்பிடித்து விற்பதும் உண்டு. கோவில்கடவு, மறையூர் ஆகிய ஊர்களில் வாரம் ஒரு முறை நடைபெறும் சந்தைக்கு வந்து விளைபொருட்களை விற்றுவிட்டுத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வார்கள்.

### பூப்புச் சடங்கு

குறும்பப் புலையரின் பெண் குழந்தைகள் பூப்பெய்தினால் அப்பெண் தங்குவதற்கென்று வீட்டிற்கெதிரே சுமார் 30 அடி தூரத்தில் தற்காலிகக் குடிசை (குடிசி, குட்லு) கட்டப்படும். பெரும்பாலும் அக்குடிசையை அப்பெண்ணை மணந்துகொள்ளும் முறையுள்ள ஆண்களே கழியினை ஊன்றி கட்டுவதற்குத் தொடங்குவார். அந்த ஆண் சிறுவனாகவே இருந்தாலும் பரவாயில்லை. அவ்வாறு கட்டப்பட்ட குடிசியில் அப்பெண் சுமார் ஒருமாத கால அளவு தங்க வேண்டும். அக்காலத்தில் அப்பெண்ணை ஆண்கள் யாரும் பார்ப்பதில்லை. ஒவ்வொரு நாள் இரவும் குடியிலுள்ளோர் பாதுகாப்பு அளிப்பர். குழல், மேளம் அடித்து இரவு வேளைகளில் 'ஆட்டு பாட்டு' இருக்கும். அப்பெண்ணுக்கான உணவு உறவினர்களாலும் ஊரில் உள்ளவர்களாலும் வழங்கப்படும். ஒரு மாதம் கழித்து அப்பெண்ணை அருகிலுள்ள ஆற்றுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்வர். அங்கே அப்பெண்ணுக்கு சடங்கு முறையில் குளிப்பாட்டுவர். இதனை 'உளுகக் காட்டுதல்' என்று கூறுகின்றனர். அங்கே அக்குடிசை எரியூட்டப்படும். பூப்பெய்திய பெண்ணுக்குத் தோழியாக 'நங்கெ' உறவுள்ள ஒருத்தி உடன்வர, ஊர்வலமாக குழல், மேளம் குழுங்க அப்பெண்ணை வீட்டுக்கு அழைத்து வருவர். தோழிப் பெண்ணைத் 'தோடகத்துகாரி' என்று அவர்கள் மொழியில் கூறுவர். பூப்பெய்திய பெண்ணின் பெற்றோர் வசதி படைத்தவராக இருந்தால் தேனீரோ, காப்பியோ தந்து உபசரிப்பர். இல்லையெனில் அவரவர் வீட்டுக்குச் சென்று விடுவர். இந்நிகழ்ச்சி காணி, கோல்காரர் முன்னிலையிலே நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும் ஏழையாக இருந்தால் பூப்படைந்த செய்தியை வெளியில் சொல்லாமலேகூட முடித்துக் கொள்வர். பிள்ளைகள் கல்விக்கூடங்களுக்குச் செல்வதால் தற்காலத்தில் பூப்புச்சடங்கு சுருக்கமாக செய்துகொள்ளப்படுகிறது. மாதவிடாய் என்பதை 'மாச குளிப்பு' என்று குறிப்பிடுகின்றனர்.

### திருமணம்

திருமணம் பெண்ணின் வீட்டில் இரவு நேரத்தில் நடைபெறும். மணமகன் பெண்ணின் கழுத்தில் கரும்பாசி என்கிற தாலியைக் கட்டுவார். திருமணம் காணி, கோல்காரர் முன்னிலையில் நடைபெறும். மணமக்களை வாழை இலை முன்பு அமர வைத்து அந்த இலையில் பரிமாறப்பட்ட உணவை ஒருவர் மற்றொருவருக்கு ஊட்ட வேண்டும். இவ்வாறு ஏழு கவளங்கள் ஏழு முறை ஊட்டவேண்டும். அடுத்தநாள் தம்பதியரை ஊர்வலமாக ஆற்றுக்கு அழைத்துச் செல்லுவர். அங்கே அவர்களைக் குளிக்கச் செய்து மாலை அணிவிப்பர். பின்னர் ஊர்வலமாகக் குடிக்கு அழைத்து வருவர். அதற்குப் பிறகே அவர்கள் ஒன்றாகத் தங்குவதற்கு அனுமதிக்கப்படும். புதுமணத் தம்பதிகள் திருமணமான பிறகு தனிக் குடித்தனம் சென்றுவிடுவர். பெற்றோரிடம் வாழ்வதில்லை. தற்காலத்தில் காதல் திருமணங்களும் நடைபெறுவதாகத் தெரிகிறது. சண்டையும் ஏற்படும். சமாதானமும் செய்து வைத்து ஒன்றுசேர்த்து வைக்கப்படும். கணவன் மனைவியிடையே ஒத்துவராவிட்டால் 'விவாகரத்து' அனுமதிக்கப்படுகிறது. பின்னர் அவர்கள் மறுமணமும் செய்து கொள்ளலாம்.

### மலைப்புலையரின் சமயமும் நோன்பு விழாவும்

மலைப்புலையர்களுக்குத் தனித்துவமான வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் உள்ளன. குறும்பப் புலையர்கள் காட்டிலுள்ள சாப்ளியம்மா என்ற பெண் தெய்வத்தை வழிபடுகின்றனர். இடுக்கி மாவட்டத்தின் தொடர்ச்சியாகத் தமிழக எல்லையில் கோடாந்தூர் என்ற வனப் பகுதியில் சாப்ளி அம்மன் கோயில் இருப்பதாக ஒரு தகவலாளி தெரிவித்தார். சாப்ளி அம்மன்

என்ற பெயர் பெண் குழந்தைகளுக்கும் சாப்ளி என்ற பெயர் ஆண் குழந்தைகளுக்கும் இடுகிற வழக்கம் காணப்படுகிறது. பெரும்பாலும் முதல் குழந்தைக்கே இப்பெயர் வைக்கப்படுகிறது. சாப்ளி அம்மனைத் தவிர, கன்னிமாரு, நாகரு, நாச்சரம்மா, கருப்பி போன்ற பெண் தெய்வங்களும், மாரியம்மா தெய்வமும் வழிபாட்டுக்குரிய தெய்வங்களாகும். கரைவழிப் புலையர்கள் மீனாட்சி அம்மன், அருணாட்சி அம்மன் ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். மறையூரில் அருணாட்சி அம்மன் கோயில் புகழ்பெற்ற கோயிலாகும். புலையர்களின் குடி (Settlements) பழனிக்கு அருகில் இருப்பதால் முருகனை வழிபடுகின்ற நிலையையும் காணமுடிகிறது. பழனி, சுப்பிரமணி, முருகன் போன்ற முருகனைக் குறிக்கும் பெயர்கள் குடிகளில் காணப்படுகின்றன. பழனிக்குச்சென்று முடி காணிக்கை செலுத்தி வருகிற நடைமுறையும் தற்போது காணப்படுகிறது. மணிகண்டன் போன்ற பெயர்கள் அய்யப்ப வழிபாட்டின் தாக்கத்தைக் காட்டுகின்றன. நோன்பு விழாவும் பொங்கல் விழாவும் குடிகளில் காணப்படும் முக்கியமான நிகழ்ச்சிகளாகும்.

**நோன்பு விழா**

நோன்பு என்ற சொல்லை மலைப்புலையர்கள் ‘நோம்பி’ என்றே உச்சரிக்கின்றனர். இந்த நிகழ்ச்சி ஆண்டுதோறும் ஏப்ரல் அல்லது மே மாதத்திற்குள் நடத்தப்படுகிறது. நோன்பு நிகழ்ச்சி ஒவ்வொரு குடியிலும் தனித்தனியாகவே நடத்தப்படுகிறது. குடியைச் சேர்ந்தவர்கள் பொது மந்தையில் ஒருநாள் கூடி நோன்பு நிகழ்ச்சி நடத்துவதைத் தீர்மானிக்கின்றனர். எவ்வளவு பணம் ஒவ்வொரு வீட்டிற்கும் தரவேண்டும் என்பதையும் முடிவெடுத்துப் பணத்தை வசூல் செய்கின்றனர். இதனைப் ‘பணம் பிரித்தல்’ என்பர். நோன்பு விழா ஒருவாரம் கொண்டாடப்படும். நோன்பு நிகழ்ச்சி தொடக்கத்தை உணர்த்த சாட்டு குத்தப்படும். ‘சாட்டு குத்தது’ அல்லது சாட்டுபோடுதல் என்று இதனைக் குறிப்பிடுகின்றனர். மாவிலை, வேப்பிலைத் தோரணங்களைக் கட்டி குடியின் முகப்பில் அலங்கரிப்பர். சாட்டு குத்திய பிறகு குடியில் உள்ள மக்கள் ‘சுத்த வத்தம்’ கடைப்பிடிக்க வேண்டும். குடியைத் தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொள்வர். கோயிலைச் சுற்றிலும் தூய்மை செய்வர். மாதவிடாய் வந்த பெண்கள் (தீட்டுமோட்டுகாரங்க) பகற் பொழுதில் குடியை விட்டு வெளியே சென்றுவிட வேண்டும். ஆனால் இரவு நேரத்தில் குடிக்குள் வந்துவிடலாம். வேற்று மனிதர்கள் குடிக்குள் வரமுடியாது. அனுமதி பெற்று வரலாம். மாலைக்குள் வெளியேறிவிட வேண்டும். குடிமக்கள் வீட்டுக்கு வெளியில்தான் இரவு நேரத்தில் உறங்குவர்.

சாட்டு குத்தியதிலிருந்து எட்டாவது நாள் நோன்பு தொடங்கும். முதல் நாள் பூசை நாச்சரம்மாளுக்கு. பூசையை ‘பூசி’ என்று உச்சரிக்கின்றனர். நாச்சரம்மா கோயில் காட்டுள் இருக்கிறதாம். காட்டுக்குள் ஆண்கள் மட்டும் சென்று வழிபட்டுவிட்டு (சிறுவர்களும்) வருகின்றனர். நாச்சரம்மாவைக் குடிக்கு அழைத்து வருவதாக ஐதீகம். அன்று ஆற்றங்கரையிலுள்ள காளியம்மா கோயிலையும் அலங்கரித்து தூய்மை செய்து தோரணங்கள் கட்டுவர். காளியம்மாவுக்குப் பட்டாடை உடுத்தி வழிபடுவர். இரண்டாவது நாள் முருகன், கணேசனுக்கு வழிபாடு நடைபெறும். இவ்வழிபாட்டை ‘செவ்வாவந்தி’ என்று கூறுகின்றனர். புதன் கிழமை அதாவது மூன்றாவது நாள் மாரியம்மாவுக்கு மதியம் கோயிலுக்குச் சென்று கெடாவைப் பலியிடுவர். கோயிலுக்கு வேண்டிக் கொண்டவர் பொங்கல், தேங்காய், இளநீர் கொடுக்கலாம். பூசாரி அம்மனைப் போல வேடமிட்டு முன்செல்ல குடிமக்கள் அவர் பின்னால் செல்வர். வீட்டிலிருந்து மாவிளக்கு எடுத்துச் சென்று மாரியம்மாவை வழிபடுவர். மாலையில் கெடா வெட்டும், அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். நெல்லு போட்டுப் பார்த்து குடிக்கு ஏற்படும் நல்லது, கெட்டதை அறிந்து கொள்வர். வேப்பிலையை அம்மா பத்னி / பத்னி தழை என்றே அழைக்கின்றனர்.

நேர்ச்சை (நேர்ந்து கொண்டவர்களே) எடுத்துக் கொண்டவர்களே ஆடுகளையும் கோழிகளையும் பலியிடுகின்றனர். ஆடுகளைப் பலியிடுவதற்கு முன்னர் ஆட்டின் தலையில் மஞ்சள் நீரைத் தெளிக்கின்றனர். ஆடு தலையை உலுக்கினால் சாமி பலியை ஏற்றுக் கொண்டதாகக் கொள்வர். தலையை அசைக்கவில்லை என்றால் கடவுளுக்கு ஏற்பில்லை என்று கருதி பலியிடுவது நிறுத்தப்படுகிறது. அவ்வாறு பலியிட்ட ஆடுகளும் கோழிகளும் பொதுவிடத்திலேயே சமைக்கப்படுகின்றன. அவ்வுணவு பொதுவாக அனைவராலும் உண்ணப்படுகிறது. உணவு முடிந்த பின்னர் இரவு வெகுநேரம் ‘ஆட்டு பாட்டு’ (ஆட்டம் பாட்டம்) நடைபெறும். உறுமி, மெர்சி, தாய்மேளம், குழலு ஆகிய இசைக்கருவிகளுடன் வட்டமாகச் சுற்றி வந்து ஆடும் நடனம் நீண்ட நேரம் நடைபெறும்.

மறுநாள் நோன்பு நிகழ்ச்சியின் ஒரு கூறாக ஆண்கள் பெண்கள் கடவுளர்களைப் போல வேடமணிந்து (கரி, முகமூடி போன்றவற்றால் அலங்காரம் செய்தல்) ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களை ஆசிர்வதிப்பர். மக்களும் பரிசுப் பொருள்களும், சாராயம், கஞ்சா போன்ற போதை வஸ்துக்களும் வழங்குவர். இவ்வாறு நான்கு நாள்கள் நடைபெறும் நோன்பு ஐந்தாவது நாள் முடிவுறும். ஐந்தாவது நாள் சாமியை அனுப்பி வைப்பார்கள். இதனைச் 'சாமியெ அனுப்புது' என்கின்றனர். தெய்வத்தை அனுப்பும்போது மஞ்சள் நீர் தெளித்து விளையாட்டு நிகழ்த்துவார்கள். எட்டாவது நாள் மனை பொங்கலிட்டு வழிபடுவர். அத்துடன் நோன்பு முடிவுக்கு வரும். நோன்பு நிகழ்ச்சி முடிவுற்றதைக் குறிக்க மாவிலை, வேப்பிலைத் தோரணங்களைக் களைந்து நீக்குகின்றனர். இதனை 'சாட்டு புடுங்குது' (சாட்டு புடுங்குதல்) என்று அழைக்கின்றனர்.

நோன்பு நிகழ்ச்சி முதுவன்மார் குடிகளிலும் நடைபெறுகின்றது. குடியில் நாட்டாமை, காணி போன்ற தலைவர்கள் உடல்நலம் குன்றியிருந்தாலோ யாராவது இறந்துவிட்டாலோ (துட்டி) அந்த ஆண்டு நோன்பு நிகழ்ச்சி நடைபெறாது. மலைப்புலையர்கள் தங்களின் பாதுகாப்பு கருதியும், யானை போன்ற வனவிலங்குகளிடமிருந்து தப்பிக்கவும், தீய சக்திகளிடமிருந்து மீளவும் நோன்பு சடங்குகள் செய்து ஆண்டுதோறும் கடவுளை வழிபடுகின்றனர். 'ஆட்டுக்காரு, பாட்டுக்காரு, கொலவக்காரு எல்லாருமே குடியில் உள்ளவர்கள்தான். வெளியிலிருந்து யாருமில்லை. வெளியிலிருந்து விருந்தாளிகள் வரலாம்' என்று ஒருவர் சொன்னார்.

மாட்டுப்பொங்கல் அன்று மட்டும் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். தமிழகத்தில் கொண்டாடுவது போல் நான்கு நாட்கள் பொங்கல் விழா கொண்டாடப்படுவதில்லை. மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் பொங்கல் படைத்து வழிபடுகின்றனர். கேரள அரசு ஓணம் பண்டிகையின்போது ஓணக்கோடி, உணவுப் பொருள்கள் தருவதால் ஓண விழாவையும் அறிந்துள்ளனர்.

**நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்**

பூப்புச் சடங்கு காலத்தில் ஒரு பெண்ணை ஆண்கள் பார்ப்பதில்லை. அவ்வாறு பார்த்தால் அந்தப் பெண்ணின் முகம் ஆணைப் போலவே மாறிவிடும் என்று நம்புகின்றனர். தாங்கள் வீட்டில் வளர்த்த ஆடு, கோழி போன்றவற்றைத் தாங்களே சமைத்து உண்பதில்லை. ஆடு, கோழி போன்றவற்றைப் பலியிடும்போது சாமி உத்தரவு கொடுக்க வேண்டும். அவ்வாறு உத்தரவு கொடுக்கவில்லை எனில் அதனைப் பலியிடுவதில்லை. பெண்கள், பாலுள்ள விறகு மரங்களை வெட்டினால் வீட்டிலுள்ள மாடு, ஆடுகளின் பால் வளம் குறைந்துவிடும் என்று நம்புகின்றனர். கூட்டுக் குடும்ப வாழ்க்கை அறவே இல்லை. திருமணம் ஆனபிறகு தம்பதியர் தனி வீட்டிற்குச் சென்று வாழ்க்கை நடத்துவார்கள். அவ்வாறு தனிக் குடித்தனம் சென்ற மகன்/மகள் வீட்டில் சென்று உண்ணும் பழக்கமில்லை. 'பச்செத் தண்ணிகூடக் குடிக்கமாட்டும்' என்று ஒரு தகவலாளி கூறினார். வேட்டையாடிக் கிடைத்த விலங்கு மாமிசத்தைச் சரிசமமாகப் பிரித்துக் கொள்வர். மருத்துவத்திற்குப் பல்வேறு மூலிகைகளைப் பயன்படுத்துகின்றனர். மூலிகைகளின் பெயர்களைச் சொன்னால் மருத்துவச் சிகிச்சையின் பலன் கிடைக்காது என்று நம்புகின்றனர். குறும்பப் புலையர்கள் கரைவழிப் புலையர்கள் குறித்தோ, முதுவன் ஆதிவாசி மக்களைக் குறித்தோ ஏதாவது கருத்து (அ) தகவல்களைக் கூறும்போதோ மிகவும் எச்சரிக்கையுடனும் பரிமாறிக் கொள்கின்றனர். பல்வேறு இன மக்கள் ஒற்றுமையுடன் வாழும் வழியன்றோ அது? இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் உள்ள இம்மக்களிடம் குடிப்பழக்கமும் பரவலாகக் காணப்படுகிறது.

**அரசாங்கத்தின் அரவணைப்பு**

கேரள அரசு மலைப்புலையர்களுக்கு வேண்டிய நல்வாழ்வுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அரிசி, எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகிய உணவுப் பொருட்கள் ரேஷன் கடைகளின் வழியாக வழங்கப்படுகின்றன. இந்தச் சலுகையே இல்லையெனில் இந்த ஆதிவாசி மக்கள் வறுமையில்தான் வாட வேண்டும். இரண்டு வேளையும் கஞ்சி உணவுதான். ஓணம் போன்ற பண்டிகைக் காலங்களில் புதிய துணிமணிகள் வழங்குகின்றனர். ஒவ்வொரு குடியிலும் கான்கிரீட் வீடுகள் சிறிய வடிவில் கட்டித் தரப்பட்டுள்ளன. வீட்டுக்கு வெளியே கழிப்பறையும் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆதிவாசி குழந்தைகள் குடியிலிருந்து பள்ளிகளுக்குச் செல்ல 'கோத்ர சாரதி' என்ற வாகன வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிலும் அங்கன்வாடியும், ஆரம்பப் பள்ளியும் உள்ளன. உயர்நிலைப் பள்ளிக்கு மறையூருக்கு வரவேண்டும். ஆதிவாசி குழந்தைகளுக்கென்றே இருப்பிட விடுதியும், பள்ளியும் மூணாறில் உள்ளது. சில குழந்தைகள்

கோட்டயம், திருவனந்தபுரம் ஆகிய ஊர்களுக்குச் சென்று இலவசமாகப் படித்துவர அரசு உதவி செய்கிறது.

ஆதிவாசி மக்களுக்கு சுயவேலை வாய்ப்பை உருவாக்கித் தரும் நோக்கில் சூழல் விற்பனையகங்கள் (Eco-shops) பிரதான சாலைகளில் அவரவர் குடிகளுக்கு அருகில் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இந்த Eco-shops களில் பெண்கள் அதிகம் பணியில் உள்ளனர். மூலிகைத் தேனீர், பலகாரங்கள், கஞ்சி உணவு போன்றவை விற்கப்படுகின்றன. மேலும், மலைப் பொருட்கள், ஏலக்காய், தேயிலைத் தூள், தேன், கருப்பட்டி போன்ற பொருட்களும் விற்கப்படுகின்றன. குடிகளில் விளைந்த பலாப்பழம், கொய்யாப்பழம், மாம்பழம் போன்ற பழ வகைகளும் விற்கப்படுகின்றன. அந்தப் பணம் பயனாளிகளுக்கே பிரித்தளிக்கப்படுகின்றது. சின்னார் பாதுகாக்கப்பட்ட வனவிலங்கு சரணாலயத்தில் மலைப் புலையர்களுக்கு தகுந்த பணி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. சோதனைச் சாவடிகளில் காட்டுக்குள் பராமரிப்புப் பணிகள், அலுவலக உதவியாளர் பணிகள், டிரெக்கிங் அழைத்துச் செல்லுதல் (சுற்றுலா) போன்ற பணிகளை ஏற்படுத்திக் கேரளா அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகின்றது. போக்குவரத்து வசதிகள் இல்லாத குடிகளிலிருந்து கர்ப்பிணிப் பெண்களின் பிரசவக் காலத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதிலிருந்து எல்லாச் செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. ஒவ்வொரு குடியிலும் ஆதிவாசி மக்கள் மேம்பாட்டு அரசுப் பணியாளர் (ST promoters) உள்ளனர். இப்பணியாளர் குடியிலுள்ள மக்களின் தேவைகளை அரசுக்குச் சொல்லித் தீர்த்து வைப்பர்.

### முடிவுரை

மலைப்புலையர் வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். பருவமழைக் காலத்திலும் கோடையிலும் எந்த வேலையும் வருமானமும் இல்லை. ஒருவேளை உணவுக்கே வழியில்லை. காட்டில் வனவிலங்குகளின் எதிர்பாராத தாக்குதலால் மக்கள் உயிரிழப்பதால் குடும்பங்கள் ஆதரவு இல்லாமல் போய்விடுகின்றன. மக்களிடம் பரவலாகக் குடிப்பழக்கம் உள்ளது. இதனால் ஆடவருக்கு உடல் நலிவு, சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. மலைப்புலையரின் பேச்சு வேகமாக மாறி மறைந்துவருகிறது. இளைஞர்கள் தங்கள் பேச்சை தேவையற்றதாக, மதிப்பற்றதாகக் கருதுகின்றனர். இதனால் மலையாளம், தமிழ் போன்ற மாநில மொழிகளுக்கு மாறிவிடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இருமொழியாளர்களாக இருக்கும் அவர்கள் ஒரு சில பத்தாண்டுகளில் தங்கள் மொழியை இழந்துவிடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் அவர்களின் மொழியை ஆவணப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அவர்களுக்குள்ள வனம் சார்ந்த, வன விலங்குகள் சார்ந்த, தாவரங்கள், மூலிகைகள் சார்ந்த அறிவுக் களஞ்சியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

### அடிக்குறிப்புகள்

1. சங்க இலக்கியத்தில் புலையன், புலைத்தி ஆகிய சொற்கள் பயின்று வந்துள்ளன. இச்சொற்கள் தாழ்ந்த சாதி ஆண்மகன், பெண்மகள் என்று புரிந்து கொள்ளப்பட்டாலும், புலைத்தி என்ற சொல் முருகனுக்குச் சமயச்சடங்கு செய்பவளாகவும் (புறநானூறு 259), பூக்கூடை முடைந்து விற்பவளாகவும் (கலித்தொகை 117), புலையன் என்ற சொல் போரில் ஈடுபட்டவனாகவும் காட்டப்படுகின்றன. பிற்காலத்தில் சைவத் திருமுறைகளிலும் புலையன் என்ற சொல் வருவதனைக் காண்கிறோம். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்' (அப்பர் தேவாரம்), புழுத்தலைப் புலையனேன்' (திருவாசகம்). செருமர்/செரமர் என்ற ஒருவகை தாழ்த்தப்பட்ட மக்கள் கேரளா, தமிழகம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இவர்களையும் புலையர் என்றே அழைக்கின்றனர். மலைப் புலையர்களுக்கும் செருமர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று கூறுகின்றனர்.
2. மறையூர், காந்தளூர், காரையூர், கீழாந்தூர், கொட்டக்குடி ஆகிய ஐந்து ஊர்களும் 'அஞ்சுநாடு' என்று அழைக்கப்படுகின்றன. அப்பகுதி 'அஞ்சுநாடு பள்ளத்தாக்கு' என்று அழைக்கப்படுகின்றது. 'அஞ்சு நாட்டுக்குப் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் நாங்கள் என்று ஒரு தகவலாளி தெரிவித்தார். இப்பகுதியில் ஏராளமான பெருங்கற்காலக் கல்லறைகள் (Dolmens) காணப்படுகின்றன.
3. குடி என்ற சொல் மிகவும் பழமையான தமிழ்ச் சொல். 'துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று இந்நான்கு அல்லது குடியும் இல்லை' (புறநானூறு 335). துடியன் குடி, பாணன் குடி என்று குடி என்பது settlement என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.
4. இக்கட்டுரை புலையர்களில் குறும்பப் புலையர்களின் வாழ்வியலை மட்டும் விவரிக்கிறது.
5. குறிப்பு : களஆய்வு மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கு நிதிநல்கை வழங்கிய காசர்கோடு, மத்தியப் பல்கலைக்கழகத்துக்கு மிக்க நன்றி.

### துணை நூல்கள்


1. Bijumon Vargese & J.P.Mathew. **Tribes of Idukki**. SIL Survey. (2015).
2. **The Encyclopaedia of Dravidian Tribe**, DLA, Thiruvananthapuram. (1996).


●

அஞ்சலி



# மன்னை மு.அம்பிகாபதி

## நிகழ்காலத்தின் பொருத்தப்பாடு...

அமுதாபாரதி

ஓவியம்: திருவண்ணாமலை பெ.அன்பு

பொதுவுடைமை தத்துவத்தையும், அதன் நடைமுறையையும் செயலூக்கமுடன் இணைத்து மக்களுக்கு அளித்து வெற்றிகண்டவர் இலக்கியப் பேராசான் ப.ஜீவா அவர்கள்.

பொதுவுடைமை இயக்கத்தின் தலைசிறந்த எழுத்தாளர், பேச்சாளர், நாடகக் கலைஞர், இலக்கியவாதி என்று பன்முக ஆற்றல் மிக்க மன்னை மு.அம்பிகாபதி, இலக்கியப் பேராசான் ப.ஜீவா அவர்கள் முன்னெடுத்த பண்பாட்டு அரசியலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு செயல்பட்டவர்.

திருவள்ளுவர், கம்பன், பாரதியை ஆழக்கற்ற அவரது அரசியல் பணி மன்னார்குடி செண்பகா திரையரங்கக் கூடத்தில் 1955-களில் தொடங்கியது. 1964 முதல் 1969 வரை நகர்மன்ற உறுப்பினர்.

1969 ஆம் ஆண்டில் இந்தோ சோவியத் நட்புணர்வுக் கழகத்தின் தஞ்சை மாவட்டத்தலைவராக செயல்பட்ட நேரத்தில் கவிஞர் கண்ணதாசன், மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன், தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் ஆகியோருடன் மாஸ்கோ பயணம். காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாஸ்கோ சென்ற மன்னை மு.அம்பிகாபதி பொதுவுடைமைக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கம்யூனிஸ்டாக இந்தியா திரும்பினார்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

என்ற வள்ளுவரின் குறளும்,

'எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை' என்ற கம்பனின் காவியத்தின் பொதுவுடைமை பொருத்தப்பாடும்,

'உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒருமை உளராகி உலகியல் நடத்திடவேண்டும்' என்ற வள்ளலாரின் வாய்மொழியிலும்,

'எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற பாரதியின் வரிகளை உள்ளத்தில் உரமேற்றிக்கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டார்.

கடந்த 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை மாவட்டத் தலைவராக செயல்பட்ட காலகட்டத்தில் குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவர வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்திற்கு தலைமையேற்றுக் கடுங்காவல் தண்டனை பெற்று திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் 18 வரை நில மீட்சிப் போராட்டத்தை முன்னெடுக்க கட்சி அறைகூவல் விடுத்தது. தஞ்சை மாவட்டத்தில் மத்திய செயற்குழு உறுப்பினர் தோழர் என்.கே.கிருஷ்ணன், தோழர் ஏ.எஸ்.கே.அய்யங்கார் தலைமையில் போராட்டங்கள் நடைபெற்றன. வடபாதிமங்கலம், குன்னியூர், வலிவலம்,

நெடும்பலம், பூண்டி, கபிஸ்தலம், உக்கடை, பெருகவாழ்ந்தான் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற நில மீட்சிப் போராட்டத்தில் பங்கேற்று அன்றைய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை மாவட்டத் தலைவர் மன்னை மு.அம்பிகாபதி உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

வங்கிகளை, தேசியமயமாக்க நடைபெற்ற போராட்டம், தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கக் கோரிய போராட்டம், கிராமராஜ்யம் உள்ளிட்ட ஏராளமான போராட்டங்களில் முன்னின்று சிறைசென்றவர்.

பொதுவுடைமை இயக்கத்தின் சார்பில் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்வு செய்யப்பட்டு சமரசமின்றி செயல்பட்ட தோழர்கள் ப.ஜீவா, பி.ராமமூர்த்தி, மணலி கந்தசாமி, எம்.கல்யாணசுந்தரம் போன்றவர்களின் மக்கள் நலனை பிரதிபலிக்கும் சிறப்புமிக்க உரைகள் தமிழக சட்டமன்ற வரலாற்றில் சிறப்புமிக்கவை. இன்றளவும் வீரியம் குறையாதவை. இத்தகைய சித்தாந்த மரபு வழி நின்று, சட்டமன்றத்தில் செயல்பட்டவர் மன்னை மு.அம்பிகாபதி.

மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் இருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 1977 மற்றும் 1980 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர். சென்னை கடற்கரை சாலையில் இலக்கியப் பேராசான் ஜீவா அவர்களுக்கு சிலை அமைக்க வேண்டும் என சட்ட மன்றத்தில் தொடர்ந்து வலியுறுத்தியவர்.

சட்டமன்ற நிகழ்வுகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்பவேண்டும், படித்த இளைஞர்களுக்கு வேலையில்லா கால நிவாரணம், கருப்புப் பண ஒழிப்பு உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக சட்டமன்றத்தில் வாதாடியவர்.

தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டதன் பின்னனி உணர்வுபூர்வமானது. தமிழக சட்டமன்றப் பேரவையில் கடந்த 1981-ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மன்னை மு.அம்பிகாபதி பங்கெடுத்துப் பேசும் போது ருஷ்ய மொழியின் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்கென மாஸ்கோவில் ஒரு பல்கலைக்கழகம் இருப்பதையும், கவிஞர் கண்ணதாசன், இசை அமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் ஆகியோருடன் 1968-ஆம் ஆண்டில் தான் அங்குச் சென்றதையும் குறிப்பிட்டு பேசுகிறார். மேலும், தமிழ் மொழிக்கென்றே ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது குறித்து ஆய்வு செய்ய ஒரு வல்லுனர் குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார்.

இதையடுத்து, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் வ.சுப.மாணிக்கம் அவர்களின் தலைமையில் ஒரு வல்லுனர் குழுவினை அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் அமைத்தார்கள். கடந்த 1981 ஜனவரி மாதம் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட பேரறிஞர்கள் பலரும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று மேநிலை ஆராய்ச்சிக்கு மிகுந்த தேவை என்பதை வலியுறுத்தினர்.

தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என தஞ்சை மாவட்ட வளர்ச்சிமன்ற கூட்டத்தில் மன்னை மு.அம்பிகாபதி அவர்களின் முயற்சியில் ஏற்கெனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. தமிழக சட்டப்பேரவையில் நடந்த விவாதத்தில் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் இப்பல்கலைக்கழகத்தை அமைக்கலாம் என்ற கருத்து வந்த போது, மன்னை மு.அம்பிகாபதி குறுக்கிட்டு மதுரையில் ஏற்கெனவே பெருந்தலைவர் காமராஜர் பெயரில் பல்கலைக்கழகம் இருக்கிறது. எனவே கம்பராமாயணம் படைத்த கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழந்தூர் இருக்கும் தஞ்சை மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைத்தால் அது பொருத்தமாக இருக்கும் என வலியுறுத்துகிறார்.

தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகலையும் முதல்வரிடம் மன்னை மு.அம்பிகாபதி அளிக்க, அவரது கோரிக்கையினை ஏற்றும், வல்லுனர் குழு அறிக்கையினை பரிசீலித்தும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினை தஞ் சாவூரில் நிறுவுவது என்று அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அறிவித்தார்.

மிதிவண்டியில் இருவர் செல்ல அனுமதி, தொழிலாளர் நலன் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை சட்ட மன்றத்தில் பேசி சட்ட வடிவமாக்கியவர்.


மகாகவி பாரதியார் நற்பணி மன்றத்தின் தலைவராக செயல்பட்டு தஞ்சையில் பாரதியார் சிலை அமைத்தவர். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், இந்தோ சோவியத் நட்புறவுக் கழகம் உள்ளிட்ட அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

**"காலமெனும் ஆழியிலும்**
**காற்று, மழை, ஊழியிலும்**
**சாகாது கம்பனவன் பாட்டு...**
**அது தலைமுறைக்கு எழுதி வைத்த சீட்டு...!**

என்று கம்பன் புகழ்பாடிய கவிஞர்.கண்ணதாசன் வழியில் நின்று கம்பனை ரசித்தவர். கம்பன் கழகத் தலைவராக செயல்பட்டு மார்க்சிய தத்துவங்களை கம்பனின் பாடல்களில் இணைத்து ஆய்வு செய்தவர்.

மேடைகள் தோறும் மார்க்சிய மெய்ஞானத்தை எதார்த்த மொழியில் பேசி வெகு மக்களின் சிந்தனைத் திறனை தட்டியெழுப்பிய மன்னை மு.அம்பிகாபதி கடந்த 14.07.2020 அன்று தனது சிந்தனையை நிறுத்திக்கொண்டார். கார்ல் மார்க்ஸ் காட்டிய வழியில், ஜீவா பேசிய மொழியில் மன்னை மு.அம்பிகாபதி வாழ்கிறார்.

●




# இப்படியும் பெயர் வைக்கலாமோ?

## முனைவர் இரா. கற்பகம்

எங்கும் கொரோனா எதிலும் கொரோனா என்று நாம் நொந்து போயிருக்கிறோம். ஆனால் கொரோனாவை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்! வட இந்தியாவில் கொரோனா காலத்தில் பிறந்த மூன்று குழந்தைகளுக்கு 'கொரோனா, கோவிட் (இவர்கள் இரட்டைக் குழந்தைகள்), லாக் டவுன்,' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்! மேற்குவங்கத்தில் ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினர் தன் குழந்தைக்கு 'கொரோனா' என்று பெயர் வைத்திருக்கிறார்! இதை நினைத்துச் சிரித்த அதே நேரத்தில் எனக்குத் தெரிந்தவர்களில் சிலரது வித்தியாசமான அர்த்தமுள்ள, அர்த்தமில்லாத பெயர்கள் என் நினைவுக்கு வந்தன.

எனது கல்லூரித் தோழி ஒருவரது பெயர் 'போதும்பெண்'. ஏழாவது பெண்ணாகப் பிறந்ததால், இனி பெண் குழந்தை வேண்டாம் என்று அப்பெயரை வைத்தார்களாம். ஒவ்வொரு ஆசிரியரிடமும் தன் பெயர் விளக்கம் தரும் போது அவர் நொந்து போவார். என் பள்ளித்தோழிகள் பலர் பொன்மதி, ரதிமாலா, தமிழரசி, கயல்விழி (இவரது தாயார் பெயர் பர்வதவர்த்தினி), பூரணபுஷ்கலா, குந்தவி, சந்திரவதனா, அன்னம், பர்வதராணி, இளவரசி, நித்யகலா, சிவகாமசுந்தரி, நீலவேணி, பொன்மைதிலி போன்ற அழகிய பெயர்களைக் கொண்டிருந்தனர்.

என் தந்தையின் கீழ்ப் பணிபுரிந்தவர்களில் சிலரது பெயர்கள் - கடற்கரை, போர்வாள் என்ற இப்பெயர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்றும் வழக்கில் உள்ளன.

எங்கள் உறவினர்களில் மிக இலக்கிய நயத்தோடு சூட்டப்பட்ட பெயர்கள் சில:

வனரோஜா,சிவகடாட்சம், ராஜகுமாரி, திரிபுரசுந்தரி, சோழமன்னன், குலோத்துங்கன், வணங்காமுடி, மேகநாதன், பூமிநாதன், சோழமாதேவி, சேவற்கொடி, மலர்க்கொடி, சுபாங்கி, ஏலம்பூ, வேம்பு, அன்புக்கரசி, மங்கையர்க்கரசி, அங்கயற்கண்ணி, கண்ணகி, கயல், நிலா, நித்திலா (நித்திலம் என்றால் முத்து என்று பொருள்). ஆனால் வண்டார்குழலி என்ற அழகான பெயர் உடையவரைச் சுருக்கமாக 'வண்டு' என்றும், மைதிலி என்ற பெயரை 'மைதா' என்றும் அழைக்கும் முட்டாள்தனமும் இங்குண்டு! கம்யூனிசக் கோட்பாடுகளில் பற்று உள்ள சிலரது வீடுகளில் வழங்கும் பெயர்கள் ரஷியா, ஸ்டாலின், லெனின் ஆகியவை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சில கிராமங்களில் வழங்கும் சில காரணப்பெயர்கள் வேடிக்கையானவை. பனிரெண்டு பிள்ளைகள் உள்ள வீட்டிற்குப் பெயரே 'புள்ளகுட்டி வீடு'! அதில் பிள்ளைகளுக்கு என்னென்ன பெயர்கள் என்று வீட்டில் உள்ளவர்களுக்கே மறந்து போய், பெரியதம்பி, நடுத்தம்பி, சின்னத்தம்பி, கட்டித்தம்பி (சிறு குழந்தையாய் இருந்தபோது இவருக்கு வயிற்றில் கட்டி வந்து, பிழைத்ததே பெரும்பாடாகி விட்டதால் இந்தப் பெயராம்), பெரியாப்பா (பெரிய பாப்பா என்பதன் மரூஉ), நடுபாப்பா, சின்னாப்பா, செவத்தாப்பா (சிவந்த நிறம் உடையவர் என்பதால் சிவந்த பாப்பா) என்ற பெயர்களே நிலைத்துவிட்டன! ராஜேந்திரன் என்ற பெயர் மறந்து மொட்டை என்ற பெயரே வழங்கி, அவரது வீடு 'மொட்ட வீடு' என்றே ஆகிப்போனது. அவர் வீட்டுப் பெண் குழந்தைகள், இன்றும் பெரியம்மு, நல்லம்மு, சின்னம்மு என்றே அழைக்கப் படுகிறார்கள். கட்டாரி, கல்கண்டு, மண்டை (தலை பெரிதாக இருந்ததால்) என்று சில முதியவர்கள். அவர்களது இயற்பெயர்கள் அவர்களுக்கே தெரியாது!



நாகை, குடந்தை, மாவட்டங்களிலும் மற்றும் சுற்றுப் பகுதிகளிலும் வேளாங்கண்ணிக்கு வேண்டிக்கொண்டு, பெண் குழந்தை பிறந்தால், அவர்களுக்கு என்ன பெயர் வைத்தாலும், 'மேரி' என்றே அழைப்பார்கள். எங்கள் உறவினர்களில் நிறைய 'மேரிகள்' உண்டு. மத நல்லிணக்கத்துக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு உண்டா?

முன்னாள் அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களது மகன்களின் பெயர்கள்-விடுதலை, ஈரோடு. "ஈரோடு என்று யாராவது பெயர் வைப்பார்களா? என்று கேலி செய்பவர்களிடம் அவர், பழனி, சிதம்பரம் என்று வைக்கலாம், ஈரோடு என்று வைக்கக் கூடாதா?" என்று திருப்பிக் கேட்பாராம்.

ஆனந்த விகடன் பத்திரிகை 'மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தை' அறிமுகப் படுத்தியபோது, குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியிலிருந்து இரு மாணவிகள்- செண்பகக்குழல்வாய்மொழி, தேனமிர்தசியாமளா ஆகியோர் மிக்க முனைப்புடன் எழுதி வந்தார்கள். இப்பெயர்கள் எங்கள் குடும்பத்தினர் அனைவரையும் ஈர்த்தன. அத்தோடு நாங்கள் அனைவருமே கல்கியின் 'பொன்னியின் செல்வனின்' தீவிர ரசிகர்கள். இவ்விரண்டின் தாக்கத்தால் உருவான எங்கள் குடும்பத்துப் பெயர்கள் சில: செண்பகப் பூங்குழலி ('பொன்னியின் செல்வனின்' கதாநாயகியரில் ஒருத்தி), சுதந்திரப் பொன் வந்தியத்தேவன்(சுதந்திரப் பொன்விழா ஆண்டில் பிறந்ததால்), தேனமிர்தவர்ஷிணி, செஞ்சுடர் தமிழருவி (கார்த்திகைச் சுடரன்று பிறந்ததால்), அருள்மொழிவர்மன் (பொன்னியின் செல்வன்), அநிருத்தன், சங்கமித்ரா (அசோகச் சக்ரவர்த்தி புத்த மதத்தின் அரிய கருத்துக்களைப் பரப்பத் தன் மகளுக்கு வைத்த பெயர்) ஆகியவை.

எங்கள் நெருங்கிய குடும்ப நண்பர் ஒருவர் வீட்டு நபர்களின் பெயர்களைப் பார்க்கும் போது அவர்களுக்கு இருக்கும் தமிழ்ப் புலமையும், இரசனையும் வியக்க வைக்கின்றன. இயல்பறி (பிறரது இயல்பை அறிந்து நடப்பவர்), நிநீகா (நிலம் நீர் காற்று ஆகியவற்றின் முதலெழுத்துக்கள்), அளவறி (அளவறிந்து வாழ்பவர்), வமநீ (வளி, மண், நீர் ஆகியவற்றின் முதலெழுத்துக்கள்), அறிதி, (அன்பு, அறிவு, அமைதி ஆகியவற்றின் முறையே முதல், இடை, கடை எழுத்துக்கள்), அடவி (காடு), அதியன், ஆதிரை, அருவி, வெண்பா, திருவள்ளுவன், தொல்காப்பியன் ஆகிய

இவ்வினிய தமிழ்ப் பெயர்கள் கேட்கும்தோறும் கூறும்போதும் இனிமை பயக்கின்றன அல்லவா? இன்னொரு நண்பர் வீட்டுப் பெயர்கள்: தமிழ்வேல், தமிழினியன், தமிழ்மறை, தமிழ்மணி, கார்குழலி, மகிழினி.

வங்கியில் பணிபுரியும் எனது தோழியின் பெயர் வெண்மதி. அவரது சகோதரியின் பெயர் வெண்ணிலா. ஒரு பொருட்பன்மொழிக்கு அருமையான எடுத்துக்காட்டு அல்லவா? எனக்கு அறிமுகமுள்ள ஒரு வனத்துறை உயரதிகாரியின் பெயர் வள்ளல் பாரி. எழிலி என்ற கல்லூரி முதல்வரும், யாழ், கீர்த்திவாசினி, யாழினி, மோகனசுந்தரி, தமிழினி, இதழ், தேன்மொழி, சிந்துவிநோதினி, பாவை, பனிமலர் ஆகிய யுவதிகளும், சிபிச் சக்ரவர்த்தி, மணிமாறன், செல்லக்குமரன், ராஜமன்னன், இரும்பொறை ஆகிய இளைஞர்களும் எனக்கு அறிமுகமான சிலர்.

கோவையில் ஒரு சமூகத்தினரிடம் இன்றும் ஒரு பழக்கம் தொடருகிறது. பெண் குழந்தைகளுக்குக் 'குங்கும' என்றும் ஆண் குழந்தைகளுக்கு 'அங்கு' என்றும் தொடங்கும் பெயர்களைத்தான் வைப்பார்கள். அந்த வகையில் எனக்குத் தெரிந்தவர்கள், குங்கும வைஷ்ணவி, குங்குமத் தேன், அங்கு அசோக், அங்கு ரித்விக் ஆகியோர்.

எனது மாணவர்களில் பலர் தமிழழகும் இலக்கிய நயமும் கூடிய பெயர்களைக் கொண்டுள்ளனர். ராகநிவேதினி, சுருதிநந்தினி என்ற சகோதரிகள், மாதுளா, மிதுளன், முகிலன் என்ற உடன் பிறந்தோர்கள், அகரமொழி, இலக்கியன் என்ற உடன் பிறந்தோர்கள், கண்மணி, சுருதிலயா, சரயு சம்ப்ரிதி (சரயு என்பது ஒரு புண்ணிய நதியின் பெயர். இவரது தாயார் பெயர் கங்கா) போன்ற பெயர்களால் இம்மாணவர்கள் என்றும் என் நினைவில் இருக்கிறார்கள். என் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க பெயர்கள் சில: நட்சத்திரம், மதனசுந்தரி, ராதை, அன்புமீனாள், லட்சுமி பெருந்தேவி ஆகியவை.

எங்களுக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒரு குடும்பத்தினர் தீவிர திராவிட முன்னேற்றக் கட்சியின் ஆதரவாளர்கள்; திரு. மு. கருணாநிதியின் அபிமானிகள். அவர்கள் குடும்பத்தோரது பெயர்களைப் பாருங்களேன்: கனிமொழி, மதுமதி, குமணன், மகிழன், அகிலன், தமிழ், புகழ்.

இவர்கள் தவிர நம் எல்லோருக்கும் தெரிந்த சில பிரபலங்களின் வித்தியாசமான பெயர்கள்: தாமரை (கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர்), திலகபாமா(கவிஞர்), தமிழ்ப்பூங்குயில் மொழி (வழக்கறிஞர்), சமுத்திரக்கனி (இயக்குனர்), சிங்கம்புலி (திரைப்படத் தயாரிப்பாளர்), ஜோதிர்லதா கிரிஜா (எழுத்தாளர்), இன்சுவை(எழுத்தாளர்), இறையன்பு (குடிமைப்பணி அதிகாரி), இன்பசாகரன் (ஓய்வு பெற்ற குடிமைப்பணி அதிகாரி) போன்றவை.

எங்கள்வீட்டுப் பெயர்களால் கவரப்பட்டு பல நண்பர்கள், தங்கள் குழந்தைகளுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களாகச் சொல்லும்படி கேட்பார்கள். சிலர் எண் சோதிடப்படி 'ல', 'ட' போன்ற எழுத்துக்களில் ஆரம்பிக்க வேண்டும் என்று நிபந்தனை வேறு போடுவார்கள்! அவர்களிடம் நான் 'தமிழ்ச் சொற்கள் இவ்வெழுத்துகளில் ஆரம்பிக்க மாட்டா' என்று கூறி அன்போடு மறுத்துவிடுவேன். மற்றவர்க்கு மெனெக்கெட்டு நேரம் ஒதுக்கி அழகிய பெயர்கள் பல உருவாக்கி மின்னஞ்சல் மூலம் உடனே அனுப்புவேன். பின்பு எப்போதாவது சந்திக்கும் போது கேட்டால், 'ஜோத்ஸ்னா', 'ஷர்மிளா' என்று பெயர் வைத்ததாகச் சொல்வார்கள். நொந்து போவேன்!

கடைசியாக ஒரு செய்தி: எங்கள் வீட்டுக் கிளியின் பெயர் புலிகேசி!

●


**புத்தகங்கள் அச்சிட**

**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**


**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**



KAAVYA TAMIL (QUARTERLY) APRIL- SEPTEMBER 2020
Regd No : TN TAM 8012 / 43610
பேரா. முனைவர் சு.சண்முகசுந்தரத்தின்
நாட்டுப்புறவியல் நூல்கள்
நாட்டுப்புறவியல் [1975]
நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு [1976]
நாட்டுப்புற இலக்கிய வரலாறு [1976]
தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள் [1980]
நாட்டுப்புறவியல் சிந்தனைகள் [1981]
தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் [1982]
தமிழக நாட்டுப்புறக் கதைகள் [1982]
நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாயப்பார்வை [1985]
நாட்டுப்புற இலக்கியத்தில் உளவியல் [1990]
சுடலைமாடன் வழிபாடு [1993]
அகத்தாரும் புறத்தாரும் [2000]
ஐந்து கதைப்பாடல்கள் [2000]
முருகன் வழிபாடு [2003]
நாலுவகைப் பூவெடுத்து [2004]
நாட்டுப்புறத்தெய்வங்கள் களஞ்சியம் [2009]
காலந்தோறும் கண்ணகி கதைகள் [2010]
நெல்லை நாட்டுப்புறத் தெய்வங்கள் [2011]
திராவிடத் தெய்வம் கண்ணகி [2011]
வள்ளியூர் வரலாறு [2012]
நான்கு கதைப்பாடல்கள் [2012]
தமிழ்ப் பழமொழிகள் [2012]
நெல்லை நாட்டுப்புறக் கலைகள் [2015]
நெல்லை மறவர் கதைப்பாடல்கள் [2018]
கொங்கு நாட்டுப்புறப்பண்பாடு [2019]
தொடர்புக்கு
044 - 23726882
98404 80232
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
34&35
ஐப்பசி
ஏப்ரல் - செப்டம்பர் 2020
மலர் 9 இதழ் 2&3
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 200
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
மருதகாசி
100
பேரா.சு.சண்முகசுந்தரம்
கபிலன் வைரமுத்து
நாகமன் - சிறுகதை
வேலாயுதம்
பொம்மாச்சி
- நவீன நாடகம்
மற்றும்
கட்டுரைகள்
கவிதைகள்
விமர்சனங்கள்
எங்க தங்க ராஜா
காவ்யா சண்முகசுந்தரம்

கட்டுரை

# பொதுச் சிந்தனையாளர்கள் தயாராக வேண்டும்

**க.பழனித்துரை**



மக்களாட்சி நடைபெறுகின்ற நாட்டில் பொதுச் சிந்தனையாளர்கள் (Public Intellectuals) ஆற்ற வேண்டிய பணிகள் பல. அவைகளில் ஒன்று ஒரு அரசாங்கத்தின் செயல்பாடுகளை கூர்ந்து கவனித்து ஆய்வு செய்து பொதுமக்கள் பார்வைக்கு தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அது மட்டுமல்ல; பல்வேறு நிலைகளில் சமூகத்தின் பொருளாதார, வாழ்வாதார, வாழ்க்கைத் தரம் போன்ற முக்கிய கூறுகளை ஆய்வு செய்து மக்களின் வாழ்க்கைத் தரம் எங்கு இருக்கிறது, அவைகள் எங்கே செல்ல வேண்டும், அதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் அத்துடன் பொதுமக்கள் குடிமக்களாக என்ன செய்ய வேண்டும் என்பதை தொடர்ந்து பொதுத் தளத்திற்குக் கொண்டு வந்து விவாதப் பொருளாக்க வேண்டும். பொதுச் சிந்தனையாளர்கள் அந்தப் பணிகளை ஓர் ஆய்வாளர் என்ற நோக்கில் மட்டுமே அந்தப் பணிகளைச் செய்திடல் வேண்டும்.

தாங்கள் செய்கின்ற அனைத்து சமூகம் சார்ந்த ஆய்வுகளையும் ஊடகங்கள் மூலம் பொது விவாதத்திற்குக் கொண்டு வந்துவிட வேண்டும். அந்த விவாதங்கள் மூலம் அந்தக் கருத்துக்கள் அரசாங்கத்தைச் சென்றடைய வேண்டும். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி கொண்டுவரும் பொது விவாதங்களைவிட பொதுச் சிந்தனையாளர்கள் கொண்டுவரும் சமூக பொருளாதார வாழ்க்கைத்தரம் பற்றிய கருத்தாடல்கள் பொதுச்சிந்தனையில் ஆக்கிரமிக்கும் வகையில் பொதுத்தளத்தில் எடுத்து வைக்க வேண்டும். அப்படிக் கருத்துக்களை வைக்கும்போது அரசாங்கத்திடமிருந்து எந்த எதிர்பார்ப்பும் இன்றி செய்திடல் வேண்டும். அப்படிச் செய்கின்றபோது அரசியல் கட்சிகளின் கோபங்களுக்கும் ஆளாக நேரிடலாம். அரசாங்கத்தின் கோபங்களுக்கும் ஆளாகலாம். அதைப்பற்றி நாம் கவலை கொள்ளக்கூடாது. இந்தப் பணியில் பல ஆபத்துக்களும் உள்ளன. அந்த ஆபத்தைக் கணக்கில் கொண்டுதான் பலர் கருத்துக்கள் தங்களிடமிருந்தும் அதைச் சொல்ல பொதுத் தளத்திற்கு வருவதில்லை.

இதை விளக்குவதற்கு ஓர் உதாரணத்தை முன் வைத்தால் அனைவரும் புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும். நான் ஒருமுறை அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்திற்கு 1987இல் ஒரு தேசிய மாநாட்டுக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது, அந்த மாநாட்டில் சிறப்புரை ஆற்ற வந்திருந்த பேராசிரியர் ரஜினி கோத்தாரியைச் சந்தித்தேன். அப்பொழுது

அவரிடம் ஒரு கேள்வியை நான் முன் வைத்தேன். ஒரு சமூகவியல் ஆய்வாளனாக, ஆசிரியராக பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது வகுப்பில் பாடம் நடத்துவதைத் தவிர்த்து ஓர் ஆசிரியர் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று கேட்டேன். உடனே சற்று நிதானித்து அதற்குப் பதில் கூறினார்.

"நான் பேராசிரியராக இருந்தபோது 1975ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று இரவு என்னால் தூங்க முடியவில்லை. காலை எழுந்தவுடன் என் நண்பர்களுக்கெல்லாம் தொலைபேசியில் பேசினேன். அனைவரும் அக்கிரமம், அநியாயம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். அதற்கு உடனே நாம் பாராளுமன்ற வீதியில் சென்று நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிப்போம் என்றேன். அனைவரும் ஒப்புக் கொண்டனர். காலை 11 மணிக்கு வருமாறு கேட்டுக்கொண்டேன். அனைவரும் வரச் சம்மதித்தனர். 11 மணிக்கு நான் அங்குச் சென்றபோது யாரையுமே காணவில்லை. அடுத்த ஒரு மணி நேரத்தில் மிகச் சொற்பமானவர்களே அங்கு வந்தனர். மற்றவர்கள் வரவில்லை. என்ன நடக்குமோ என்ற பயம் அவர்களைக் கவ்விக் கொண்டது. நாங்கள் ஒரு சிறு கூட்டம். யாரைப் பற்றியும் கவலைப்படாமல் முழக்கமிட்டு அந்த வீதியில் நடக்க ஆரம்பித்தோம். காவலர்கள் வந்து மிரட்ட ஆரம்பித்தார்கள், அந்தச் சிறு கூட்டத்திலிருந்து பலர் கலைந்தார்கள். நாங்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் எங்கள் முழக்கத்துடன் தொடர்ந்தோம். கடைசியில் காவலர்கள் எங்களைக் கைது செய்வதாகக் கூறினார்கள். கடைசியாக நாங்கள் கலையவில்லை என்ற நிலையில் எங்களைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். சிறையிலிருந்து அவசர நிலை விலக்கப்பட்ட பிறகுதான் நாங்கள் விடுவிக்கப்பட்டோம். நான் பேராசிரியர், எனக்கு நல்ல சம்பளம், வெளிநாடுகளுக்கு அடிக்கடி சென்று அங்கும் மாணவர்களுக்கு வகுப்பு எடுத்து சம்பாதித்தேன். எனவே அந்தச் சுகமான நடுத்தர மக்களின் வாழ்க்கையை ஏன் நாம் நாசமாக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தால் நானும் மற்றவர்களுடன் வீட்டில் இருந்திருக்கலாம். ஆனால், என்னால் இருக்க முடியவில்லை. ஏனென்றால் மாணவர்களுக்கு சுதந்திரம், உரிமைகள், மக்களாட்சி பற்றி தினந்தோறும் வகுப்பெடுப்பேன். அவைகள் அனைத்தும் சிதைக்கப்படும்போது அதை வேடிக்கை பார்த்து வீட்டில் அமர்ந்திருப்பது எந்த விதத்திலும் சமுதாயத்திற்கு நன்மை பயக்கப் போவது கிடையாது. அது மட்டுமல்ல; பொதுவாக அரசு என்பது மக்கள் பயத்தை வைத்துத்தான் பலவற்றை சாதித்துக் கொள்ளும். எனவே மக்களைப் பாதிக்கின்ற பெரும் ஆபத்துக்கள் வரும்போது நியாயம் சார்ந்த செயலில் இறங்குவதும், ஒரு ஆசிரியரின் பணிதான்" என்று கூறினார்.

"ஒரு ஆசிரியன் பொதுத் தளத்திற்கு வராமல் நல்ல ஆசிரியராக மாணவர்களுக்குப் போதிக்க முடியாது. எனவே அவன் களத்திற்கு வந்தால்தான் சமூகத்தைப் பற்றிய நேரிடையான புரிதலை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இல்லையென்றால் புத்தகத்தில் உள்ளவற்றை மட்டுமே; சொல்லிக் கொடுப்பான். அது மட்டுமல்ல; சமூகம் சார்ந்த பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்ய வேண்டும். அத்துடன் சமூகத்துக்கான விரிவாக்கப் பணியைச் செய்திட வேண்டும். எனவே ஒரு ஆசிரியன் என்பவன் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் பிரச்சினைகளை பொதுத்தளத்திற்குக் கொண்டு வந்து தீர்வு காண்பதற்கு உதவிட வேண்டும். அந்தப் பணியை இந்திய நாட்டில் பொது உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் அனைவரும் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். "அப்படி மக்கள் பிரச்சினை சார்ந்து கருத்துக் கூறும்போது அரசாங்கம் என்ன நினைக்கும் எதிர்க்கட்சி என்ன நினைக்கும் என்று கருதாமல், உண்மையை தொடர்ந்து எழுதிட வேண்டும்" என்றும் கூறினார். அதுதான் இன்றுவரை என்னை பொதுத் தளத்தில் இயங்க வைத்துள்ளது.

அதேபோல் பங்களாதேஷ் பல்கலைக்கழகம் ஒன்றில் வறுமையின் கோட்பாட்டை மாணவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார் பேரா. முகமது யூனுஸ். அப்போது பல்கலைக்கழக வாயிலில் சிறுவர்கள் கூட்டம் ஒன்று வந்து வாயிற்கதவை மோதி திறந்து உள்ளே வர முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். பல்கலைக்கழக காவலர்கள் அந்தச் சிறுவர்களுடன் போராடிக் கொண்டிருந்தனர். அதைப்பார்த்த பேராசிரியர் முகமது யூனுஸ் வகுப்பை விட்டு வெளியில் வந்து ஏன் இந்தச் சிறுவர்கள் இங்கு இப்படி உங்களுடன் போராடிக் கொண்டுள்ளார்கள் என்று காவலர்களைப் பார்த்துக் கேட்டார். காவலர்கள் சொன்ன பதில் அவரை அதிர வைத்தது. இந்தச் சிறுவர்கள் வறுமையில் வாடும் குடும்பங்களிலிருந்து தினம் பல்கலைக்கழக விடுதிக்கு வந்து, அங்கு மாணவர்கள் சாப்பிட்ட பின் எஞ்சிய உணவைப் பெற்று தங்கள் பசியைத் தீர்த்துக் கொள்கின்றனர் என்பதுதான் அந்தப் பதில். அந்தச் சிறுவர்களைப் பார்த்து எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டார். அவர்களும் தாங்கள் எங்கிருந்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துவிட்டு தங்கள் பசியை தணித்துக் கொள்ள விடுதிகளை நோக்கி ஓடினர். அவர் அன்று மாலையே அந்தச் சிறுவர்கள் வாழ்ந்துவரும் இடத்துக்குச் சென்று அவர்களின் தாய் தந்தையரைச் சந்தித்தார் தன் ஆராய்ச்சி மாணவருடன். அதன் விளைவுதான் "கிராமின் வங்கி" இன்று உலகளாவிய நிலையில் வளர்ந்து உலகத்து ஏழைகளுக்கெல்லாம் உதவ வழிவகை

செய்துள்ளது. அந்தப் பணிதான் அவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது.

அவர் தன் வங்கிச் செயல்பாடுகள் மூலம் உலகத்தில் ஏழைகள் மீது இருந்த மிகப்பெரிய அவக் கருத்தை மாற்றினார். "ஏழ்மையில் வாழும் மக்களிடம் ஒழுக்கத்தையும் நாணயத்தையும் எதிர்பார்க்க முடியாது" என்ற கருத்தை மாற்றினார். ஏழைகள் மரியாதையுடன் வாழ வழிவிட்டால் அவர்கள்தான் ஒழுக்கத்தையும் நாணயத்தையும் தூக்கிப் பிடிப்பவர்கள் என்பதை நிரூபித்தார். அவர் உலக வங்கியால் சந்தித்த சவால்கள் கொஞ்சமல்ல. அவர் உலக வங்கியின் சுயரூபத்தை தன் புத்தகத்தின் வழியே தோலுரித்துக் காண்பித்தார். அவரும் பல்கலைக்கழகப் பேராசிரியர்தான்.

அதேபோல் கனடாவில் நான் சென்று பார்த்த பார்க் லேண்ட் என்ற நிறுவனம் எட்மண்ட்டனில் இருக்கும் அல்பர்ட்டா பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஒரு சிலர் சேர்ந்து உருவாக்கியதாகும். அதற்கு ஒரு கட்டடத்தை அந்தப் பல்கலைக்கழகம் தந்துள்ளது. அதற்கான நிதியை பொதுமக்கள் தருகின்றனர். அவர்கள் நடத்தும் ஆய்வுகள் அந்த நாட்டு அரசியல் கட்சிகளையும், அரசாங்கத்தையும், அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் கதிகலங்க வைக்கின்றன. பலர் பதவிகளையே இழந்துள்ளனர். அப்படிச் செயல்படுகின்றனர் அந்தப் பேராசிரியர்கள். இதுபோல் நம் நாட்டிலும் நிறையபேர் துணிச்சலுடன் கருத்துக்களை பொதுத் தளத்தில் எடுத்து வைக்கின்றனர். அதற்காக அவர்கள் கொடுக்கும் விலை என்பது மிக அதிகம். ஆனால் அந்த எண்ணிக்கை என்பது இந்த நாட்டுக்கு மிக மிகக் குறைவானது.

மக்கள் பிரச்சினைகள் பேசும்போது எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பேச வேண்டியது இல்லை. பிரச்சினைகளை விவாதிக்கும்போது அதன் தீர்வின் பக்கம் நின்றுவிட வேண்டும். அது மட்டுமல்ல; அரசு தவறு செய்வதை சுட்டிக் காட்டுவதுபோல எதிர்க்கட்சிகள் செய்கின்ற தவறுகளையும் சுட்டிக் காட்டுதல் வேண்டும். அதற்குத் தேவையான ஆற்றலும், திறனும், நெஞ்சுரமும், ஆத்ம பலமும் வேண்டும். அந்த வகையில் தமிழகத்தில் ஒரு நூறு பேர் தயார் ஆனார்கள் என்றால் தமிழக அரசியலில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்து விடலாம். இதே போல் இந்தியாவிற்கு 1000 பேர் தயாரானால் அவர்களின் செயல்பாட்டால் மிகப் பெரிய மாற்றத்தை அரசியல் கட்சிகளில், அரசாங்கத்தில், ஆளுகையில், நிர்வாகத்தில் கொண்டு வந்துவிடலாம். இவர்கள் வாக்குக்குப் போகாதவர்கள். அரசியல் கட்சிகளிடம் எதையும் தங்களுக்காக எதிர்பார்க்காதவர்கள். ஆனால் ஒன்றுகூட வேண்டும். அப்படி ஒன்று கூடிச் செயல்பட்டால் இன்றைக்கு நாம் பார்க்கும் மக்கள் விரோத அரசியலுக்கு முடிவு கட்டிடலாம். அரசியல் போக்கை மட்டுமல்ல; ஒட்டுமொத்த ஆளுகை மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளையே மாற்றி அமைத்து விடலாம். நம் நாட்டில் பொதுச் சிந்தனையாளர்கள் இல்லாமல் இல்லை. நிறைய இருக்கின்றார்கள். ஆனால் பொதுப் பிரச்சினைகள் பற்றி வீட்டுக்குள்ளும், காலையில் குழுவுடன் நடந்து செல்லும்போதும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு விட்டு வீட்டுக்குள் பயந்து முடங்கிக் கொள்கின்றனர். இதன் விளைவுதான் பொதுச் சிந்தனையற்ற சுயநலவாதிகள் அரசியலை பிடித்துக் கொண்டு மக்களை வாட்டி வதைக்கின்றனர். எனவே இந்தச் சூழலை மாற்ற மாற்றம் வேண்டும் என்று நினைப்பவர் துணிவுடன் கருத்துச் சொல்ல பொதுத்தளத்திற்கு வர வேண்டும்.

இன்று இந்தியாவிலும் தமிழகத்திலும் நடைபெறும் அரசியல் என்பது முழுக்க முழுக்க கட்சி நலம் சார்ந்த அரசியலாகவே முன்னெடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல; அரசியல் கட்சியில் செயல்படுவதும்கூட தங்களுக்கு லாபம் பார்க்கத்தான் என்பதை எந்தக் கூச்சமுமின்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டனர். எனவே ஆத்மாவை இழந்த அரசியலை மாற்றிட படித்த நடுத்தர வர்க்கம் முன்வருவது காலத்தின் கட்டாயம்.

தமிழகத்துக்கு அடுத்த ஆண்டு தேர்தல் வர இருப்பதால் தமிழகத்தை, தமிழக வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை மறுசீராய்வு செய்ய வேண்டிய சூழலில் நாம் இருக்கிறோம் என பொதுச் சிந்தனையாளர்கள் ஒன்றிணைந்து நம் பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு, வறுமைக் குறைப்பு, வாழ்வாதாரம், கல்வி தொழில்துறைச் செயல்பாடு, பொது வினியோகம், விவசாயம், சிறு குறு தொழில்கள், பெண்களின் நிலை, விளிம்புநிலை மக்களின் நிலை, புலம் பெயர்வு, விவசாயம், கால்நடை வளர்ச்சி, விவசாயத் தொழிலாளர், உயர்ச்சூழல், தொழில் வளர்ச்சி பல்லுயிர் பெருக்கம், சுற்றுச்சூழல், நீர்ச்சூழல், இயற்கை வளம் போன்ற பல்வேறு துறைகளின் இன்றைய நிலை என்ன; அடுத்து எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற ஒரு அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும். அடுத்து வருகின்ற அரசு எப்படிச் செயல்பட வேண்டும் என்கின்ற வழித்தடத்தையும் அந்த அறிக்கையில் கொண்டு வந்து புதிதாக வருகின்ற அரசிடம் கொடுத்து அரசை கண்காணிக்க முயற்சிப்பது தான் இன்றைய பொதுச் சிந்தனையாளர்களின் நல்ல சேவையாக இருக்க முடியும்.

●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

## முன் வெளியீட்டுத் திட்டம்


# தமிழில் மார்க்சிய செவ்வியல் நூல்கள் மொழிபெயர்ப்புத் திட்டம்

முதன்மைப் பதிப்பாசிரியர்: **ந.முத்துமோகன்**



**பொதுவுடைமை - குழந்தைகளுக்காக**

பீனி அடம்ஸாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள்: ஜேக்கப் புளூமென்ஃபெல்ட், சோஃபி லூவிஸ் | தமிழில் - எம். பாண்டியராஜன்



**இடதுசார் வெகுமக்களியத்தை நோக்கி**

சந்தால் மோஃபே | தமிழில்: பொன். சின்னதம்பி முருகேசன்




**சர்வாதிகாரம் குறித்து: இருபதாம் நூற்றாண்டிலிருந்து இருபது பாடங்கள்**

டிமோத்தி ஸ்னைடெர் | தமிழில்: ரமேஷ்



**அரசியலாகிற பண்பாடு**

கிறிஸ்டோபர் காட்வெல் பதிப்பாசிரியர்: டேவிட் மார்கோலியெஸ் தமிழில்: கமலாலயன்




**சொத்தின் வரலாறு - ஆதிகாலத்திலிருந்து நாகரிக காலம் வரை**

பால் லஃபார்க் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்



**லெனின் சந்தித்த நெருக்கடிகள் (பயங்கரவாதம், போர், பேரரசு, காதல், புரட்சி)**

தாரிக் அலி | தமிழில்: க.பூர்ணச்சந்திரன்




**கார்ல் மார்க்ஸ் - ஓர் ஆய்வு**

எர்னெஸ்ட் பிளாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: ஜான் மேக்ஸ்வெல் தமிழில்: பொன்.சின்னதம்பி முருகேசன்



**தொடக்கக் காலக் கிளர்ச்சியாளர்கள்**

எரிக் ஹாப்ஸ்பாம் தமிழில்: ரகு அந்தோணி




**மார்க்ஸ் : முதலாளியத்துக்கு மாற்று**

கியரென் ஆலென் | தமிழில்: சா.தேவதாஸ்



**ரோசா லக்சம்பர்கும் ஜனநாயக மீட்டுருவாக்கத்துக்கான போராட்டமும்**

ஜான் நிக்ஸன் | தமிழில்: சா.தேவதாஸ்



**சமூகம்சார் கொள்ளையர்கள்**

எரிக் ஹாப்ஸ்பாம் | தமிழில்: ரகு அந்தோணி




**கிராம்ஷியைப் பயன்படுத்துதல் - ஒரு புதிய அணுகுமுறை**

மைக்கேல் ஃபிலிப்பினி இத்தாலிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பேட்ரிக் ஜே.பார் | தமிழில்: சே.கோச்சடை



**பாலியல் முதிர்ச்சிமிக்க கம்யூனிசப் பெண்ணின் தன்வரலாறு**

அலெக்சாண்டிரா கொலந்தாய் | ரஷ்ய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: சல்வேதார் அத்தன்சியோ | தமிழில்: அ.மங்கை



**மார்க்சின் தத்துவம்**

எட்டியேன் பாலிபர் | பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: கிரிஸ் டர்னர் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்



**மார்க்சுக்கு ஆதரவாக**

லூயி அல்தூசர் | பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பென் புரூஸ்டெர் | தமிழில்: க. பூர்ணச்சந்திரன்

**15 நூல்கள்**

**சுமார் 4000 பக்கங்கள்**

**விலை இ.ரூ.5000/-**

**முன் வெளியீட்டுத் திட்டத்தில்**

**இ.ரூ.3000/-**

**மட்டுமே!**

**A5 அளவு, தரமான தாள், அழகிய வடிவமைப்புடன்**

**கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.**

இலங்கையிலுள்ள மார்க்சிய சிந்தனையாளர்கள், வரலாற்றுத்துறை, தத்துவத் துறை, சமூகவியல் துறை மற்றும் மானுடவியல் துறைப் பேராசிரியர்கள், மாணவ - மாணவிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு பெரிதும் பயன்படும் வகையில் தமிழில் 15 மார்க்சிய செவ்வியல் நூல்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன. இந்நூல்களை முன்வெளியீட்டுத் திட்டத்தில் பெற, இலங்கை கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>முகவரி</u>

**பூபாலசிங்கம் புத்தக சாலை,**

**202, செட்டியார் வீதி, கொழும்பு - 011, இலங்கை.**

**E.mail: poobalasingham202@gmail.com |**

**Ph: 011-2422321, 2435713**



# ஆவல் மீதுற்ற படைப்பாளி!

மு.செல்லா

இன்று போல் இருக்கிறது! நண்பர் தோழர் ந.பாண்டுரங்கன் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மதுரை மண்டல மேலாளர் தோழர். அ.கிருஷ்ணமூர்த்தி அவர்களை தனது சிறுகதைத் தொகுப்பு கைப் பிரதியுடன் சந்தித்த நாள். அது 2009 ஆம் ஆண்டின் செப்டம்பர் திங்களின் இரண்டாவது வாரமாக இருக்கலாம்.

“சார்...! ‘பிள்ளைகளின் தோள்கள்’ என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு வெளியிட வேண்டி உங்கள் உதவிக்காக வந்திருக்கிறேன், பார்த்து செய்யுங்க” என்றார். கைப் பிரதிகளை ஒரு புரட்டு புரட்டிய மண்டல மேலாளர், “பாக்குறேன் சார்” என்றவாறு என்னைப் பார்த்தார். நான் “இதில் ஒரு சில கதைகளை படித்துப் பார்த்திருக்கிறேன் நன்றாக வந்திருக்கிறது” என்றேன்.

எனக்குத் தோழர் ந.பாண்டுரங்கனுடன் இருபத்தைந்து ஆண்டு காலம் பழக்கம் உண்டு. எனினும் இடதுசாரிகளின் அல்லது எழுத்தாளர்களின் முகமாகக் கருதப்படும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 79-80 மேலக்கோபுரத்தெரு, மதுரை என்ற முகவரியோடு அவருக்கு ஏற்பட்ட தொடர்பு 2009-ஆண்டு முதல் அவர் மரணமடையும் தருவாய் (2020 சூலை திங்கள் முதல் வாரம்) வரை நீடித்தது. இந்தப் பதினோரு ஆண்டுகாலத் தொடர்பு என்பது வெறும் கால நீட்டிப்பு மட்டுமல்ல; ஒரு அழுத்தமான பிணைப்பும் பந்தமும் ஆகும்.

தோழர் பாண்டுரங்கனுக்குத் திராவிட இயக்கத் தலைவர் பலரோடும் தொடர்பு இருந்தது. தனித்தமிழ் இயக்கங்களின் மீதும் பற்றுக் கொண்டிருந்தார். தனது மூன்று வயதில் தந்தையை இழந்து தாயாரின் கடின உழைப்பால் வளர்ந்து வந்த இவர் மதுரையை மையமாகக் கொண்ட பல்வேறு இயக்கங்களின் தலைவர்களோடு தொடர்பும், பரந்துபட்ட பழக்கங்களும் உள்ளவராகத் திகழ்ந்தார். பொது நூலகத் துறையில் சாதாரண பதிவறை எழுத்தர் பதவியில் சேர்ந்து தனது கடின முயற்சிகளால் மாவட்ட நூலக அலுவலராக உயர்ந்தார். இவரது நூலகத் தொடர்பும், புத்தகக் காதலும் பல்வேறு தலைவர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இயக்கவாதிகளின் தொடர்புகளுக்குக் காரணமாக இருந்தன.

தனது இளமைப் பருவத்திலேயே இடதுசாரி சிந்தனையாளர்களான பேராசிரியர் தி.சு.நடராசன், சந்திரபோஸ், தனுஷ்கோடி இராமசாமி போன்றவர்களுடன் அறிமுகம் இருந்ததினால்; தனது பணி நிறைவுக்குப்பின் கலை இலக்கியப் பெருமன்றத்தின் மதுரை மாவட்ட செயல்பாடுகளில் ஈர்க்கப்பட்டு மாவட்டப் பொருளாளர் பொறுப்பினை ஏற்று செயல்பட்டார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் அவருக்கான புகழிடங்களாகின. எழுத்தின் மீது ந.பாண்டுரங்கனுக்கு தனியாத காதல் இருந்தது. அவர் ஒரு சிறந்த கதை சொல்லி என்பதை அவரது சிறுகதைகளை வாசிக்கும் ஒவ்வொருவரும் எளிதில் உணரலாம்.

2010-இல் ‘பிள்ளைகளின் தோள்கள்’ சிறுகதைத் தொகுப்பு என்சிபிஎச் - வெளியீடாக வெளிவந்தது. 2012-இல் ‘திரும்பி வர மாட்டாயோ’ கவிதைத் தொகுப்பு, 2014-ல் ‘அறியப்படாத மதுரை’’ என்சிபிஎச் - வெளியீடாக வெளிவந்து இவருக்குச் சிறந்த பெயரைப் பெற்றுத் தந்தது. 2015-இல் ‘அறியப்படாத மதுரை கோவில்கள், என்ற தொகுப்பும் 2016-ல் ‘கெண்டைக்கரை வேட்டி’ சிறுகதைத் தொகுப்பும், 2017-இல் ‘விடுதலை வேள்வியில் மதுரை’ வரலாற்று ஆய்வு நூலும், என்சிபிஎச் - வெளியீடுகளாக வெளிவந்தன.


இவரது ‘அறியப்படாத மதுரை’ மாநில அளவில் நல்ல வரவேற்பைப் பெற்றது என்பதுடன், மதுரையைப் பற்றி அறியவும், மதுரை வரலாற்றை ஆய்வு செய்ய விரும்புபவரும் அவசியம் படிக்க வேண்டிய நூலாகும். குறுகிய காலத்தில் ஆறு புத்தகங்களை ஆக்கித் தந்ததுடன், ‘விருதுநகர் வரலாறும் வாழ்வியலும்’, ‘நதியிலாடும் தோணிகள்’ (நாவல்) மற்றும் ‘கட்டைப்பையும் நெகிழி பொம்மையும்‘ ஆகிய மூன்று நூல்களின் ஆக்கத்தை முடித்து அவற்றின் வெளியீட்டுக்காகக் காத்திருந்தார்.

தோழர் ந.பாண்டுரங்கன் உடல் நலக் குறைவினால் 09-07-2020 அன்று மறைந்துவிட்டார். ஆனால், அவரது எழுத்துக்கள் என்றும் மறையாது. அதன் வழியே தொடர்ந்து அவர் நம்மோடு உரையாடிக் கொண்டிருப்பார். ●

நூல் மதிப்புரை

# உதயசங்கரின் நினைவுகளில் ஒரு கை நீரள்ளி...

மயிலம் இளமுருகு




நினைவு என்னும் நீள் நதி,
உதயசங்கர்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
முதல் பதிப்பு - ஜூலை 2013,
ரூ.120/-

எழுத்தாளர் உதயசங்கர் அவர்கள் கவிஞராக, சிறுகதை ஆசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, கட்டுரையாளராக, குழந்தை இலக்கிய எழுத்தாளராக திகழ்ந்து வருகிறார். அவருடைய பல்வேறு படைப்புகள் இலக்கியத்திற்கான விருதுகளைப் பெற்றுள்ளன. மொழிபெயர்ப்பிலும் அவருடைய ஈடுபாட்டையும் அவரது தனித் திறமையையும் காட்டி வருகிறார். அவர் மீடியா வாய்ஸ் என்ற பத்திரிகையில் தொடராக தன்னுடைய நினைவுகளை எழுதினார். அவ்வாறு எழுதியவற்றைத் தொகுத்து நூலாகக் கொடுத்துள்ளார்.

'நினைவு என்னும் நீள் நதி' என்ற இந்த நூலின் அட்டையிலேயே குறிப்புகள் உள்ளன. இன்னும் சில நண்பர்கள், எழுத்தாளர்களைப் பற்றிய குறிப்புகள் என்று இந்தப் புத்தகம் எதைப் பற்றிப் பேசுகிறது என்பதைக் குறித்துள்ளார். தன்னுடைய சிறுவயதில் உடன் படித்த நண்பர்களைப் பற்றியும், தன் மனதிற்குப் பிடித்த ஆதர்சமான தோழமையான மரியாதைக்குரிய எழுத்தாளர்கள் குறித்தும் இந்நூலில் எழுதியுள்ளார். முன்னுரையில் அதற்கான காரணங்களையும் இறுதியாக அமைந்துள்ள வண்ணதாசன் குறித்த கட்டுரை தன்னுடைய வலைப்பூவில் வந்துள்ளதையும் கூறியுள்ளார்.

இந்த நூல் 24 நினைவுகளைப் பேசுவதாக அமைகின்றது. குறிப்பாக தன் நண்பர்களையும் சக எழுத்தாளர்களையும் ஒளிவுமறைவின்றி இயல்பான நடையில் தன் மனதுக்குள் தோன்றிய எண்ணங்களை அப்படியே வாசகர்களுக்கு விருந்தாக எழுதி வைத்துள்ளார். ஒவ்வொரு கட்டுரையும் இயல்பான நடையில் அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி தன் தாத்தா பாட்டி அவர்களுக்கு இடையேயான வாழ்க்கைத் தொடர்பானவற்றையும் தனக்கு நேர்ந்த துன்பங்கள், இலக்கிய வட்டத்தில் தான் சேர்ந்தபோது அடைந்த அனுபவங்கள், தனக்கு உதவி செய்த நண்பர்கள் குறித்தும் மிக சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். தன் பணி அனுபவத்தில் என்ன நடந்தது என்பதையும் மிக நேர்மையாகப் பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள ஒவ்வொரு கட்டுரையின் தலைப்புகளும்

மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. 'வெயில் மழையெனப் பொழியும் நிலவெளியிலிருந்து' என்ற முதல் கட்டுரையில் தன்னுடைய ஊர் குறித்தும் இறுதியில் புதுமைப்பித்தனைப் பற்றியும் சொல்லி வாசகர்களை அக்காலத்திற்கு உடன் அழைத்துச் செல்கிறார். ஆசிரியரின் இயல்பான நடையால் நாம் அவருடன் அவர் வாழ்ந்த உலகத்திற்குச் செல்கிறோம்.

கோவில்பட்டியில் நடந்த அரசியல் குறித்தும் இலக்கிய அரசியல் குறித்தும் அங்கு நடைபெறும் வேலைவாய்ப்பு இன்ன பிறவற்றையும் நம்முன் காட்டுகிறார். 'புரட்சியின் கண்ணீர்' என்ற கட்டுரையில் கந்தசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட புரட்சி என்பவரின் பெயர் வந்த நோக்கம், அவருடன் ஏற்பட்ட நட்பு 'ஜான் ரீடு எழுதிய உலகைக் குலுக்கிய பத்துநாட்கள்' என்ற நூலைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்ட விதங்கள், இறுதியில் புரட்சி வரவே வராதா? என்று கேட்ட புரட்சியின் கேள்விக்கு என்ன பதில் தந்தார் என்பதையும் கட்டுரையில் பதில் அளித்துள்ளார். தனக்குக் கிடைத்த சூழ்நிலையையும் ரயில்வே நிலைய உதவி அதிகாரி என்ற வேலையையும் பதிவு செய்து, அங்கு இருந்த ராமசாமியின் உதவியை இந்தக் கட்டுரையில் அவர் பேசியுள்ளார். விழுப்புரம் கோட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்திலிருக்கும் வேளானந்தல் ரயில்வே ஸ்டேஷனில் அவர் பணி புரிந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த இடத்தில் பணிபுரிந்த அனுபவங்களையும் எழுதியுள்ளார்.

'வெங்காச்சி சொல்லியது' என்ற கட்டுரையில் விடுமுறையில் அவ்வப்போதும் சில நேரங்களில் ஆச்சி வீட்டிற்குச் சென்றவிதத்தினையும் சொல்லியுள்ளார். தன்னுடைய ஊரில் இருந்த வெம்மையையும் நெல்லையில் இருக்கின்ற சூழலாலும் ஆச்சியின் வீட்டுக்குச் செல்வது வழக்கமாக இருந்ததும் எழுதப்பட்டுள்ளது. அங்கே சென்று தாமிரபரணியில் நீராடிய செய்தியையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் இந்தக் கட்டுரையில் நாம் பார்க்க முடிகின்றது. மொழியின் சிறப்பையும் சிறப்பாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

'சின்னப்பாண்டியின் அறம்' பற்றிய நட்பை விரிவாகப் பேசியுள்ளார். கத்திரிக்காய் என்று தனக்குப் பட்டப்பெயர் வைத்து அழைத்ததையும் ஆசிரியர் சொல்லத் தவறவில்லை. இந்தக் கட்டுரையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையேயான உறவினைக் குறிப்பிட்டுள்ளார். படிப்பில் மெதுவாக இருக்கும் சின்னப்பையன் விளையாட்டில் அசுரனாக விளங்கிய சிறப்பினையும் கூறியுள்ளார். பிறகு இலக்கிய நண்பர்கள் வட்டத்தைக் குறித்தும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக நாறும்பூநாதன், முத்துச்சாமி, மந்திரமூர்த்தி, ராமலிங்கம்பிள்ளை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தன் நண்பன் பெட்டிக்கடை வைத்திருந்ததையும் அங்கு சென்று சிகரெட் வேண்டுமென்று கேட்டபோது சின்னப்பாண்டி அடைந்த மன வருத்தத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

'சந்திரனின் காதலிகள்' என்ற கட்டுரையில் இளமைக் காலங்களை மிக சுவாரஸ்யமான நடையோடு எழுதியுள்ளார். தன்னுடன் இருந்த நண்பர்கள் என அனைவரும் ஆளுக்கொரு பெண்ணை விரும்ப வேண்டும் என்ற சூழலையும் குறிப்பிட்டுள்ளார். நண்பர்கள் பலவாறு பேசிக் கொள்கின்றனர். இப்படி இளமைக்காலத்தை நினைவுபடுத்தி எழுதியுள்ளதை அறிய முடிகின்றது. 'கு.அழகிரிசாமியின் ஆவி' இந்தக் கட்டுரையில் குமாரபுரம் ஸ்டேஷனில் நடந்த கதை, நண்பர்கள், இயற்கை நடப்பு, சூழ்நிலை, அமைதி என எல்லாவற்றையும் ஆசிரியர் எழுதியுள்ளார்.

'அப்பா என்றொரு மனிதர்' என்ற கட்டுரையில் அப்பாவின் இயல்பினை மிக நேர்த்தியாகப் பதிவு செய்துள்ளார். அப்பாவின் மீது கொண்ட அன்பு, அப்பாவின் செயல்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும்; ஆசிரியர் வழியில் நாமும் நம் அப்பாக்களை நினைக்க வைப்பதாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது. இது ஒரு சிறுகதையைப் படிக்கின்ற உணர்வினை நமக்குத் தருகின்றது. இயல்பான கட்டுரையாகவும் அமைகின்றது. இதனைப் படிக்கும்போது அவரவரது அப்பா கண்டிப்பாக நினைவுக்கு வருவார் என்பது திண்ணம். 'கந்தசாமியின் கணக்கு' என்ற கட்டுரையில் நண்பர்கள் தேர்வு எழுதுவதற்காகத் திருவனந்தபுரம் செல்கின்றார்கள். தேர்வு எழுதாமல் ஊரைச் சுற்றிவிட்டு திரும்பிச் செல்லும்போது கந்தசாமியிடம் மட்டுமே பணம் இருக்கின்றது. நாகர்கோவிலில் உள்ள திரையரங்கில் உமர்முக்தார் திரைப்படம் ஓடுகின்றது. அப்படத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று நண்பர்கள் முடிவு செய்கின்றனர். கந்தசாமியிடம் பேசி பணத்தை வாங்குகிறார்கள்.

பிறகு ஊருக்கு வந்த பிறகு பணம் தருவோம் என்று நண்பர்கள் சொல்கின்றனர். ஆனால் ஊர்

வந்த பிறகு பணம் கொடுத்தார்களா? இல்லையா? என்பதை இந்தக் கட்டுரை காட்டுகின்றது. பத்தாவது கட்டுரையில் ராக்கையா எம்ஜிஆர் என்பவர், எம்ஜிஆர் மீது எந்த அளவு அன்பு வைத்திருந்தார் என்பதை இவரது எழுத்தின்வழி அறிந்து கொள்கிறோம். எம்ஜிஆர் ரசிகன், பாடம், திருமணம் எனப் பலவற்றை இதன்மூலம் அறியமுடிகின்றது.

'நாகுவின் கோல்' என்ற கட்டுரையின் மூலம் நம்மை இளமைப்பருவத்திற்கு அழைத்துச் செல்கிறார் ஆசிரியர். குறிப்பாக விறகுக்கட்டை வைத்துக்கொண்டு கிரிக்கெட் ஆடிய அனுபவம் எனக்கும் உண்டு. அந்த அனுபவத்தை இங்கு நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடிகின்றது. முதன்முதலில் உண்மையான ஹாக்கிபேட்டை எடுத்துக்கொண்டு சென்ற விதத்தினை அறிகின்றோம். தன் தந்தை துரைராஜ் குடும்பத்தில் வேலை செய்ததையும் குறிப்பிட்டுள்ளார். துரைராஜ் அவரது பணி, தன்னுடைய விளையாட்டு, ஹாக்கி மீது கொண்ட ஈடுபாடு போன்றவற்றையும் குப்புசாமி நாயுடு அகில இந்திய ஹாக்கி மைதானம் தோன்றிய விதத்தையும் இந்தக் கட்டுரை குறிப்பிட்டுள்ளது. நாகுவின் கோலால் இவருடைய ஹாக்கி சிறுவர் அணி வெற்றி பெற்றதையும், அதை வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது என்பதையும் இந்த இடத்தில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

'கவாஸ்கரின் ஸ்கொயர்கட்டும் கண்ணனின் காதலும்' என்ற கட்டுரையில், கல்லூரியில் நண்பன் கண்ணன் நளினா மீது காதல்கொண்டு இருக்கின்றார். கிரிக்கெட் விளையாட்டு, பரிசு, பாராட்டு என்பவற்றைக் கண்ணன் பெறுகின்றார். நளினா வீடு அருகிலிருக்கும் சுந்தரேசனின் வீட்டிற்குச் செல்கிறார். அந்தப் பெண் மீது ஆசைப்படுகின்றார். கிரிக்கெட் விளையாடுகின்றார். அதற்காக கண்ணன் கவாஸ்கர் ஸ்கொயர்கட் எல்லாம் செய்கின்றார். இறுதியில் அந்தப் பெண் அவர்கள் குடியிருந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வேறுஇடம் செல்கிறார் என்ற செய்தி கேட்டு வருத்தப்படுகிறார். இப்படித் தன் இளமைக்காலக் கல்லூரி வாழ்க்கையை 'கவாஸ்கரின் ஸ்கொயர் கட்டும் கண்ணனின் காதலும்' என்ற கட்டுரையில் சிறப்பாக எழுதியுள்ளார்.

'பரியும் நரியும்' என்ற கட்டுரையில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நகைச்சுவையோடு எழுதியுள்ளார். ரயில்வேயில் வாடிக்கையாளர்கள் சில பொருட்களைப் பார்சல் செய்து அனுப்புவார்கள். அப்படியே ஒருவர் போமரியன் நாயை அனுப்பினார். ஆனால் பெட்டியில் தெருநாய் இருந்ததையும் குறிப்பிட்டுள்ளார். தன் நண்பன் தன்மீது வைத்திருந்த அன்பையும் புலியையும் பார்சல் செய்ய வந்த செய்தியையும் இந்தக் கட்டுரையில் அறிய முடிகின்றது. 'அன்பின் பேராற்றில்' என்ற கட்டுரையில் இலக்கிய நண்பர்களான பவா, கருணா என்பவர்களின் அறிமுகத்தையும் அவருக்கு அவர்கள் செய்த அன்பினையும் மரியாதையும் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். இது ஆசிரியரின் நன்றி மறவா பண்பினைக் காட்டுகின்றது. மேலும் பதவி உயர்வு பெற்ற காரணத்தாலேயே அங்கிருந்து விருத்தாச்சலம் செல்ல நேர்ந்ததையும் அறிந்துகொள்ள முடிகின்றது. மிகச் சிறந்த ஒரு கட்டுரையாக இந்தக் கட்டுரையை நாம் பார்க்க முடிகின்றது.

'இன்னும் மீதமிருக்கும் கிராமியப்பாடல்' என்ற கட்டுரையில் திருச்சி எழுத்தாளர்கள் பற்றியும் பயிற்சி பற்றியும் அறியமுடிகின்றது. நண்பர்களின் தொடர்புகள் குறித்தும் நூல் குறித்தும் அவர்களுக்கும் தனக்குமான அன்பு, உறவு குறித்தும் இதன்வழி நாம் அறிகின்றோம். 'என் தோழர் மாமா சக்தி பயில்வான்' என்ற கட்டுரையில் தன் அப்பாவின் நண்பரான சக்தி பயில்வான் குறித்த பதிவினை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். செங்கொடி ஊர்வலம், சமூகப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தவிதம் எனப் பலவற்றை ஆசிரியரின் ஆற்றொழுக்கான நடையின்வழி அறிகின்றோம். நண்பர்களின் சிந்தனைகளையும், தன் இளமைக்காலம் குறித்தும் சமூகப் பாதுகாப்பு போன்றவற்றையும் இதன் மூலம் அறிகின்றோம்.

'என்றும் இளைஞன் எங்கள் கலைஞன் பால்ராமசுப்பு' என்ற கட்டுரை நாடகக்காரரான ராமசுப்புவின் வாழ்க்கை, செயல்பாடு, முரண்பாடு என்பதையும் விளக்கியுள்ளார். தன்னுடைய பணி மூத்த எழுத்தாளருடன் இருந்த தொடர்பு என்பன பற்றியும் தெளிவாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார். ஒளிவுமறைவற்ற வாழ்க்கையை எழுதியுள்ளார். 'என் பெரியப்பா புதுமைப்பித்தன்' என்ற கட்டுரையில் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் குறித்தும் இறுதியில் தமிழ்ச்சமூகத்திற்குத் திரைப்படப் பாடலாசிரியர் புலமைப்பித்தனைத் தெரிந்த அளவிற்குப் புதுமைப்பித்தனைத் தெரியவில்லையே என்று வருத்தப்படுகின்ற சூழ்நிலையை நாம்

பார்க்க முடிகின்றது. தன்னுள் புதுமைப்பித்தன் ஏற்படுத்திய மாற்றங்களை இந்தக் கட்டுரையில் எழுத்தாளர் பதிவு செய்துள்ளார்.

'காலத்தின் கலைஞன் சாதத் ஹசன் மண்ட்டோ' என்ற கட்டுரையில் அவரது வாழ்க்கை, படைப்பு, விமர்சனம், நூல் குறித்தும் மிக விரிவாக விளக்கமாக எழுதியுள்ளார். மண்ட்டோவின் கதாப்பாத்திரங்கள், இறுதிக்காலம், அவர்காலச்சூழல் என்பனவற்றைத் தனக்கே உரிய பாணியில் சிறப்பாக எழுதியுள்ளார். 'கனிவின் சிகரம் கமலாலயன்' எனக்கு மிகவும் பிடித்த நண்பராகவும், தோழமை என்ற வார்த்தைக்கு இலக்கணமாகவும் தன்னுடைய இன்ப துன்பங்களைப் பேசுகின்ற ஒரு முக்கியமான நண்பராகவும் எழுத்தாளர் கமலாலயன் இருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். அவரின் வாழ்க்கைப் போராட்டங்கள், இலக்கியத்தோடு இணக்கமாக இருக்கின்ற சூழ்நிலைகளையும் அவரது படைப்புமொழி, வேறுபணி போன்றவற்றைக் குறித்தும் விரிவாக எழுதியுள்ளார்.

இயக்கத்தில் இணைந்து போராடிய காரணத்தாலேயே அவர் பணியிலிருந்து வெளியேறிய சூழ்நிலையையும், பிறகு அறிவொளி இயக்கம் முதலான பணிகளில் பணிபுரிந்தவிதத்தையும் ஆசிரியர் விளக்கியுள்ளார். "எதுக்கு உதயசங்கர் கவலைப்படறீங்க. நாம செய்யறத செய்ஞ் சுகிட்டே இருப்பம்... எல்லாத்தையும் காலம் பாத்துக்கிடும்..." அதுதான் கமலாலயன். என் அருமைத் தோழர் கமலாலயன்... என்று சொல்கின்ற அந்த வார்த்தைகள் இருவருக்கும் இடையேயான உறவைக் காட்டுவதாக இருக்கின்றது. 'பாஞ் சனின் சிரிப்பு' என்ற கட்டுரையில் ஆசிரியர் தன் இளமைக்கால நினைவுகளை அசைபோட்டுள்ளார். பெற்றோர், நண்பர்கள் கிண்டல், நட்பு அவரோடு ஊர் சுற்றியவிதம் எனப் பலவற்றை நாம் அறிகின்றோம். பாஞ்சனின் அம்மா இறந்தபோது அவர் அடைந்த வருத்தம் எனப் பலவற்றை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். பாஞ்சன் எப்போதும் சிரித்துக்கொண்டே இருந்த இயல்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'கரிசக்காட்டின் தனித்துவமிக்க கலைஞன் பூமணி' என்ற கட்டுரையில் பூமணியினுடைய வேலை, அவரது படைப்பு, பிறகு, வெக்கை எனும் நாவல் குறித்து மிக விரிவாக எழுதியுள்ளார். அவரை எழுதத் தூண்டிய விதத்தையும் தான் கொடுத்த கையெழுத்துப்பிரதி மற்றும் அதற்காக அவர் பெற்ற அறிவுரை, பகுத்தறிவு என ஆசிரியர் இங்கே பலவற்றைப் பதிவு செய்துள்ளார். 'என் மலையாள ஆசான் டி.என்.வி.' என்ற கட்டுரையில் தன்னுடன் பணிசெய்த தன் மூத்த நண்பரான வெங்கடேஸ்வரன் குறித்தும் அவர் வாழ்க்கை வரலாறு, பணி, இயக்கம், இலக்கிய படைப்பின்மீது கொண்ட ஆர்வம் போன்றவற்றையும் பதிவு செய்துள்ளார். மலையாள மொழி கற்றுக்கொள்ள உதவி செய்தமையும், தனக்கு ஆசானாக விளங்கிய கதையையும் குறிப்பிட்டுள்ளார். இன்றைக்கு மலையாளத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்கின்ற அளவிற்குத் தான் வளர்ந்துள்ளமைக்குக் காரணம் என்றும்கூறி தன் நன்றி மறவா பண்பினை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். நேர்மையான முறையில் டிஎன்வி என்பவரை நமக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

நூலின் கடைசி கட்டுரையான 'மனதை வசப்படுத்தும் கவிஞன் வண்ணதாசன்' என்னும் கட்டுரையில் வண்ணதாசனுடைய எழுத்துநடை அவரது படைப்பு அவருக்கும் இவருக்குமான நட்பு, உற்சாகம் தந்த வார்த்தைகள் எனப் பலவற்றை பதிவு செய்துள்ளார். இயல்பான நடையில் வண்ணதாசனுடைய கதாபாத்திரங்கள் அவருடைய நாடகத்தில் பயன்படுத்திய பெயர்கள் எனப் பலவற்றை நாம் அறிகின்றோம். அவருடனான நட்பு எப்படிப்பட்டது என்பதையும் அறிகின்றோம். உற்சாகம் தந்த வார்த்தையையும் ஆசிரியர் எழுதியுள்ளார்.

'எப்போதெல்லாம் வண்ணதாசனை வாசிக்கிறேனோ, எப்போதெல்லாம் அவரைப் பற்றிப் பேசவோ, எழுதவோ செய்கிறேனோ அப்போதெல்லாம் திருநெல்வேலியின் ஸ்பரிசம் என் மனதை வருடும். தாமிரபரணியின் தாமிரவாசம் என் உடலில் தோன்றும். மீண்டும் என் பால்யகாலம் தன் வண்ணங்களின் விகசிப்பை எனக்குள் ஏற்படுத்தும்.' என்பதின் மூலம் இங்கே நாம் இவருக்கும் அவருக்குமான அன்பினையும் தெரிந்துகொள்ள முடிகின்றது. தனக்குள் இருந்த நினைவினை ஒரு கை அள்ளி இந்த நூலில் உதயசங்கர் வாசகர்களுக்கு விருந்து வைத்துள்ளார். மிக அழகான எளிய நடையில் அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் அவர் எழுத்தின் அனுபவத்தையும் அவரது வாழ்வில் நேர்ந்த எதிர்பாராத முடிச்சுகளையும் சொல்வதாக இந்தக் கட்டுரை நூல் அமைந்துள்ளது. எழுத்தாளருக்கும் என்.சி.பி.எச் பதிப்பகத்தார்க்கும் வாழ்த்துகள். எழுத்தாளரின் நினைவு இன்னும் தொடரட்டும் என்று வாழ்த்துவோம்.

●



“மொழிபெயர்ப்பாளர்களை குறிப்பாக ரா.கிருஷ்ணய்யா, தொ.மு.சி.ரகுநாதன், பாஸ்கரன், சோமசுந்தரம் ஆர்.கே.கண்ணன், நா.தர்மராஜன், நா.முகமது சரீப், ஆகிய தோழர்களை மாஸ்கோவிற்கு அனுப்பிவைத்து சிறந்த தமிழ் நூல்கள் வெளிவரத் திட்டமிட்டதில் அவருக்கு முக்கியப் பங்கு உண்டு.”

# தோழர் யு.எம். உசேன்

**ஆர்.துரைசாமி**

*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் முன்னாள் செயலாளரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலக் குழு உறுப்பினருமான, தோழர் யு.எம்.உசேன் அவர்கள் 1.8.2020 அன்று மாலை 3 மணி அளவில் சென்னை ஓமந்தூரார் அரசினர் மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 85.*

தோழர் யு.எம்.உசேன் அவர்கள் இளம் வயதில் நூல்களைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களோடு தொடர்பு ஏற்பட்ட பின்னர் சென்னை மாவட்ட கட்சியோடு இணைந்து செயல்பட்டவர். பின்னர் தோழர் "பி எஸ் ஆர்" அவர்கள் என்சிபிஎச் பொறுப்பாளராக இருந்தபோது இவர் விற்பனையாளராகப் பணியில் சேர்ந்தார். தொடர்ந்து தனது கடுமையான முயற்சியால் தமிழ்நாடு முழுவதும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மூலம் சோவியத் நூல்களை மக்களிடம் கொண்டு சென்றதில் இவருக்கு மிகப் பெரும் பங்கு உண்டு.

தோழர் ஆர். ராதாகிருஷ்ணமூர்த்தி அவர்களுடன் இணைந்து செயல்பட்டவர். தமிழ்நாடு மட்டுமல்லாது ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் சோவியத் புத்தகக் கண்காட்சி நடத்தி அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார். படிப்படியாக கிளை நிர்வாகியாகவும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் உதவி செயலாளராகவும், நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ் நிர்வாகியாகவும் திறம்பட செயல்பட்டவர்.

மாஸ்கோவில் நடைபெற்ற உலக புத்தகக் காட்சியில் பலமுறை பங்கு பெற்றுள்ளார். மாஸ்கோ செல்லும்போது தோழர் எம்.வி.சுந்தரம் அவர்களும் தோழர் ராதாகிருஷ்ணமூர்த்தி அவர்களும் யு.எம்.உசேன் ஆகியோர் சோவியத் பதிப்பகங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு சோவியத் புத்தகங்களை தமிழில் மொழி பெயர்த்து கொண்டு வர ஏற்பாடு செய்தனர். குறிப்பாக முன்னேற்றப் பதிப்பகம், ராதுகா பதிப்பகம், ஆகியவற்றின் மூலம் பல நூல்கள் தமிழிலே கிடைத்தன.

மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் நூல்கள் சமூக அரசியல் நூல்கள், டால்ஸ்டாய், தஸ்தயேவ்ஸ்கி, மாக்சிம் கார்க்கி மற்றும் பல இலக்கிய ஆளுமைகளின் நூல்கள் பெருமளவில் தமிழில் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நாடு முழுவதும் சோவியத் புத்தகக் கண்காட்சி உத்திரப்பிரதேசம், பீகார், அந்தமான் தீவுகள் உட்பட பல மாநிலங்களில் கண்காட்சிகள் தொடர்ச்சியாக நடைபெற மூளையாக இருந்து செயல்பட்டவர் தோழர் உசேன்.

தமிழ்நாட்டில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் அனைத்து கிராமங்களுக்கும், புத்தகங்களைக் கொண்டு செல்ல ஏதுவாக நியூ செஞ்சுரி நடமாடும் புத்தக நிலையத்தை துவக்க முன்முயற்சி எடுத்தவர்.

பதிப்பகத் துறையில் மிகப்பெரிய உச்சத்தை எட்டும் அளவுக்கு "தமிழில் முடியும்" என்ற நா.வானமாமலை அவர்களின் நூல் வெளியிடப்பட்டது. தமிழில் நியூ செஞ்சுரியின் அறிவியல், தொழில்நுட்பம், கதைகள் கவிதைகள் கட்டுரைகள் உட்பட பல துறைகளில் நூல்கள் வெளியிடப்பட்டன மர்ரே வெளியிட்ட சங்க இலக்கிய நூல்களை மீள் பதிப்பு செய்தது இவர் காலத்தில்தான்.

தோழர் ஜெயகாந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு; தோழர் அறந்தை நாராயணன் அவர்களையும் இணைத்து "கல்பனா" என்ற மாத இதழை வெளிக்கொணர முயற்சி எடுத்தவர். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அம்பத்தூர் எஸ்டேட் நிலங்கள், கட்டடங்கள், மதுரையில் புதிய ஷோரூம் கட்டுவதற்கான செயல், ஜானி ஜான் கான் ரோட்டில் உள்ள பாவை அச்சகம், நியூ செஞ்சுரி பள்ளி, நியூ செஞ்சுரி மருத்துவமனை ஆகியவற்றை உருவாக்குவதற்கு தோழர் ராதாகிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்படுத்தியவர் தோழர் உசேன் என்றால் மிகையல்ல.

முற்போக்கு எழுத்தாளர்களை ஊக்குவித்து புதிய புதிய எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டதில் அவருக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. மொழிபெயர்ப்பாளர்களை குறிப்பாக ரா.கிருஷ்ணய்யா, தொ.மு சி.ரகுநாதன், பாஸ்கரன், சோமசுந்தரம், ஆர்.கே கண்ணன், நா.தர்மராஜன், நா.முகமது சரீப் ஆகிய தோழர்களை மாஸ்கோவிற்கு அனுப்பிவைத்து சிறந்த தமிழ் நூல்கள் வெளிவரத் திட்டமிட்டதில் அவருக்கு முக்கியப் பங்கு உண்டு.

கார்ல் மார்க்ஸ் அவர்களின் ‘மூலதனம்’ நூல் தோழர் தியாகு அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு தோழர் கிருஷ்ணன் அவர்கள் சரிபார்த்து சோவியத் யூனியனில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் கால மாற்றத்தால் அன்று அது நடைபெறவில்லை. அவருக்குப் பின்னால் வந்த தோழர்கள் முயற்சியால் என்சிபிஎச் மூலம் தமிழில் ஐந்து பாகங்களாக வெளியிடப்பட்டது.

1990களில் சோவியத் பத்திரிகைகளின் கலைவிழா சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது அதை முன்னின்று வழி நடத்தியவர் தோழர் உசேன் அவர்களே.

நியூ செஞ்சுரியின் வரலாற்றில் பல்வேறு சாதனைகளை செய்த தோழர் யு.எம்.உசேன் அவர்கள் இன்று நம்மோடு இல்லை. ஆனால் அவர் செய்த செயல்கள், குறிப்பாக கட்சித் தலைமையுடனும், பணிபுரிகின்ற தோழர்களோடும், இணக்கமாக பேசி, செயல்பட்டு, நியூ செஞ்சுரியின் நிறுவனத்தை உயர்த்தியவர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் என்றால் மிகையல்ல.

அப்பேர்ப்பட்ட மிகப்பெரிய ஆளுமையை நாம் இழந்திருக்கிறோம். அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், நேசிக்கின்ற அனைத்து தோழமைகளுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

●

# உ.வே.சாமிநாதையர் ஆக்கங்கள் அச்சுருவான அச்சகங்கள்

முனைவர் இரா. வெங்கடேசன்



உ

கணபதிதுணை.

திருக்கைலாயபரம்பரை,

திருவாவடுதுறையாதீனத்தைச்சேர்ந்த

செவந்திபுரத்தில்

ஷை ஆதீனம்பெரியகாறுபாறு

வேணுவனலிங்கசுவாமிகள்

இயற்றுவித்த

சுப்பிரமணியதேசிகவிலாசச்

சிறப்பு.

ஷை திருவாவடுதுறையில்

ஷை சுவாமிகளியற்றுவித்த

கொலுமண்டபமென்னும்

வேணுவனலிங்கவிலாசச்சிறப்பு.

இவை

பலவித்வான்களாற்பாடப்பட்டு

ஷை ஆதீன அடியார்குழாங்களிலொருவராகிய

ஆறுமுகச்சுவாமிகளாலும்

ஷை திருவாவடுதுறை

வேங்கடசுப்ப ஐயரவர்கள் புத்திரராகிய


சாமிநாத ஐயரவர்களாலும்

பார்வையிடப்பட்டு,

திருநெல்வேலி

முத்தமிழாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்குடந்தைப்புராணம்.

திருக்கைலாயபரம்பரை

திருவாவடுதுறை

திரிசிரபுரம்,

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால்

செய்யப்பட்டது.

இஃது,

ஷை ஆதீனத்து

ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி,

ஷை கும்பகோணங்காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்,

சாமிநாத ஐயராலும்,

திரிசிரபுரம்

சி. தியாகராஜசெட்டியாராலும்

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

(1878 திருநெல்வேலி, முத்தமிழாகர அச்சுக்கூடம், 1883 சென்னை, மிமோரியல் அச்சுக்கூடம்)

இளம் வயதில் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் பாடம் கேட்டிருந்த காலத்தில் உ.வே. சாமிநாதையருக்கு அச்சுநூல்கள் மீதிருந்த பார்வை என்ன என்பதைக் கீழ்வரும் குறிப்புப் புலப்படுத்துகின்றது.

> அவ்வப்போது படித்து வந்த நூல்களில் திருக்குறளும் ஒன்று. திருக்குறளை எப்போதும் கையில் வைத்துப் படிக்க வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. ரெட்டியாரிடம் இருந்த புஸ்தகத்தைப் படித்து வந்தேன். எனக்குச் சொந்தமாக ஒரு புஸ்தகமிருந்தால் எங்கே போனாலும் வைத்துக்கொண்டு படிக்கலாம் என்று நினைத்தேன். அச்சுப் புஸ்தகத்தைத் தேடிச் சென்று பணம் கொடுத்து வாங்க இயலாதவனாக இருந்தேன் (என் சரித்திரம், ப. 148).

அச்சு நூலைத் தேடிச் சென்று பணம் கொடுத்து வாங்கிப் படிக்க முடியாத நிலையிலிருந்த சாமிநாதையர்தான் பின்னாளில் பழந்தமிழ் நூல்கள் பலவற்றை ஊர் ஊராகத் தேடிச்சென்று

பேருழைப்பைச் செலுத்தி அச்சிட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்த்தார் என்பது நினைவுகொள்ளத்தக்கது. திருவாவடுதுறை மடத்தில் வித்துவானாக இருந்த காலத்தில்தான் சாமிநாதையருக்கு அச்சகத்துடனான தொடர்பு ஏற்பட்டிருக்கிறது.

திருவாவடுதுறை மடத்தில் வித்துவானாக இருந்து விளங்கிய ஒரு காலப்பகுதியில் மடத்தின் ஆதீன கர்த்தராக இருந்து விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் பல ஊர்களுக்கு யாத்திரை செல்லும் சூழல் ஏற்பட்டிருந்தது. யாத்திரையின் இடையில் ஒருநாள், பாண்டி நாட்டை ஆண்டுவந்த நாயக்க மன்னர்களின் அதிகாரியாக இருந்த செவந்தியப்ப நாயக்கரென்பவரால் திருவாவடுதுறை மடத்திற்குத் தானமாக விடப்பட்ட கிராமங்கள் எட்டுள் ஒன்றான செவந்திபுரத்திற்கு வந்து, அங்குள்ள திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான மடத்தில் தேசிகர் தங்கியிருக்கிறார்.

செவந்திபுர மடத்தில் அப்போது வித்துவானாக இருந்து விளங்கிய வேணுவனலிங்கத் தம்பிரான் என்பவர் 'சுப்பிரமணிய தேசிக விலாசம்' என்ற பெயரில் மடாலயம் ஒன்றை அப்போது அங்குக் கட்டி முடித்திருந்தார். வேணுவனலிங்கத் தம்பிரான், அவ்விலாசத்தில் சுப்பிரமணிய தேசிகருடைய திருவுருவம் ஒன்றை அமைத்துப் பிரதிஷ்டை செய்து பூசை செய்யும்படி ஏற்பாடும் செய்திருந்தார். செவந்திபுரத்திற்கு வந்திருந்த தேசிகர் அங்குக் கட்டிமுடிக்கப்பட்டிருந்த 'சுப்பிரமணிய தேசிக விலாச'த்தைத் திறந்துவைத்துச் சிறப்பித்திருக்கிறார். சுப்பிரமணிய தேசிகர் அங்கு வருகைபுரிவதையொட்டி மடாலயத்தைச் சிறப்பித்து வித்துவான்கள் பலர் செய்யுட்களை இயற்றியிருந்தனர். அச்செய்யுட்கள் அனைத்தும் அங்கு வந்திருந்த சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. தேசிகருடன் யாத்திரை வந்திருந்த சாமிநாதையர்தான் செய்யுட்களையெல்லாம் தேசிகர் முன்னிலையில் படித்து அரங்கேற்றியிருக்கிறார்.

ஆறுமுக சுவாமிகள், சாமிநாதையர் இருவரும் இணைந்து அந்தச் செய்யுட்களையெல்லாம் தொகுத்துத் திருநெல்வேலி முத்தமிழாகர அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். ஆதீனம் பெரியகாறுபாறு வேணுவனலிங்க சுவாமிகள் இயற்றுவித்த சுப்பிரமணிய தேசிக விலாசச் சிறப்பு, வேணுவனலிங்க விலாசச் சிறப்பு எனும் பெயரில் அந்நூல் 1878இல் வெளியிடப்பட்டது. சாமிநாதையருக்கு அப்போது வயது 23. அது முதல் தம் இறுதிக்காலம் வரையில் பல அச்சகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் சாமிநாதையர். முதல் அச்சுப் பதிப்பு அனுபவம் குறித்துப் பின்னாளில் இப்படி எழுதி மகிழ்ந்தார் உ.வே. சாமிநாதையர்.

> 'சுப்பிரமணிய தேசிக விலாசம்' எனும் மடாலயத்தைப் பற்றி பலர் பாடிய பாடல்களையெல்லாம் அச்சிட வேண்டுமென்று வேணுவனலிங்கத் தம்பிரான் விரும்பினார். அப்படியே செய்ய ஏற்பாடு நடைபெற்றபோது திருவாவடுதுறையில் உள்ள வேணுவனலிங்க விலாசத்தைச் சிறப்பித்த செய்யுட்களையும் சேர்த்து வெளியிடலாமென்று பலர் கூறினர். அவ்வாறே அவ்விரண்டுவகைப் பாடல்களும் வேறு சில பாடல்களும் சேர்த்துத் திருநெல்வேலி முத்தமிழாகரமென்னும் அச்சுக் கூடத்தில் ஒரு புஸ்தகமாகப் பதிப்பிக்க பெற்றன. அந்தப் புஸ்தகத்தைப் ஒழுங்குபடுத்தி எழுதிக் கொடுத்தவன் நானே. பிற்காலத்தில் எவ்வளவோ புஸ்தகங்களைப் பரிசோதித்து வெளியிடும் வேலையில் ஈடுபட்ட நான், முதன் முதலாகப் பதிப்பித்தது அந்தப் பாடல் திரட்டே. அக்காலத்தில் பதிப்புமுறை சிறிதும் எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் பரிசோதித்து வெளியிட்ட முதல் புஸ்தகமென்ற நினைவினால் அதனிடத்தில் எனக்கு ஒரு தனி மதிப்பு இருந்து வருகிறது........அந்தப் புஸ்தகம் அச்சிட்டு வந்த காலத்தில் நானும் பிறரும் அதை வைத்து அழகு பார்த்துக் கொண்டேயிருந்தோம். சம்பிரதாயத்திற்காக ஆறுமுகத் தம்பிரான் பெயரையும் சேர்த்துப் பதிப்பித்திருந்தாலும் அவர் என்னிடமே ஒப்பித்துவிட்டமையால் நான்தான் முற்றும் கவனித்துப் பார்த்தவன். ஆதலின் எனக்கு அப்புஸ்தகத்தைப் பார்த்தபோதெல்லாம் ஆனந்தம் பொங்கியது (என் சரித்திரம், பக். 449-451).

வேணுவனலிங்க விலாசச் சிறப்பு அச்சுப் பதிப்பு வெளிவந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சாமிநாதையருக்குக் கும்பகோணம் கல்லூரியில் தமிழ் ஆசிரியர் பணி வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

தியாகராச செட்டியாரால் ஏற்பட்ட பணி வாய்ப்புடன், சேலம் இராமசாமி முதலியாரால் சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கும் வாய்ப்பும்

சாமிநாதையருக்குக் கிடைக்கப்பெற்றது. சீவகசிந்தாமணி பதிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய திருக்குடந்தைப் புராணத்தைத் தியாகராச செட்டியாருடன் இணைந்து அச்சிட்டு வெளியிடும் பணியைச் சாமிநாதையர் செய்திருக்கிறார். 1883இல் செட்டியாருடன் இணைந்து திருக்குடந்தைப் புராணத்தை அச்சிட்டு வெளியிட்டார். சென்னையிலிருந்த மெமோரியல் அச்சுக்கூடத்தில் அந்நூல் அச்சாகியது.

அதன் பின்னர், சாமிநாதையரவர்களின் ஏழாண்டுகால உழைப்பின் பலனாக 1887இல் சீவகசிந்தாமணி மூலமும், நச்சினார்க்கினியர் உரையும் அச்சுருவாகி வெளிவந்தது. சென்னையிலிருந்த த. கோவிந்த ஆசாரியாரது திராவிடரத்நாகர அச்சுக்கூடத்தில் சிந்தாமணி அச்சிடப்பட்டது. இந்த அச்சுக்கூடத்தில் 1888இல் கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது நூலின் முதல் பதிப்பையும், 1889இல் பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும் முதல் பதிப்பையும் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்.

மிகப் பெரியதும், மிகப் பழமையதுமான சீவகசிந்தாமணியை அச்சிடுவதற்குச் சாமிநாதையர் சந்தித்த சவால்கள் பலவாகும். சிந்தாமணி அச்சுப் பதிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் வேண்டிய பொருள் வசதியுமின்றி, அதைத் திரட்டுவதற்குரிய வழியும் அறியாது சாமிநாதையர் எத்தனைத் துன்பப்பட்டுள்ளார் என்பதை என் சரித்திரத்தில் உள்ள ஒரு குறிப்பு புலப்படுத்துகிறது.

> சிந்தாமணியைச் சேர்ந்த முகவுரை, கதைச் சுருக்கம் முதலியன அச்சிட்டு நிறைவேறின. அச்சுக்கூடத்தில் புத்தகத்தைப் பைண்டு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு இல்லை. விசாரித்ததில் முருகேசமுதலியார் என்பவர் திறமை உடையவரென்றும் நாணயமாக நடப்பவரென்றும் தெரிந்தமையால் அச்சிட்ட பாரங்களையெல்லாம் அவரிடம் அச்சுக்கூடத்தாரைக் கொண்டு ஒப்பிக்க நினைத்தேன். அச்சுக்கூடத்திற்கு அப்போது பணம் கொடுக்க வேண்டியிருந்தது. அதைக் கொடுத்துவிட்டே பாரங்களைப் பைண்டரிடம் ஒப்பிக்கச் செய்வதுதான் நலம் என்று தெரிந்தது. ஆனால், கையிற் பணமில்லாமையால் திருவல்லிக்கேணி சென்று, என் நண்பரும் நார்ட்டன் துரை குமாஸ்தாவுமான விசுவநாத சாஸ்திரிகளைக் கண்டு ரூபாய் முந்நூறு கடனாக வேண்டுமென்றும் சில வாரங்களில் வட்டியுடன் செலுத்தி விடுவேன் என்றும் விஷயத்தைச் சொல்லித் தெரிவித்தேன். அவர் அங்ஙனமே அந்தத் தொகையைக் கொடுத்து உதவினார். உடனே அச்சுக்கூடத் தலைவருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தேன். அவர் அச்சிட்ட பாரங்களையெல்லாம் பைண்டரிடம் ஒப்பித்து விட்டார்... அன்று சனிக்கிழமையாதலால் திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதிப் பெருமாள் தரிசனம் செய்து கொண்டு ஜாகைக்குப்போய் மனக்கவலையின்றித் துயின்றேன்... அச்சிட்ட சிந்தாமணிப்பிரதிகள் ஐந்நூறு. அவற்றிலும் ஏறக்குறைய நூறு பிரதிகள் அச்சுக்கூடத்தாருடைய கவனக்குறைவால் வீணாகிவிட்டன... மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பைண்டர் மாதிரிக்காக ஒரு பிரதியைப் பைண்டு செய்து கொடுத்தார். அதைக் கையில் எடுத்துக்கொண்டு இராமசுவாமி முதலியாரிடம் சென்றேன்... அவரிடம் புஸ்தகத்தைக் காட்டினபோது அவர் அடைந்த ஆனந்தம் இவ்வளவென்று சொல்லி முடியாது. "பெரிய காரியத்தை மேற்கொண்டு நிறைவேற்றி விட்டீர்கள். இனி, சிலப்பதிகாரம் முதலியவற்றையும் இப்படியே அச்சிட்டுப் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று சொன்னார்... "எல்லாம் செய்யலாம், எல்லாவற்றிற்கும் பணம் வேண்டியிருக்கிறதே, அதற்கு நான் எங்கே போவேன்! நேற்று நான் விசுவநாத சாஸ்திரிகளிடம் முந்நூறு ரூபாய் கடன் வாங்கிச் சிந்தாமணிப் பிரதிகளை அச்சுக்கூடத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது" என்று முதல் நாள் நிகழ்ச்சிகளை விரிவாகச் சொன்னேன்....முதலியார் மிகவும் வருந்தி, "கையொப்பமிட்ட கனவான்களிடம் கொடுக்க வேண்டிய பணத்தைக் கேட்டால் கொடுப்பார்கள். அதை வாங்கிக் கடனுக்கு ஈடுசெய்து விடலாமே" என்றார் (என் சரித்திரம், பக். 614-615).

இராமசாமி முதலியார், பூண்டி அரங்கநாத முதலியாரைச் சென்று சந்தியுங்கள்; அவர் வேண்டிய வசதியைச் செய்து தருவார் என்று கூறவே, பைண்டான ஒரு சிந்தாமணி அச்சுப்புத்தகத்தை எடுத்துக்கொண்டு முதலியாரைச் சந்திக்கச் சாமிநாதையர் சென்றிருக்கிறார். வேறொரு

முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்த அரங்கநாத முதலியார் இன்று சந்திக்க நேரமில்லை; நாளை வந்தால் சந்திக்கலாம் என்று சொல்லிவிடவே, சந்திக்கமுடியாத வேதனையோடு திரும்பிவந்து, நடந்தவற்றை இராமசாமி முதலியாரிடம் விவரித்துச் சொல்லிவிட்டு கும்பகோணம் சென்றடைந்திருக்கிறார். சாமிநாதையர் கும்பகோணம் சென்றடைந்த ஒரு வாரத்துக்குள் அச்சான சிந்தாமணி பிரதிகள் அவருக்கு சென்று சேர்ந்துள்ளன.

சாமிநாதையரின் வரலாற்றையும், அவர் அச்சிட்டு வெளியிட்ட நூல்களின் முகவுரைகளையும், எழுதி வெளியிட்ட கட்டுரைகளையும் படித்தாராய்ந்து பார்க்கையில் அச்சகத்தோடு அவருக்கிருந்த தொடர்புகள் புலப்படுகின்றன.

ஒருசமயம், திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர், சாமிநாதையர் நூல்களை அச்சிடுவதற்குப் பல அச்சகங்களுக்குச் சென்று தொல்லைப்பட்டு வருவதை அறிந்து சாமிநாதையருக்கு அச்சக வகையில் ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று கருதியிருக்கிறார்.

ஒருமுறை சாமிநாதையர் திருவாவடுதுறைக்குச் சென்றிருந்தபோது சொந்தமாக அச்சகம் வைத்துக்கொள்ள உதவியாக மடத்திலிருந்தும் வேறு நண்பர்களிடத்திலிருந்தும் சேர்த்து ரூபாய் ஐந்தாயிரத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார். தேசிகரின் அன்பை உணர்ந்துகொண்ட சாமிநாதையர் இவ்வாறு பதில் அளித்துவிட்டு வந்திருக்கிறார்.

> "சந்நிதானத்திற்கு என்னிடம் இருக்கும் பேரன்பை நன்றாக உணர்கிறேன். நான் படும் தொல்லைகளை இந்த அளவு தெரிந்து கொண்டவர்கள் மிகக் குறைவு. அச்சகம் இருந்தால் விரைவாக நூல்களை அச்சிடலாம் என்பது உண்மைதான். ஆனால் இன்று புத்தகத்திற்கு வேண்டிய காகிதம், பைண்டுச் சாதனங்கள் ஆகியவற்றை மட்டும் வாங்கித் தருவதற்குத்தான் நான் கவலைப்பட வேண்டியதாக இருக்கிறது. ஓர் அச்சகத்தை வைத்து நடத்த வேண்டிய வேலையும் எனக்கு ஏற்பட்டுவிடுமானால் ஆட்களை வைத்து சம்பளம் கொடுத்து நிர்வாகம் செய்ய வேண்டிய பொறுப்பும் ஏற்பட்டுவிடுமே! அப்படியானால் நூல் ஆராய்ச்சிக்கு நேரம் கிடைக்குமா என்று அஞ்சுகிறேன். சந்நிதானம் சொல்வதை நான் மறுப்பதாக எண்ணக்கூடாது. என்னுடைய வேலை சிரமமின்றி, வேகமாக நடக்க வேண்டுமென்ற திருவுள்ளத்துடன்தான் சந்நிதானம் இப்படி உத்தரவிடுகிறது என்பதை அறிந்து கொண்டுள்ளேன். ஆனால் அச்சகத்தால் உண்டாகின்ற தொல்லைகளைப் பற்றியும் சந்நிதானம் சிந்திக்கவேண்டும். எனக்கு அநுபவத்தில் அது நன்றாகத் தெரியும். வேலைக்காரர்களை வைத்து வேலை வாங்குவது எளிய காரியம் அன்று. ஆகவே இப்போது உள்ளபடியே நடந்துவரச் சந்நிதானம் சம்மதிக்க வேண்டும்" (என் ஆசிரியப்பிரான், ப. 82, 83).

சாமிநாதையர் வாழ்நாளின் இறுதியாக 1941ஆம் ஆண்டு எட்டுத்தொகையில் நான்காவதாகிய பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும் மூன்றாம் பதிப்பைச் சென்னை, லிபர்ட்டி அச்சுக்கூடத்தில் அச்சிட்டிருக்கிறார். அதே ஆண்டு எல்லப்ப நாவலர் இயற்றிய திருவாரூர்க் கோவை, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய திருமாலிருஞ் சோலைமலை, அழகர் கிள்ளைவிடுதூது ஆகிய இரு நூல்களைக் கேஸரி அச்சுக்கூடத்தில் அச்சிட்டிருக்கிறார்.

சாமிநாதையருக்கும் அச்சகத்துக்குமான தொடர்பு 1878ஆம் ஆண்டு தொடங்கி 1941ஆம் ஆண்டு வரையில் இருந்திருக்கிறது. அறுபது ஆண்டுகளுக்கும் மேற்பட்டதாக அமையும் பெரும் காலப்பரப்பில் இருபதுக்கும் மேற்பட்ட அச்சகத்தோடு சாமிநாதையர் தொடர்புற்றிருந்திருக்கிறார். சாமிநாதையர் ஆக்கங்கள் அச்சகவாரியாக அச்சுருவான நூல்களின் விவரங்கள் இங்குத் தரப்படுகின்றன.

### 1. கேஸ(ச)ரி அச்சுக்கூடம் (சென்னை)

1. உதயணன் சரித்திரச்சுருக்கம், இரண்டாம் பதிப்பு, 1926
2. சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும், அரும்பதவுரையும், மூன்றாம் பதிப்பு, 1927
3. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், இரண்டாம் பதிப்பு, 1927
4. பத்துப்பாட்டு - முல்லைப்பாட்டு மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு, 1927
5. திருவாரூர்த் தியாகராசலீலை, இரண்டாம் பதிப்பு, 1928
6. தக்கயாகப்பரணி மூலமும் உரையும், 1930
7. சிலப்பதிகாரம் ஊர்க்காண்காதை, அடைக்கலக்காதை, 1930
8. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள், முதல் பதிப்பு, 1939
9. மணிமேகலை மூலமும் உ. வே. சா. அரும்பதவுரையும், மூன்றாம் பதிப்பு, 1931
10. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், மூன்றாம் பதிப்பு, 1931

11. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது, இரண்டாம் பதிப்பு, 1931
12. பத்துப்பாட்டு மூலம், முதல் பதிப்பு, 1931
13. மதுரைச் சொக்கநாதருலா, முதல் பதிப்பு, 1931
14. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், 1932
15. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது, இரண்டாம் பதிப்பு, 1932
16. ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், முதல் பாகம், முதல் பதிப்பு, 1933
17. ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், இரண்டாம் பாகம், முதல் பதிப்பு, 1934
18. புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், நான்காம் பதிப்பு, 1934
19. விளத்தொட்டிப் புராணம், முதல் பதிப்பு, 1934
20. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், இரண்டாம் பதிப்பு, 1935
21. பெருங்கதை மூலமும் உ.வே.சா. குறிப்புரையும், இரண்டாம் பதிப்பு, 1935
22. பெருங்கதை இலாவாண காண்டம், 1935
23. ஆற்றூர்ப்புராணம், முதல் பதிப்பு, 1935
24. கோபாலகிருஷ்ணபாரதியார், முதல் பதிப்பு, 1936
25. கனம் கிருஷ்ணையர், முதல் பதிப்பு, 1936
26. மகா வைத்தியநாதையர், முதல் பதிப்பு, 1936
27. புதியதும் பழையதும், முதல் பதிப்பு, 1936
28. நான் கண்டதும் கேட்டதும், முதல் பதிப்பு, 1936
29. குறுந்தொகை மூலமும் உ. வே. சா. உரையும், முதல் பதிப்பு, 1937
30. நான் கண்டதும் கேட்டதும், இரண்டாம் பதிப்பு, 1938
31. திருமாலிருஞ்சோலைமலை அழகர் கிள்ளைவிடுதூது, முதல் பதிப்பு, 1938
32. புதியதும் பழையதும், இரண்டாம் பதிப்பு, 1939
33. திருமாலிருஞ்சோலைமலை அழகர் கிள்ளைவிடுதூது, இரண்டாம் பதிப்பு, 1941
34. திருவாரூர்க் கோவை, முதல் பதிப்பு, 1937; இரண்டாம் பதிப்பு, 1941
35. திருக்கழுக்குன்றத்து உலா, 1938
36. நினைவு மஞ்சரி, முதல் தொகுதி, முதல் பதிப்பு, 1940
37. வில்லைப்புராணம், முதல் பதிப்பு, 1940

## 2. கமர்ஷியல் அச்சுக்கூடம் (சென்னை)

1. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், இரண்டாம் பதிப்பு, 1918
2. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், முதல் பதிப்பு, 1918
3. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், இரண்டாம் பதிப்பு, 1919
4. சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும், அரும்பதவுரையும் இரண்டாம் பதிப்பு, 1920
5. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், இரண்டாம் பதிப்பு, 1920
6. மணிமேகலை மூலமும் உ. வே. சா. அரும்பதவுரையும், இரண்டாம் பதிப்பு, 1921
7. சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், மூன்றாம் பதிப்பு, 1922
8. புறநானூறு மூலமும் பழைய உரையும், இரண்டாம் பதிப்பு, 1923
9. திருப்பூவணநாதருலா, இரண்டாம் பதிப்பு, 1923
10. உதயணன் சரித்திரச்சுருக்கம், முதல் பதிப்பு, 1924
11. பெருங்கதை மூலமும் உ. வே.சா. குறிப்புரையும், முதல் பதிப்பு, 1924
12. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும், முதல் பதிப்பு, 1925
13. புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், மூன்றாம் பதிப்பு, 1925
14. திருக்காளத்தி நாதருலா, இரண்டாம் பதிப்பு, 1925
15. தேவையுலா, இரண்டாம் பதிப்பு, 1925
16. பௌத்தமதத்துள் மும்மணிகள் என்று வழங்குகிற புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம், ஐந்தாம் பதிப்பு, 1925; ஆறாம் பதிப்பு, 1926
17. ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, இரண்டாம் பதிப்பு, 1926
18. திருவாவடுதுறைக்கோவை, இரண்டாம் பதிப்பு, 1926
19. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது, முதல் பதிப்பு, 1930
20. திருமயிலைத் திரிபந்தாதி, இரண்டாம் பதிப்பு, 1930

## 3. லா ஜர்னல் அச்சுக்கூடம் (சென்னை) (இதன் அதிபர் கலைமகள் அதிபர் நாராயணசாமி ஐயர்)

1. ஸ்ரீபத்மகிரிநாதர் தென்றல்விடுதூது, முதல் பதிப்பு, 1932
2. பாசவதைப்பரணி, முதல் பதிப்பு, 1933
3. வலிவலமும்மணிக்கோவை, முதல் பதிப்பு, 1934
4. உதயண குமார காவியம் மூலமும் உ. வே. சா. குறிப்புரையும், முதல் பதிப்பு, 1935
5. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும், இரண்டாம் பதிப்பு, 1935
6. புறநானூறு மூலமும் பழைய உரையும், மூன்றாம் பதிப்பு, 1935
7. களக்காட்டுச் சத்தியவாகீசர் இரட்டைமணிமாலை, 1935
8. பழனி இரட்டைமணிமாலை, முதல் பதிப்பு, 1935
9. திருவள்ளுவரும் திருக்குறளும், முதல் பதிப்பு, 1936
10. புறநானூறு மூலம், முதல் பதிப்பு, 1936
11. மான்விடுதூது, முதல் பதிப்பு, 1936
12. திரு இலஞ்சி முருகன் உலா, முதல் பதிப்பு, 1935
13. தமிழ்நெறி விளக்கம் மூலமும் பழைய உரையுடன், முதல் பதிப்பு, 1937
14. திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை, முதல் பதிப்பு, 1938
15. திருமலையாண்டவர் குறவஞ்சி, முதல் பதிப்பு, 1938
16. சிவ சிவ வெண்பா, முதல் பதிப்பு, 1938
17. தென்திருப்பேரை மகர நெடுங்குழைக்காதர் பாமாலை, முதல் பதிப்பு, 1939
18. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, முதல் பதிப்பு, 1940
19. வித்துவான் தியாகராச செட்டியார், முதல் பதிப்பு, 1942
20. திருநீலகண்ட நாயனார் சரித்திரமும் இயற்பகை நாயனார் சரித்திரமும், 1944 (உ.வே.சா. மறைவிற்குப் பின்னர் வெளிவந்தவை)

## 4. வைஜயந்தி அச்சுக்கூடம் (சென்னை, இந்த அச்சுக்கூடம் மவுண்ட் ரோட்டில் இருந்தது)

1. ஐங்குறுநூறு மூலமும் பழையவுரையும், முதல் பதிப்பு, 1903
2. திருவாவடுதுறைக்கோவை, முதல் பதிப்பு, 1903
3. வீரவனப்புராணம், முதல் பதிப்பு, 1903
4. சீகாழிக்கோவை, முதல் பதிப்பு, 1903
5. பத்துப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு மூலமும் உரையும், 1903
6. திருக்காளத்தி நாதருலா, முதல் பதிப்பு, 1904
7. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், முதல் பதிப்பு, 1904
8. ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, முதல் பதிப்பு, 1910
9. புறநானூறு (101 125) மூலமும் பழைய உரையும், 1911
10. திருக்காளத்திப்புராணம், முதல் பதிப்பு, 1912
11. பத்துப்பாட்டு மலைபடுகடாம் மூலமும் உரையும், 1912
12. புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், இரண்டாம் பதிப்பு, 1915
13. நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும், முதல் பதிப்பு, 1918

## 5. வெ. நா. ஜுபிலி அச்சுக்கூடம் (சென்னை) (வெள்ளைய நாடார் ஜுபிலி அச்சுக்கூடம் என்பதே வெ.நா. ஜுபிலி அச்சுக்கூடம் ஆகும்; தவசிமுத்து நாடார் இதன் அதிபர்)

1. சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும், முதல் பதிப்பு, 1892
2. சிலப்பதிகார அரும்பதவுரை, 1892
3. திருப்பெருந்துறைப் புராணம், முதல் பதிப்பு, 1892
4. புறநானூறு மூலமும் பழைய உரையும், முதல் பதிப்பு, 1894
5. புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், முதல் பதிப்பு, 1895
6. மணிமேகலை மூலமும் உ. வே. சா. அரும்பதவுரையும், முதல் பதிப்பு, 1898
7. மணிமேகலைப் பதிப்பைச் சார்ந்த புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம், முதல் பதிப்பு, 1898
8. மணிமேகலைப் பதிப்பைச் சார்ந்த மணிமேகலைக் கதைச் சுருக்கம், முதல் பதிப்பு, 1898

## 6. லிபர்ட்டி அச்சுக்கூடம் (சென்னை)

1. ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம் முதற்பாகம், இரண்டாம் பாகம், இரண்டாம் பதிப்பு, 1938
2. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, இரண்டாம் பதிப்பு, 1939
3. தணிகாசலப் புராணம், 1939
4. திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், மூன்றாம் பதிப்பு, 1940
5. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், மூன்றாம் பதிப்பு, 1941

## 7. தாம்சன் அச்சுக்கூடம் (சென்னை)

1. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், இரண்டாம் பதிப்பு, 1934

## 8. கார்டியன் அச்சுக்கூடம் (சென்னை)

1. திருவள்ளுவரும் திருக்குறளும், முதல் பதிப்பு, 1936
2. நல்லுரைக்கோவை, முதல் பதிப்பு, பாகம் 1. 1937; பாகம் 2. 1937; பாகம் 3. 1938; பாகம் 4. 1939

## 9. திராவிடரத்நாகர அச்சுக்கூடம் (சென்னை) (த. கோவிந்தாசாரியார் இதன் அதிபர்; அச்சுக்கூடம் இருந்த இடம் சூளை, அவதானம் பாப்பையர் வீதி)

1. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது, முதல் பதிப்பு, 1888
2. சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், முதல் பதிப்பு, 1887
3. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், முதல் பதிப்பு, 1889

## 10. ப்ரெஸிடென்ஸி/ பிரஸிடென்ஸி அச்சுக்கூடம் (சென்னை)

1. சூரைமாநகர்ப் புராணம், முதல் பதிப்பு, 1904
2. திருப்பூவணநாதருலா, முதல் பதிப்பு, 1904
3. திருவாரூர்த் தியாகராசலீலை, முதல் பதிப்பு, 1905
4. புறப்பொருள் வெண்பாமாலை (முதல் நான்கு படலங்கள்) மூலமும் உரையும், 1905
5. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், முதல் பதிப்பு, 1906
6. பத்துப்பாட்டு பட்டினப்பாலை மூலமும் உரையும், 1906
7. சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், இரண்டாம் பதிப்பு, 1907
8. தனியூர்ப்புராணம், முதல் பதிப்பு, 1907
9. மண்ணிப்படிக்கரைப் புராணம், முதல் பதிப்பு, 1907
10. சிலப்பதிகாரம் கொலைக்களக் காதை, 1907
11. புறநானூறு மூலமும் உரையும் (200-266 பாடல்கள்), 1907
12. பத்துப்பாட்டு - பொருநராற்றுப்படை மூலமும் உரையும், 1907
13. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், முதல் பதிப்பு, 1908
14. புறப்பொருள் வெண்பாமாலை (வாகை, பாடாண்) மூலமும் உரையும், 1903
15. பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும், 1909
16. புறநானூறு (51 - 100 பாட்டுக்கள்) மூலமும் உரையும், 1909
17. பத்துப்பாட்டு - முல்லைப்பாட்டு மூலமும் உரையும், இரண்டாம் பதிப்பு, 1910
18. திருப்பெருந்துறைப்புராணம், இரண்டாம் பதிப்பு, 1913

## 11. கணேச அச்சுக்கூடம் (சென்னை)

1. ஐங்குறுநூறு மூலமும் பழையவுரையும், இரண்டாம் பதிப்பு, 1920

## 12. ஆனந்தா அச்சுக்கூடம் (Ananda Press) (சென்னை) (பி. மாதவராவ் இதன் அதிபர்)

1. சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், முதல் பதிப்பு, 1929

## 13. ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடம் (சென்னை)

1. ஸ்ரீ மத்தியார்ச்சுன மான்மியம், முதல் பதிப்பு, 1885

## 14. கபீர் அச்சுக்கூடம் (சென்னை)

1. புகையிலைவிடு தூது, 1939
2. நினைவு மஞ்சரி, இரண்டாம் தொகுதி, முதல் பதிப்பு, 1942
3. திருக்கழுக்குன்றக் கோவை, முதல் பதிப்பு, 1943 (உ.வே. சா. மறைவிற்குப் பின்னர் வெளிவந்தது)

## 15. தமிழ்ச்சங்க முத்திராசாலை (மதுரை)

1. தேவையுலா, முதல் பதிப்பு, 1911

2. திருத்தணிகைத் திருவிருத்தம், முதல் பதிப்பு, 1914
3. திருவாரூருலா, முதல் பதிப்பு, 1905, இரண்டாம் பதிப்பு, 1910, மூன்றாம் பதிப்பு, 1925
4. கடம்பர்கோயில் உலா, 1932
5. மதுரை மும்மணிக்கோவை, முதல் பதிப்பு, 1932
6. சங்கர நயினார் கோயில் அந்தாதி, 1934
7. கலைசைக்கோவை, 1935
8. சிராமலைக்கோவை, 1937
9. பழனிப்பிள்ளைத்தமிழ், 1937

**16. சிவநேசன் அச்சியந்திரசாலை (பலவான்குடி)**

1. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, முதல் பதிப்பு, 1933
2. திருமயிலை யமக அந்தாதி, 1936
3. சங்கரநயினார் கோயிற் சங்கரலிங்க உலா, 1933
4. பழமலைக்கோவை, முதல் பதிப்பு, 1935

**17. லார்ட் ரிப்பன் அச்சுக்கூடம் (கும்பகோணம்)**

1. திருமயிலைத் திரிபந்தாதி, 1888

**18. தொண்டை மண்டல அச்சியந்திரசாலை (சென்னை)**

1. திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி, திருவாரூர் பாதி திருவொற்றியூர் வெண்பாவந்தாதி, திருவாரூர் மருந்து வெண்பாமாலை, 1888

**19. எஸ். பி. பிரஸ் (விருதுநகர்)**

1. திருவரங்கச் சிலேடை வெண்பா, முதல் பதிப்பு, 1903

**20. முத்தமிழாகர அச்சுக்கூடம் (திருநெல்வேலி)**

1. சுப்பிரமணிய தேசிக விலாசச் சிறப்பு, 1878

**21. மெமோரியல் அச்சுக்கூடம் (சென்னை) சூளை சோமசுந்தர நாய்கர் இதன் அதிபர்**

1. திருக்குடந்தைப் புராணம், 1883
2. சிலப்பதிகாரம் நாடுகாண்காதை மூலமும் உரையும், 1894
3. சிலப்பதிகாரம் புறஞ்சேரியிறுத்தகாதை, 1897

**22. லாங்மன்ஸ், க்ரீன் அண்டு கம்பெனி (சென்னை)**

1. செய்யுள் வாசகத் திரட்டு, 1937

**23. ஸ்ரீவித்யா அச்சுக்கூடம் (கும்பகோணம்)**


1. பத்துப்பாட்டுப் முல்லைப்பாட்டு மூலமும் உரையும், 1903

**24. திருப்பதி தேவஸ்தான அச்சுக்கூடம் (திருமலை)**

1. செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம், முதல் பாகம் (முதற்பாகம் முதல் ஒன்பது ஸ்கந்தங்கள்)1949 (உ. வே.சா. மறைவிற்குப் பின்னர் வெளிவந்தது)
2. செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம், இரண்டாம் பாகம் (10, 11, 12, ஸ்கந்தங்கள்) 1953 (உ. வே.சா. மறைவிற்குப் பின்னர் வெளிவந்தது)

**துணைநின்ற நூல்கள்**


1. சாமிநாதையர், உ.வே.சா 2008 (ஏழாம் பதிப்பு). என் சரித்திரம். சென்னை: மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்.
2. ஜகந்நாதன், கி.வா. 1983, என் ஆசிரியப்பிரான், சென்னை: மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்.
3. உ.வே. சாமிநாதையரின் ஆக்கங்கள் (1878 1953)

# அஞ்சலி

சிறுகதை, நாவல்,
கட்டுரை, தன்வரலாறு
என பல இலக்கியத்
தளங்களில் முனைப்போடு
செயல்பட்டுவந்த
எழுத்தாளர் கர்ணன்
அவர்களின் மறைவுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்கிறது.